Approved by the Text Book Committee

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஆசார ஒழுக்க முறை.

திருநெல்வேலி - பரமசிவன்பிள்ளை

எழுதியது.

முதற்பதிப்பு—உ௲

…தி பிரசார அச்சியந்திரசாலை,
…வல்லிக்கேணி, சென்னை.
…வ ௵ ஆனி மீ ௨௪௨

…றது] [விலை அணா ஐந்து.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஆசார ஒழுக்க முறை.

திருநெல்வேலி - பரமசிவன்பிள்ளை

எழுதியது.

முதற்பதிப்பு—உ௲

ஸ்ரீநிதிப் பிரசார அச்சியந்திரசாலை.

திருவல்லிக்கேணி, சென்னை.

பிரபவ ௵ ஆனி ௴ ௨௪,௨

பதிப்புரிமை பெற்றது]

[விலை அணா ஐந்து

உள்ளுறை.

	பக்கம்
செய்வன	௧—௰௮
தவிர்வன	௧௯—௨௬
நித்திய கருமானுட்டானம்	௨௭—௩௮
சிவாலய தரிசனம்	௩௯—௪௰
திருமுறைப் பாராயணவிதி	௪௧—௪௬
விவாகம்	௪௭—௫௰

திருச்சிற்றம்பலம்.

சன்மார்க்க சாதனந் தான்ஞான ஞேயமாம்
பின்மார்க்க சாதனம் பேதையர்க் காய்நிற்கும்
துன்மார்க்கம் விட்ட துரியத் துரிசற்றோர்
சன்மார்க்கந் தானவ ருகுஞ்சன் மார்க்கமே.

—திருமந்திரம்.

முகவுரை.

அருகிய அறிவினையுடைய அடியேன் அரிய இந்நூலை அச்சிடும் ஆற்றலை அற்பமாயேனும் அடைந்திலேனாயினும் இத்தகைய காரியத்தை ஆரம்பிக்கும் ஆர்வமானது ஆண்டவனது அருளால் அடியேனது உள்ளத்திலுதித்து இருட்டறையிலிருந்த என்னை ஈர்த்து வெளியே தள்ளிய தென்பதைச் சிறியேனெழுதிய "சிவார்ச்சனைத் திருமந்திரம்" என்னும் சிற்றுரையின் முன்னுரையில் விளக்கியுள்ளேன்.

'புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக் கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய் வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச் செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்த' நாம் முன்னைய பிறவிகளிற் செய்த நல்வினைவயத்தினாலே இவ்வரிய மானுடப் பிறவி வாய்க்கப் பெற்றுளோம். இத்தகைய உன்னதமான பிறவியைப் பெற்ற நாம் இதன் அருமையையும் பெருமையையும் நிலையாமையையும் சிந்தியாது அவமே காலத்தைக் கழிப்போமாகில் இப்பிறவியைப் பெற்றதனாலாம் பயனை அடை-

யாதவர்களாய் வாளா இறப்போம். இறந்தபின் எப்பிற விளைப் பெறுவோமென்பதை அறிகிலம். ஆதலால் இம்மானுடதேகம் இந்நன்னிலையிலிருக்கும் இத்தருணத்திலேயே தலைப்படுமொருவர் தாமுா *துஞற்றத் தகுவதொன்றுண்டு. அதியாதெனில்: அகிலலோகத்திலுமுள்ள ஆருயிரனைத்திலும் அழியா அன்பினை ** அனவரதம் அளித்து அன்பினுருவாய அரனது அருளை அவலம்பித்து இன்ப நிலையெய்தி ஈடேற்றமடைந்து உள்ளங்கசிந்து ஊட்டங்குறைத்து எம்பெருமானை ஏத்தித்தொழுது ஐம்புலனடக்கி ஒப்புரவொழுகி ஓதுந்தகையன ஓதுமாறோதி ஓதியாங்கொழுகி ஔபாசனமியற்றிக் கதிப்பேறதனையே காதல் செய்து கிடைத்தது கொண்டு †கீணர்க்குதவிக் குற்றங்கடிந்து கூத்தன்றனது ‡கெழுவியவடிகளாம் $ கேடிலுவகையைக் கைப்பற்றிநிற்றலேயாம்.

“ ஒழுக்கம் விழுப்பந் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும் ” என்னும் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் திருவாக்குக் கிணங்க, மேற்கூறிய கேடிலுவகையாகிய விழுப்பேற்றினை அடைய விரும்பும் ஒருவருக்குச் சாதனமாயுள்ளது ஒழுக்கமும் அவ்வொழுக்கமாகிய உயிரினுக்கு ஓர் உடம்பாயிருந்து அதனைத் தாங்கிக்கொண்டிருப்பது § ஆசாரமுமாம். ஆகவே இம்மானுடப் பிறவியைப் பெற்றதனுலாம் பயனையடைய விரும்புமொருவருக்கு ஆசாரமும் ஒழுக்கமும் இன்றியமையாதன வென்பது தெற்றென விளங்கும். இவ்வாசார வொழுக்க முறைகளை முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொரு

---

*உஞற்றல்-முயலல்

** அனவரதம்-எப்பொழுதும், † கீணர்-எளியவர்.

‡ கெழுவிய-பிரகாசமுள்ள. $ கேடிலுவகை-மோட்சம்.

§ ஆசாரம்-சுத்தம்.

ளாகிய முக்கண்ணப்பரது திருவாணையால் பூர்வத்தில் பல தொல்லை மூதாளர் பல பெருநூல்களின் வாயிலாக மாரி போற் கைம்மாறு வேண்டா கடப்பாட்டால் உலகின் கணுள்ள உயிர்களனைத்தும் உலப்பிலின்பமெய்தி உய்வ தனை உன்னஞ்செய்து உதவினர். பின்னர், பல சைவத் திருவாளர்கள் கல்வியறி வொழுக்கங்களையும் சமயவுணர்ச் சியையும் வளர்த்தற்கென்று பலவிடங்களில் பல மடங் களைக் கட்டுவித்து அவைகளில் மேற்கூறிய அரிய பெரிய நூல்களை வைத்துப் பூசை செய்தற்பொருட்டும் அவை களைப் படிப்பவர்களுக்கும் படிப்பிப்பவர்களுக்கும் உடை யுணவுகளை உதவுதற்பொருட்டும் தக்க நிதிகளையும் வைத்து, அத்தர்மங்களை ஒழுங்காய் நடத்த யோக்கிய ரான ஆசாரியரையும் தீரத்துறந்த துறவிகளினின்றுந் தேர்ந்தெடுத்து அம்மடங்களுக்கு அதிபதிகளாக நியமித் தனர். அவ்வாசாரிய மூர்த்திகள் அம்மடங்களிலிருந்து தங்களுடைய நித்தியகருமானுட்டானம் நிட்டை முதலிய வைகளை ஒழுங்காகச் செய்துகொண்டு, அவ்வருநூல் களைப் பூசித்தும் ஓதியும், அவைகளைத் தம்மையடைந்த நன்மாணுக்கர்களுக்கு மட்டுமேயன்றித் தம்மையண்டிய பணியாளர் முதலியோருக்கும் மற்றைச்சனங்களுக்கும் உபதேசித்தும் வந்தனர். பின்னர், நாட்செல்லச் செல்ல அம்மடாதிபதிகளிற் பெரும்பான்மையோர் தகவிலாரிணக் கத்தினால் தங்களது தகைமையினின்றுந் தவறித் தங்க ளுக்கேற்பட்ட தருமப்பணிகளைத் தக்கமுறையிற் செய் யும் ஆற்றலையிழந்து, செய்தக்க செய்யாமை செய்தக்க அல்லவை செய்தல் என்னும் இருதிறக் குற்றத்தின் பாற் பட்டவராகிப் பல பெருங்கேடுகளுக்குக் காரணராயினர். நம்மவரில் கல்வியினும் செல்வத்திலும் மேம்பட்டுள்ள

கனதனவான்கள் * பொச்சாப்பு என்னும் முதலேவாய்ப் பட்டு மயங்கி மேற்கூறிய சீர்கேடுகளினால் தாங்கள் பீடிக் கப்படுவதையும் அச்சீர்கேடுகளைத்திருத்துவது தங்களுக்கே யுரியதோர் தலையாயகடனென்பதையும் தாங்கள் அவ்வாறு செய்யாதொழிதலால் தாங்களடைந்த கல்வி செல்வங்களி னாலாய பயனையிழந்து சிவாபராதிகளாக விருப்பதையும் ஒரு சிறிதும் உணராதவர்களாகி வாளா உறங்குகின்றனர். அன்னவரிற் பலர் அம்மடங்களுக்குத் தங்கள் பன்னிய ருடனே பன்முறைசென்று பண்டாரச் சன்னிதிகளுக்குப் பாதகாணிக்கை செலுத்தி அவர்களது பாவமூட்டைகளிற் பங்குவாங்கினாற் போலப் பட்டாடை † பணிமுதலிய பரி சுகளைப் பெறுகின்றனர்.

[இவ்வாறு மடாதிபதிகள் மயக்க முற்றுத் தங்கள் கடமையைச் செய்யாதொழிந்ததும் கனதனவான்கள் சோர்வுற்றுறங்குவதும் நம்மனோரது தவக்குறையின் காரிய மென்றே சிந்தித்துத் துக்கித்து அன்னோர் முறை யே தம்மயக்கத்தினின்றும் உறக்கத்தினின்றும் நீங்கி, நழுவவிட்ட பணிகளைக் கைப்பற்றி, நம்மையும் நம்மக்களை யும் உய்விக்குமாறு எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த் திப்போமாக]

இவ்விதமாகக் கல்வியென்னுங் கழிபெருங்கடலிற் ‡ காழகமென்ன ஆழ்ந்து கிடக்கும் சாத்திர நூல்களாம் மாத்திரமணிகளும் தோத்திர நூல்களாம் பாத்திரத் § துவர்

* பொச்சாப்பு-உருவும் திருவும் ஆற்றலும் முதலாயவற்றான் மகிழ்ந்து தற்காத்தலினும் பகையழித்தன் முதலிய காரியங்களி னும் சோர்தலைச் செய்தல்.

† பணி-ஆபரணம்.

‡ காழகம்-அமுதம். § துவர்-பவளம்.

களும் ஞானநூல்களாம் மாணமுத்தங்களும் செல்வந்தர்களாகிய மாலுமிகளது உறக்கத்தினாலும் கல்விமான்களாகிய சிலாபம் வல்லோரது அயர்த்தலினாலும் உலகத்தவரில் மிகச் சிலருக்கேயன்றி என்போலியர் பெரும்பான்மையர்க்குப் பயன்படாமலிருக்கின்றன வென்பதை நினைந்து, கடற்கரையில் ஒதுக்குண்டுகிடக்கும் மணிகளுட்சிலவற்றை ஒரு சிறுவன் எடுத்துத் தன் தோழருக்கும் தன் இளையருக்கும் உதவித் தானும் அவர்களுடன் கூடிவிளையாடி இன்புற்றாற்போல, வயதினால் முதிர்ந்திருப்பினும் அறிவினாற் சிறியேனாகிய யான் மேற்கூறிய பெருநூல்களில் என் சிற்றறிவிற்கு எளிதில் எட்டிய சிற்சில சிறிய விடயங்களைப் பொறுக்கியெடுத்துத் தொகுத்து என்போன்ற சிற்றறிவினரும் என்னிற்சிறிய மாணவச்சிறாரும் எளிதிற் படித்து இன்புற்று அதனால் அப்பெருநூல்களின் பெருமையையும் அவற்றைக் கற்பதனாலாம் பயனையும்பற்றிய மெய்யுணர்ச்சியினைப் பெற்று ஈடேறவேண்டுமென்ற அவாவினால் தூண்டப்பட்டு இச்சிறு புத்தகத்தை எழுதி வெளியிடலானேன்.

இப்புத்தகத்தைக் கண்ணுறும் ஒவ்வொருவரையும் வேண்டிக்கொள்வது யாதெனில்: இதிற் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு விடயத்தையும் ஆய்ந்துணர்ந்து தீயவை விலக்கி நல்லவை போற்றி நல்லாற்றில் நின்றொழுகப் பழகித் தாங்கள் உணர்ந்த உண்மைகளைத் தங்கள் குடும்பத்தவர்களுக்கும் பந்து மித்திரர்களுக்கும் தங்களையடைந்த ஏனையோருக்கும் போதித்து அவர்களையும் நல்லாற்றிற் செலுத்த முயலவேண்டும் என்பதேயாம். வைதிகர்கள் தாங்கள் வசிக்குமிடங்களில் சைவ வைணவ சித்தாந்தக் கழகங்களாவது தமிழ் வேதாகம பாடசாலைகளாவது ஏற்பட்டிருப்

பின் அவைகளில் தாங்கள் சேர்ந்தும் தங்கள் பந்துமித்திரர் களைச் சேர்ப்பித்தும், அத்தகைய கழகங்களாவது பாட சாலைகளாவது இல்லாதவிடங்களில் அவைகளைப்புதுவதாய் ஏற்படுத்தியும் அந்நிலையங்களில் கலைவல்லோரில் தக்கோ ரை வழிபட்டுநின்று சைவவைணவ சாத்திரங்களையும் தேவாரம் திருவாசகம் திருவாய்மொழி முதலிய நூல்களை யும் இயன்றவரையிற் பொருளுணர்ந்தோதவும் ஓதியாங்கு ஒழுகமுயலவும் வேண்டும்.

இப்பணியைச் செவ்வனே நிகழ்த்தும் ஆற்றல் தமி யேனிடத்தின்மையை நோக்கி மூதறிஞர் இகழாமையை வேண்டுகின்றேன். அன்றியும் இத்தகைய புத்தகங்களிற் சேர்த்தற்குரிய அரிய பெரிய விடயங்களை அன்னார் அடி யேனுக்கு அறிவிப்பார்களாயின் அவை அடுத்த பதிப்பிற் சேர்த்து அச்சிடப்படும்.

இந்நூலிற் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு விடயமும் பெரியோரால் வகுக்கப்பட்ட அரியநூல்களின் சார்பேயாகு மென்பது இதில் இடையிடையே குறிக்கப்பட்டுள்ள பிர மாணங்களால் விளங்கும். அன்றி, எனது மனத்தோற்றத் தின் சார்பாய் ஒரு சிறிதும் கூறினேனில்லை என்பதையும் இங்கு விண்ணப்பித்துக்கொள்கின்றேன்.

இனி, அடுத்த முறையாக, அடியேன் சிவார்ச்சனைத் திருமந்திரத்தின் முகவுரையிற் கூறியபடி பன்னிருதிரு முறைகளினின்றும் ஆய்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆயிரத்தெட் டுத் திருப்பாசுரங்களினின்றும் பொறுக்கப்பட்ட நூற்றறு பத்தெட்டுத் திருப்பாசுரங்கள் ஆண்டவனருளால் ஒரு சிறு திருமுறைத்திரட்டாகக் குறிப்புரையுடன்வெளிவரும்.

மெய்கண்டான் யாண்டு ௭௱௪
ஆனி மதி ௨௪-ம் நாள்

அடியார்தம் அடியார்க் கடிமை,
திருநெல்வேலி - பரமசிவன்.

சிவமயம்.

அணிந்துரை.

சிதம்பரம் ஸ்ரீ மீனாட்சி தமிழ்க்கலாசாலைத் தலைமையாசிரியர்
பிரம்மஸ்ரீ மஹாமஹோபாத்தியாய
வே. சாமிநாதையரவர்கள் எழுதியது.

இந்நூலிற் சில பகுதிகளைப் படித்துப் பார்த்தேன். சைவர்கள் தினந்தோறும் நடந்துகொள்ள வேண்டிய முறையை இது நன்றாகத் தெரிவிக்கின்றது. புண்ணியம், பாவம், ஜீவகாருண்ணியம், தேகாரோக்கியம், சுகாதாரம், ஆலயவழிபாடு, விரதானுஷ்டான முதலியவைகள் தக்க ஆதாரத்துடன் விளங்குவதுடன் பாராயணத்துக்குரிய நூல்கள் இன்னவை யென்பதும் இதனாற் புலப்படுகின்றன. அங்கங்கே தேவாரம், திருமந்திரம், திருக்குறள் முதலிய நூல்களிலிருந்து மேற்கோள் காட்டியிருப்பது மிகவும் பொருத்தமாக இருக்கிறது. பலநூல்களைப் படித்து அறிதற்குரிய விஷயங்கள் இதில் ஒருங்கே சுருக்கமாக அமைந்திருத்தலால் சைவசமயிகள் இதைப்படித்து ஆதரிப்பார்களென்று எண்ணுகிறேன்.

இக்காலத்துக்கு இப்புத்தகம் இன்றியமையாததென்று நான் எழுதுவது மிகை.

திருக்குறள் விளக்க ஆசிரியர்
திருவாளர் கி. குப்புசாமி முதலியாரவர்கள்
எழுதியது.

எனது நண்பர் சைவத்திருவாளர் பரமசிவம் பிள்ளை அவர்கள் தொகுத்து எழுதிய 'ஆசார ஒழுக்க முறை', என்னும் நூலைப்பார்த்தேன். இந்நூல் செய்வன, தவிர்வன, நித்தியகர்மானுஷ்டானம், சிவாலய தரிசனம், திருமுறைப் பாராயணவிதி, விவாகம் என்னும் ஆறு பங்குகளாகத் தொகுக்கப்பட்டுள்ளது. இந்நூல் பெரும்பான்மையும் திருமுறைகளையே மேற்கோள்களாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளதாதலால் ஆன்றோர் சென்றவழியை எடுத்துக்காட்டும் நூல் என்பதில் யாதொரையமுமில்லை. ஆயினும் உலக அறிவினையே கொண்டு எவ்விதமேனும் உடலினையோம்பி உயிர் வாழ்ந்து வாளா கழிந்துபோகின்ற மக்களுக்கு இது பெரிதும் பயன்படுமோ என்று எண்ணக்கிடக்கினும் எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணும் அந்தணத்தன்மை பூண்ட அறவோராகிய மக்களுக்கோ பெரிதும் பயன்பட்டு இம்மை, மறுமை, வீடு என்கின்ற மூன்றையுந் தரும் என்பது ஒருதலையாகும்.

திருக்குறள் தெளிபொருள் விளக்க வுரையாசிரியர்
ஆசிரியர் - கோ. வடிவேலு செட்டியாரவர்கள்
எழுதியது.

அன்பார்ந்த ஐயா!

தாங்கள் அன்பு கூர்ந்தனுப்பிய 'ஆசார வொழுக்க முறை' என்னும் புத்தகத்தை முற்றிலும் ஒருமுறை கவ

னித்துப் படித்துப்பார்த்தேன். தாங்கள் இப்புத்தகத்தை அநேக நூல்களை ஆராய்ச்சிசெய்து எழுதி யிருக்கிறீர்கள். இப்புத்தகம் மாணவர்களுக்கு மிகப்பெரிதும் உபயோக முடையதாம். இப்புத்தகத்தால் யானும் பல அரிய பெரிய விடயங்களைத் தெரிந்துகொண்டேன்.

இப்புத்தகத்தைக் கவனமாக ஊன்றிப்படிப்பவர் நமது புராதனவைதிக ஆசாரங்களை மேற்கொண்டு ஒழுகு தற்குரியவராவர் என்பதில் யாதொரு ஆசங்கையுமின்றும். மேற்குநாட்டு ஆசாரங்களில் தக்கது இன்னது தகாதது இன்னது என்பதுணராது அநாகரீகநடைக்கு அடிமையா யிருப்பவரைத் திருத்துவதற்கு இப்புத்தகம் சிறந்ததோர் கருவியாகும் என்பதற்கும் ஆசைங்கையின்றும்.

நமது புராதன வைதிக ஆசாரங்களைப் பாதுகாக்க விரும்பும் ஒவ்வொருவரும் இப்புத்தகத்தை எங்கும் பரவு மாறு செய்யவேண்டு மென்பது எனது பூரண அபிப்பிரா யமாம்.

தாங்கள் இப்புத்கத்தை மிகச்சிரமப்பட்டு எழுதி வெளியிட்டதைப்பற்றி நான் தங்களுக்கு மனமார்ந்தநன்றி செலுத்துகிறேன். இங்ஙனம் தங்கள வாயிலாகப் பலநூல் கள் வெளிவர எல்லாம்வல்ல இறைவன் அனுக்கிரகம் செய்யவேண்டுமென்பது எனது பிரார்த்தனையாம்.

சென்னை ஸ்ரீசைவசமய பக்தஜனசபைத்தலைவர் திருவாளர் க. சதாசிவ செட்டியாரவர்கள் (பி. ஏ.) எழுதியது.

திருவாளர் தி. சா. பரமசிவம்பிள்ளை அவர்களுக்கு பலவணக்கம். இருபாலும் சுபம். அறிய விரும்புவதும் அதுவே. தாங்கள் மிக்க அன்புடன் வாவிடுத்த 'ஆசார ஒழுக்க

முறை' என்னு நூலை முற்றிலும் நன்கு படித்துப் பார்த்தேன். பார்த்ததில் அது பல நாள் பல அரிய பெரிய நூல்களைக்கற்று அவற்றின் வழி யொழுகிய அநுபவங்கொண்டு எழுதியதாக விளங்குகின்றது. அது அன்றியும் முன்னூல்களிற் பகுத்தவாறுபோலச் 'செய்வன' 'தவிர்வன' என விதிவிலக்குகளை எடுத்துக் காட்டிப் போதிப்பதாயும், அவ்வாறு செய்வனவற்றுட் சிறந்தனவாய நித்தியகர்மானுட்டான விதிகளையும், சிவாலய சேவையையும் திருமுறைப் பாராயணத்தையும் விவாகத்தையும் விதந்தெடுத்து ஓதுவதாயும் உள்ளதென்பதைக் கண்டு மிக மகிழ்ந்தேன். இன்னும் அதிற் காட்டிய பிரமாணங்கள் யாவும் பெரும்பாலும் திருமுறைகளிலும் சாத்திரங்களிலும் திரட்டிக் காட்டப் பட்டிருக்கின்றன வென்பதை நோக்க முன்னடைந்த மகிழ்ச்சி இன்னும் மேன்மேலும் பெருகுவதாகின்றது. காலக்கொடுமையானும், அந்நிய தேச பாஷை மதவாதிகளோடு பெரிதும் பழக்க முண்மையானும், சிறிதும் தங்களுண்மைநூல் பழக்க மின்மையானும், அப்பழக்க முள்ளாரோடு சேர்க்கையின்மையானும், உண்டெனினும் அவரை யெள்ளியிகழும் தவறிய அறிவொழுக்கங்களானும் நன்னிலை குன்றிய இக்காலத்து இத்தகைய நூலொன்று எளிதின் வாசித்துப் பயனடையுமாறு தாங்கள் இயற்றியுபகரித்த உபகாரம் இனைத்தெனக் கூறற்பாற்றன்று. இந்நூல் மிகவும் ஆதரிக்கப்பட்டு நின்று நிலவு மாறு எல்லாம் வல்ல இறைவன் இணையடிகளைப் போற்றி நிற்பேன். வேணும் வணக்கம்.

திருச்சிற்றம்பலம்

ஆசார ஒழுக்க முறை

மெய்ம்மையா முழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாங் களையை வாங்கிப் பொறையெனு(ம்) நீரைப் பாய்ச்சித்
தம்மையே நோக்கிக் கண்டு தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையு ணிற்ப ராகிற் சிவகதி விளையு மன்றே [திருநேரிசை]

செய்வன

க. பெண்டிர் மக்கள் உறவினர் முதலியோரிடத்துப் பிரிய முடைமை. [இஃது அன்பு எனப்படும்]

உ. தொடர்பு பற்ருது எல்லா உயிர்களிடத்தும் கருணை யுடைமை. [இஃது அருள் எனப்படும்]

[நம்முள் ஒவ்வொருவரும் கடவுளது அருளைப்பெற விரும்புகிறோம். இது எல்லோரும் அறிந்ததேயாம். அவ்வருளைக் கடவுளிடத்திலேயே நேரிற்பெறுவது அசாத்தியம் என்பதும் எல்லோருக்கும் நன்ருய்த் தெரிந்ததேயாம். ஆயின் அவ்வருளை எவ்வாறு பெறுவது?—அக்கடவுளது மக்களும் நமது சகோதரவர்க்கங்களும் ஆகிய இவ்வுலகின்கண்ணுள்ள எல்லா ஆன்மாக்களிடத்தும் உண்மையான அன்பைப் பாராட்டுவதினுலேயாம். ஆகவே, நாம் மேற்கூறிய நமது சகோதரவர்க்கங்களிடம் செலுத்தும் அன்பின் அளவுக்குத் தக்கபடியே கடவுளது அருள் நம்மிடம் படியுமென்று ஊகிக்கின்ருேம். இதுபற்றியே தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாய

ஞர் 'அருள் எனும் அன்பு ஈன் குழவி' என்றார். இவ்வாறு சகல சீவர்களிடத்தும் நாம் பாராட்டும் அன்பே பிறவி யென்னும் பெருங்கடலுள் அமிழ்ந்து கிடக்கும் நம்மை இறைவனது திருவடியாகிய முத்தித் தடங்கரையை அடைவிக்கின்ற ஓர் ஒப்புயர்வற்ற புணையாகும் என்பதை நாம் அறிகிறோம். அறிந்தும் அவ்வன்பை அநுட்டானத்துக்குக் கொண்டுவரத் தகுந்த சந்தர்ப்பம் ஏற்படும்போது நம்முள் பெரும்பான்மையோர் அநியாயமாய்த் தவறிவிடுகிறார்கள்.

உதாரணமாக:—நாம் நடக்கும்போதாவது, உட்கார்ந்திருக்கும்போதாவது, சயனித்திருக்கும்போதாவது நம்மால் இடரடைந்து வருந்திய ஓர் எறும்பாவது மூட்டைப்பூச்சியாவது கொசுகாவது நம்முடம்பைச் சிறிது கடித்து நமக்கு மிகவும் இலேசான துன்பத்தை விளைக்கின்றது. அப்போது அந்தப்பிராணி நம்மால் அன்பு பாராட்டப்பட வேண்டிய சகோதரவர்க்கங்களுள் ஒன்று என்ற உணர்ச்சி ஏற்கெனவே நம்மிடத்திருந்தும் அச்சமயத்தில் அவ்வுணர்ச்சியை இழந்து நமக்கு மிகச்சிறிய அபராதத்தைச்செய்த அந்தச் செந்துவுக்கு மிகக்கொடிய மரணதண்டனையைச் செய்து அதனால் அதற்கும் நமக்கும் பொதுவான தந்தையாகிற சருவேசுவரனுடைய கோபத்துக்கும் தண்டனைக்கும் இலக்காகிறோம். ஆதலின் ஈசுரசிருட்டி வர்க்கங்களில் யாதொன்றுக்கும் யாதொரு காரணத்தினாலும் யாதொரு தீங்கினையும் விளைவியாது அதனிடத்து அன்புசெலுத்துபவர்களே ஈசுவரனது அருளைப்பெறுதற்கு உரியவராவர். அன்னவரே சைவசித்தாந்திகளாவர். சைவம் சிவசம்பந்தமாகலானும் 'அன்பே சிவம்' என்பது நந்திதேவர் திருவருள்பெற்று வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிய திருமூலதேவரது கட்டளையாகலானும், அன்பின் வழிநின்று ஒழுகுபவரே சைவர்

என்றழைக்கப்படும் தகுதியையுடையவர் என்பது பெறப்படும். புலால் உண்ணாதவரைச் சைவரென்றும் அஃதுண்பவரை அசைவரென்றும் அழைப்பது ஒரு தொல்வழக்காதல் இவண் உணரற்பாற்று.]

௩. முன்பழக்கம் பற்றியேனும் அஃதன்றியேனும் வந்த அதிதி(பரதேசி)களாகிய விருந்தினரை அன்னம், ஆடை, அவுடதம் முதலியன உதவி உபசரித்தல்.

[இது சாதாரணமாய் என்றும் செய்யற்பாலதேயெனினும் முக்கியமாய் விவாகம், சிராத்தம், திருவிழா, ஆசாரியர் திருநாள் முதலிய நாட்களில் அவசியமாய்ச் செய்யத்தக்கதாம். இவ்வாறு அதிதிகளை ஆதரித்தல் அன்பின்வழி நின்றாரது இயல்பாகும். அதிதிகளேயன்றி ஏனைய உறவினரும் நட்பினரும் விருந்தினராகார் என்றும், அவர்கட்குச் செய்யப்படும் உபசாரம் விருந்தாகாது என்றும் அறிக.]

௪. யாவரிடத்தும் முகங்காட்டி இனிமையாய்ப்பேசுதல். ['யாவரிடத்தும்' என்றதனால் தம்மை வைதவரிடத்தும் இனிய சொற்களையே பேசவேண்டும் என்பது பெறப்படும். இதுவும் அன்பின்வழி நின்றாரது இயல்பாகும் என்றறிக.]

௫. பகைவர், அயலார், நண்பர் என்னும் மூன்று திறத்தாரிடத்தும் அறத்தின் வழுவாது ஒப்பநிற்றல்.

[இஃது அருளுடையாரது இயல்பாகும் என்றறிக.]

௬. மன வாக்குக் காயங்கள் தீயவழியிற் செல்லாது அடக்குதல்.

௭. காரணம் பற்றியாவது அறியாமையாலாவது ஒருவன் செய்த தீங்கினுக்காக அவனைப் பகைத்துத் தீங்கிழையாதிருத்தல்.

[ஒருவன் மற்றொருவு மனிதனாலாவது பிராணியினாலாவது இடரடையும்போது அவ்விடர் தான் முன்செய்ததோர் தீச்செயலின் பயனை ஊட்டித் தொலைப்பான் திருவுள்ளங் கொண்ட ஈசுவரனது மறக்கருணையின் செயலென உணர்ந்து அவ்விடர் செய்தாரைப் போற்றி விடுத்தல் அறிவுடையார் செய்கையாகும்.

இன்ப மிடரென விரண்டுற வைத்தது
முன்பவர் செய்கையி னாலே முடிந்தது
இன்ப மதுகண்டு மீகிலாப் பேதைகள்
அன்பிலார் சிந்தை யறமறி யாரே

—திருமந்திரம்]

அ. பாவச் செய்கைகளைச் செய்தற்கு அஞ்சுதல்.

கூ. உலக நடையினை அறிந்து நடத்தல்.

ய. வறியார்க்கே ஈதல்.

[அற்றுநின் றூருண்ணு மூணே யறனென்னும்
கற்றன போதங் கமழ்பவர் மானிடர்
உற்றுநின் றூங்கொரு கூவற் குளத்தினில்
பற்றிவந் துண்ணும் பயனறி யாரே - (திருமந்திரம்.)

வறியார்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து - திருக்குறள்.]

கக. மெய்மை யுரைத்தல்.

[மெய்மையாவது பிறிதோருயிருக்குத் தீங்கு சிறிதும் பயவாதசொல். இதனால் அச்சொல் தீயபயப்பிற் பொய்மையாமென்பதும் பொய்மையுந் நன்மை பயக்குமாயின் மெய்மையாமென்பதும் பெறப்படும்.

" வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
" தீமை யிலாத சொலல்"

"பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
"நன்மை பயக்கு மெனின்." —திருக்குறள்.]

௧௨. கிளைஞரை(உறவினரை)த் தழுவுதல்.

௧௩. செய்யுந் தொழிலில் ஊக்கமும் இடைவிடாத மெய்ம் முயற்சியும் கொள்ளல்.

௧௪. செய்யுங் காரியங்கள் பொருள் பயத்தல் மட்டுமேயன்றி அறமும் (புண்ணியமும்) புகழும் பயப்பனவாதல்.

௧௫. நட்பிற்குரியாரைத் தேர்ந்து நட்புக்கொண்டு பின் அவர் பிழைத்தன பொறுத்தல்.

௧௬. உண்ணத் தகாதவற்றை நீக்கித் தகுமவற்றைப் பசித்த போது அளவறிந்து உண்ணல்.

௧௭. அரசன், உபாத்தியாயன், தேசிகன், தகப்பன், அண்ணன் ஆகிய ஐங்குரவரைத் தேவரைப் போலத் தொழுது அவரது நல்லாணைவழி நிற்றல்; அவர்களைக் கண்டபோது எழுந்து நின்று வணங்கல்; அவர்களை வழியிற் சந்திப்பின் வணங்கி வலங்கொண்டு செல்லு தல்.

[நன்மரபைச் சேர்ந்து எல்லா உயிர்க்கும் செந்தண்மை பூண்டு நிலையினும் ஒழுக்கத்தினும் தவறாத அந்தணரும், ஒழுக்கத்தின் முதிர்ந்த பெரியோரும், தாய், பெரியப்பன், சிற்றப்பன், பெரியன்னை, சிற்றன்னை, மாமன், மாமி முதலியோரும் குரவர்போல மதிக்கத் தக்கவராவர்.]

௧௮. வெளியேபுறப்படும்போதாவது வழிநடக்கும்போதாவது ஒருவர் தும்மின் அல்லது வேறேதாவது அபசகுனம் சம்பவிக்கின் பெரியாரது தோத்திரப்பாக்களை ஓதிக்கொண்டு செல்க. [திருஞானசம்பந்தமூர்த்தி

நாயனார் அருளிச்செய்த கோளறுபதிகத்தை ஓதுதல் மிகநலம்].

கசு. முன்செல்லும் ஒருவரிடம் யாதாமொன்றைச் சொல்லக்கருதின், அவரைத் துரிதமாய்ச் சென்றணுகிப் பக்கத்தில் நின்று சொல்லுக. அவ்வாறு சொல்லுவதை அவரது செவ்வி (சமயம்) அறிந்து காலத்திற்கேற்பச் சுருக்கிச் சொல்லவேண்டும். பெரியோரிடத்தாயின் வணங்கிநின்று வாய்பொத்தி உரைக்கவேண்டும். (வழிச்செல்வோரைக் கைதட்டிக் கூவி அழைத்தலும் நில்லுமெனலும் கூடா)

உ0. தன்னிருப்பிடத்திற்குப் பெரியோர் வரின் இருக்கைவிட்டெழுந்து வணங்கி அவரைத் தகுந்த ஒரு பீடத்திருத்திப் பின் அவர் ஏவத் தான் உட்காரவேண்டும். அவர் கொடுப்பதொன்றை எழுந்துநின்று வணக்கத்துடன் இரண்டு கைகளாலும் பெற்றுச் சிரசிலும் கண்களிலும் ஏற்றி அவரை வந்தனஞ்செய்து உட்காரவேண்டும். அவர்க்குக் கொடுப்பதொன்றையும் அம்முறையிலேயே கொடுத்தல் வேண்டும். அவர் போகும்போது எழுந்து தலைவாய்தல்வரை பின்சென்று வணங்கி வழியனுப்ப வேண்டும்.

உக. நடை உடை பாவனைகள் முறையே கல்விக்கும் நிலைமைக்கும் ஆண்மைக்கும் தக்கனவாயிருத்தல்.

உஉ. ஸ்நானஞ்செய்யாமலும் அழுக்கு வஸ்திரந் தரித்துக்கொண்டும் அசுசியாயிருப்போரையும் புலையர(புலாலுண்போ)ரையும் தூரஸ்திரீகளையும் தீண்டின் ஸ்நானஞ்செய்தல்.

உ௩. பிரதிதினமும் வைகறையில் (விடியற்காலத்தில்) எழுந்து அவசரக்கடன்களை முடித்துச் சுத்தநீரில் ஸ்நாநஞ் செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரந் தரித்தல்.

[ஸ்நாநமுறையின் விவரத்தை நித்திய கருமானுட்டான முறையிற் காண்க].

உ௪. சௌளம் - பாலகரும் விருத்தரும் மாதத்தில் ஒரு முறையும் ஏனையோர் மாதத்தில் இருமுறையும் அடியிற் குறிப்பிட்டிருக்குந் திதி வார நக்ஷத்திரங்களைக் கூடிய வரையில் நீக்கி எஞ்சியநாட்களில் பொருந்திய ஒரு தினத்திற் செய்யற்பாலது. அவ்விதம் எஞ்சியநாட்களில் திங்கட்கிழமையேனும் புதன்கிழமையேனும் அமையின் உத்தமம்,

சௌளத்திற்கு ஆகாத நாட்கள்

திதி - பிரதமை, சதுர்த்தி, சஷ்டி, அட்டமி, நவமி, ஏகாதசி, சதுர்த்தசி, அமாவாசை, பௌர்ணிமை.

வாரம் - ஆதித்தவாரம், மங்களவாரம், சனிவாரம், சன்மவாரம்.

நட்சத்திரம்—கார்த்திகை, உரோகிணி, மகம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, சன்ம நட்சத்திரம்.

விசேடதினம்— மாசப்பிறப்பு, விரதநாள், சிராத்ததினம்.

காலம்—மனைவி கர்ப்பிணியாயுள்ள காலம், சந்தியாகாலம், பிதிர்புண்ணிய காலம் (கஅ முதல் உச நாழிகை வரை) இராத்திரி, போசனஞ் செய்தபின், வியாதியான காலம்.

[பிரமசாரி கிரகத்தன் வானப்பிரத்தன் என்னும் முதன் மூன்று ஆசிரமத்தரும் குடுமி வைத்து மீசை அடித்துக்கொள்ளுதலும் சந்நியாசிகள் சடைவளர்த்தலும் முண்டிதஞ்செய்

தலும் பூர்வத்திற் பெரியோரால் நியமிக்கப்பட்டுத் தொன்று தொட்டு அனுசரிக்கப்பட்டு வரும் ஆசாரங்களாம். இவைகட்கு மாறுகக் காரணமின்றிப் பிறதேச வழக்கங்களைக் கொண்டு மனம்போன போக்கில் வேஷம் போடுதல் நல்லறிவுடைய பெரியோரால் வெறுக்கத்தக்கதாம். அவ்வநாகரிகச் செய்கைகள், நமது வருணுசிரம தருமத்தையும் ஆசாரவொழுக்கங்களையும் புராதன நாகரிகத்தையும் சிறிது சிறிதாகச் சிதைத்து நமது குலத்தைக் கெடுக்க வந்ததோர் கோடரிக்காம்பாக நிலவுதலை நம்மவரிற் பெரும்பாலார் அறிந்தும் அறியாதவராய் அயர்கின்றனர். அன்னுரை அறிவுறுத்தல் அறிஞர்க்கு அறனென்றோ? ஆன்ற கடனுமாம்.]

உரு. ஆடவர் சுமார் உ௩ வயசுக்குமேல் உ௭ வயசுக்குள் விவாகஞ் செய்துகொள்வது உத்தமம்; உ௭ க்குமேல் ௩௫ வரை விவாகஞ் செய்துகொள்வது மத்திமம்; ௩௫ க்குமேல் ௪0 வரை செய்துகொள்வது அதமம்; அதற்குமேற் செய்துகொள்வது அதமாதமம்.

பெண்டிர் க௩ - க்குமேல் க௭ - க்குள் விவாகஞ் செய்துகொள்வது உத்தமம்; க௭-க்குமேல் உக-வரை விவாகஞ் செய்வது மத்திமம்; உக-க்குமேற் செய்வது அதமம்.

[மணமகனும் மணமகளும் ஒத்த குலத்தினராயிருப்பதுடன் அவ்விருவருக்கும் ரு வயசுக்குக் குறையாமலும் ௰ வயசுக்குமேற்படாமலும் வித்தியாசமிருத்தல் வேண்டும். ஒரு புருடன் ஒரு காலத்தில் ஒரு மனைவியுடனேயே வாழ்தற்குரியவனுவான். ஒரு புருடன் ஒரு மனைவியிருக்கும்போது யாதொரு காரணத்தினுலும் வேறொரு பெண்ணை மணஞ் செய்தற்குரியவனுகான். ௩ரு வயசுக்குள் மனைவியை இழந்த

புருடன் புத்திரப்பே றில்லாதவனும் இல்வாழ்க்கைக்கு மேற்பட்ட ஆசிரம நெறியிலொழுகப் பக்குவமடையாதவனும் இருப்பின் அவன் தன் பிராயத்துக்குத் தகுந்த பிராயமுள்ள ஒரு பெண்ணை மறுவிவாகஞ் செய்துகொள்ளலாம். விவாகத்தின் முக்கியமான கருத்து புத்திரப்பேறேயாதலின் அக்கருத்து முற்றுப்பெற்றபின் தாரமிழந்த புருடன்வேறு யாதொரு காரணத்தினாலும் மறுவிவாகஞ்செய்து கொள்ளும் உரிமையை உடையவனல்லன். ஐம்பது அறுபது வயதான பின்னும் தாரமிழந்த காரணத்தினாலாவது தாரம் நோயால் அல்லது வார்த்திகத்தால் தளர்ந்த காரணத்தினாலாவது தாரம் மகவுப்பெறாத காரணத்தினாலாவது ஐந்து ஆறுமுறை இரக்கமின்றிப் புனர்விவாகம் செய்துகொள்பவர் தங்களை இம்மையில் பகை, பழி, பாவம், அச்சம், இன்னல், அலர், ஐயுறவு, மனச்சஞ்சலம் முதலிய அகாரியங்களுக்கும், மறுமையில் நரகவேதனைக்கும் ஆளாக்கிக்கொள்ளுகிறார்கள்.

புருடனை இழந்த பெண்மகள் மனையில் தனது புத்திரனது (புத்திரனில்லாதவிடத்துத் தகப்பன் தமையன் தம்பி ஆகிய இவர்களில் ஒருவரது) பாதுகாப்பில் இருந்து உண்டி சுருக்கி விரதங்காத்து, உலகப்பற்றினை ஒழித்து, தெய்வ சிந்தனை, தெய்வாராதனை, வேதமோதல், புராணபடனம், திருக்கோயிலில் திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், பூமாலை புனைதல், திருவிளக்கிடுதல் முதலிய புண்ணிய காரியங்களைச் செய்து காலங்கழித்து, ஆண்டவன் திருவருளைப் பெறுதற்குத் தன்னை உரியவளாக்கிக்கொள்ளக் கடவள்.—இதற்குச் சான்றுவார் சைவ சமயாசாரியருள் ஒருவராகிய திருநாவுக்கரசு நாயனாரது தமக்கையாராகிய திலகவதியாரேயாவர்.

"அம்பொன்மணி நூல்தாங்கா தனைத்துயிர்க்கும் அருள்தாங்கி
இம்பர்மனைத் தவம்புரிந்து திலகவதி யாரிருந்தார்"

"புலர்வதன்முன் றிருவலகு பணிமாறிப் புனிறகன்ற
நலமலியான் சாணத்தால் நன்குதிரு மெழுக்கிட்டு
மலர்கொய்து கொடுவந்து மாலைகளுந் தொடுத்தமைத்துப்
பலர்புகழும் பண்பினாற் றிருப்பணிகள் பலசெய்தார்"

—திருத்தொண்டர் புராணம்.

கணவனை இழந்த கன்னிகை விரும்பிடில் மறுவிவாகம் செய்துகொள்ளலாம்.—இதற்குச் சான்றுவார் சைவசமயாசாரியருள் மற்றொருவராகிய சுந்தரமூர்த்தி நாயனாரது தருமபத்தினியாராகிய சங்கிலியாரே யாவர்.

"தகுமகட் பேசினேன் வியவே நூல்போன சங்கிலிபால்
புகுமணக் காதலி னல்ஒற்றி யூருறை புண்ணியன்றன்
மிகுமலர்ப் பாதம் பணிந்தரு ளாலிவ் வியனுலகம்
நகும்வழக் கேனமை யாப்புணர்ந் தான்நாவ லூரரசே"

—திருத்தொண்டர் திருவந்தாதி.

ஆண்மகனொருவன் தன் தமையன் மனைவியைத் தாயாகவும் தம்பி மனைவியை மகளாகவும் பிறன் மனைவியைச் சகோதரியாகவுங் கருதக்கடவன். அவ்விதமே பெண்மகளொருத்தி தன் புருடனின் தமையனையுந் தம்பியையும் முறையே தகப்பனாகவும் புதல்வனாகவும் பிறபுருடனொருவனைச் சகோதரனாகவுங் கருதக்கடவள்.

இக்காலத்தில் கோயில்களுக்கு எருது, குதிரை, ஒட்டை, யானை முதலியன காணிக்கையாகக்கொடுக்கப்படுதல் போலவே அக்காலத்தில் அறிவொழுக்கமுலர்கள் தாங்கள் அருமையாய்ப்பெற்ற மகவுகளில் உலகவிஷயத்தில் வெறுப்பும் தெய்வவழிபாட்டில் விரும்பும் பூர்வபுண்ணியவசத்தினால் அடையப்பெற்ற மகவுகளைத் தாங்கள் ஆண்டவனிடத்து வைத்த அன்புமேலீட்டால் ஆண்டவன் பணிக்கென்று கொடுப்பதாகிய வழக்கமொன்று தொன்றுதொட்டு நிகழ்ந்து

வந்ததாகத் தெரிகிறது.— இவ்வரியவழக்கின் உண்மையை "கோதில்குலத்து அரன்தன்கோயிற் *பிணாப்பிள்ளைகாள்" என்னும் மாணிக்கவாசக சுவாமிகள் திருவெம்பாவைத் திருவாக்கிற்காண்க. அவ்விதம் கொடுக்கப்பட்ட பெண்கள், ஆலயங்களில் தெய்வப் பணியினமர்ந்து தங்கள் உடல் பொருளாவிகளை எம்பெருமானிடம் ஒப்புவித்துத் தமக்கெனச் செயலற்ற நிலையில் அடிமைத்திறம் பூண்டு, அவ்வாறு தாங்களடைந்த நிலையை உலகறியும் வண்ணம் முத்திரை தரிக்கப்பெற்றுத் தேவதாசி தேவடியாள் உருத்திரகணிகையென்னும் சிறந்த பட்டங்களைப்பெற்றுத் தெய்வப்பணிகளைச் சரிவர நிகழ்த்திக்கொண்டிருந்து, எல்லோராலும் தாயாகப் போற்றப்பட்டு வந்தனர். பின்னர் ஆலயங்களில் அவர்களோடு பணிசெய்துகொண்டிருந்த சில தூர்த்தர் துராகிருதமாய் அவர்களிடம் தகாத காரியங்களைச் செய்யத் துணிந்து, அந்தப் பெண்மக்களில், தருணிப் (இளம்பெண்) பருவமுடைய மடந்தையரையும் அரிவையரையும் தெரிவையரையும் காளையர்குழுமிய கழகங்களிற் கொணர்ந்து நிறுத்தி ஆடவும் பாடவுஞ் செய்தனர். அதனால் ஏனைய மாதர்களிடத்தில் இருப்பது போலவே அம்மாதர்களிடத்தும் இயற்கையில் அமைக்கப்பட்டு, அவர்களது கற்பென்னும் பதிவிரதா தருமத்தைக் காக்கும் ஓர் அரணாகவும், அக்கற்பினை அழகு செய்யும் ஆபரணமாகவும் விளங்கிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னுஞ் சிறந்த குணங்கள் நான்கும் சிதைந்தன. அவர்களது பதிவிரதா தருமமும் கெட்டது. அதனால் அவர்கள் தாங்கள் எடுத்துக்கொண்ட பணியைச் செய்யத் தகுதியற்றவர்களாயினர். அக்காளையரும் தங்களிடம் இயற்கையாய் அமைந்துள்ள அறிவு, நிறை,

* பிணா-பெண்

ஓர்ப்பு(மனத் திடன்), கடைப்பிடி என்னுஞ் சிறந்த குணங்கள் நான்கினையுங் கொன்னே துறந்து கொடுநரகில் வீழ்வதற் காளாயினர். மதியில்லாத அம்மக்களது மடமையைப் போக்கிப் அறிவுறுத்துவது அறிஞர்கட்கு ஒரு முக்கியகடனாகும். தற்காலம் திருக்கோவில்களின் தூயநிலை குன்றிப்போயிருப்பதின் முக்கியமான காரணம் மேற்கூறிய தேவதாசிகளின் இழிநிலைமையேயாம். ஆதலின் அன்னாரது பரிசுத்த நிலைமையைக் காத்துப் பராமரித்தல் பொதுவாக ஆடவர் யாவருக்கும் உரித்தாய கடமையாயினும் ஆலயதரும பரிபாலனத்தைச் சிரமேற்கொண்டொழுகும் தருமகர்த்தர்களுக்கு அது ஒரு தலையாய கடனாகும்.]

௨௧. அறத்தின் வழி நின்று அரன் சேவடியை அடைய முயலுதல்.

[ஆண்மகனொருவன் ௨௫-பிராயம்வரை விவாகமின்றியிருந்து சற்குருவைச் சரணாகதியாகப் பத்தி விசுவாசத்துடன் அடைந்து அவரைத் தெய்வமாகக் கருதி அவர் கூறுவனவற்றையெல்லாம் வேதவாக்கியமாக நம்பிக் கற்பனவற்றைக் கற்குமாற்றிற் கற்றுக் கற்றவாறொழுகிப் பரதத்துவத்தை உள்ளவாறுணர்ந்து பஞ்சேந்திரியங்களின் வழியே மன வாக்குக் காயங்களைச் செல்லவொட்டாது அடக்கிச் சித்தத்தைப் பிரமத்திலேயே சரிக்கச்செய்து விரதங்காக்கக்கடவன். இந்நிலையே பிரமசரிய ஆசிரமமென்று கூறப்படுவது. (ஆசிரமம்-நிலை). இந்நிலையில் நின்றொழுகுபவன் பிரமசாரி என்று அழைக்கப்படுவான்.

இவ்வாறொழுகிய பிரமசாரி ௨௫-ம் பிராயமுடியுந் தருவாயில் நற்குலத்திற் பிறந்தவளும் நற்குண நற்செயல்களால் மேம்பாடுடையவளும் கல்வியறி வொழுக்கங்களிற் சிறந்தவளுமாயுள்ள ஒரு பெண்மகளைப் பெரியோரது உதவி

யினுற்பெற்று விவாகஞ்செய்து அவ்வில்லாளுடன் வாழ் வாங்கு வாழ்ந்து * முப்பத்திரண்டு அறங்களையும் தன்னுற் கூடியவளவில் இடைவிடாது செய்து ஒழுகக்கடவன். இந் நிலையிலுள்ளவனே இல்வாழ்வானென்று அழைக்கப்படுவான்.

"இல்வாழ்வா னென்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றில் நின்ற துணை"

"துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை"

என்னும் இவ்விரு குறள்வெண்பாக்களின் பொருள் இவண் உணரற்பாற்று.

---

*அறங்கள் முப்பத்திரண்டாவன:—ஆதுலர்க்குச்சாலை (ஏழைகட்குத் தங்குமிடம்), ஓதுவார்க்குணவு (ஓதுவார்-தேவார திருவாசகாதி அருட்பாக்களை விதிமுறையில் ஓது வதையே தொழிலாகக் கொண்டவர் - பண்டாரங்கள்) அறு சமயத்தார்க்கு உண்டி, [வைணவம், சைவம், சாக்தம் (சத்தி சமயம்,) சௌரம்(சூரியசமயம்,) காணபதம் (கணபதிசம யம்), கௌமாரம் (குமாரசமயம்) என்பன ஆறுசமயங் களாம்] பசுவுக்கு வாயுறை (வாயுறை - உணவு), சிறைச் சோறு, ஐயம்(பிச்சை), தின்பண்டநல்கல், அறவைச் சோறு (அறவை-அநாதம்), மகப்பெறுவித்தல், மகவுவளர்த் தல், மகப்பால் வார்த்தல், அறவைப்பிணஞ் சுடுதல், அற வைத்தூரியம் (தூரியம் - உடை), சுண்ணம், நோய்மருந்து, வண்ணார், நாவிதர், கண்ணாடி, காதோலை, கண்மருந்து, தலைக்கெண்ணெய், மணமுடிப்பித்தல், பிறர்துயர்காத் தல், தண்ணீர்ப்பந்தல், மடம், தடம்(தடாகம்), சோலை, ஆவுரிஞ்சுதறி(பசுவுராய்ஞ்சுங்குற்றுக்கல்), விலங்கிற்குணவு, ஏறுவிடுதல்(மணமுடிக்கவருபவன் பிடிக்கும்படி இடபம் விடுதல்), விலைகொடுத் துயிர்காத்தல், கன்னிகாதானம் என் பனவாம்.

அவ் வில்வாழ்வான், தனது புத்திரன் (முதற்குமாரன்) விவாகஞ் செய்தற்குரிய பருவத்தினை யடைந்தவுடன் அப் புத்திரனுக்கு விவாகஞ் செய்வித்து இல்லற தருமத்தை அவன் செய்யும்படி விட்டுத் தன் மனைவியுடனாயினும் தனித்தாயினும் வனத்திற்சென்று தவங்கிடக்கக்கடவன். வனஞ் செல்ல இயலாதவன் மூவாசையை முனிந்து (மகப்பெறுதல் முதலிய கிரியைகளை அறவொழித்துத்) தன் மனைவியுடனாயினுந் தனித்தாயினும் ஒரு தனிவீட்டில் வசித்து, ஆலய வழிபாடு, வேதபாராயணம் புராணபடன முதலியன செய்து யோகாப்பியாசம் செய்யக்கடவன். இந்நிலையில் அவன் வானப்பிரத்தன் என்றழைக்கப்படுவான்.

புத்திரப்பேறில்லாதவன் தனக்குப் பெண்மக்களிருப்பின் அவர்களுக்கு விவாகஞ் செய்வித்து வானப்பிரத்தமடையக்கடவன். மக்கட்பேறில்லாதான் நாற்பத்தைந்து வயசுக்குமேல் வானப்பிரத்த மடைதல் நலம். (பிரத்தம் - அறிவிப்பு. மாயாப்பிரபஞ்சப் பற்றினையொழித்துத் தனித்து நின்று முத்திநெறியை அறிய முயல்வோனென்றபடி)

இவ்வாறு வானப்பிரத்த நிலையையடைந்த ஒருவன் மேற்கூறிய முறையிற் பயிலும் யோகத்திற் பரிபக்குவமடைந்து ஞானம் வாய்க்கப்பெற்றுத் துறவியாகி முத்திநெறியிற் செயலற்று நிற்பன். அந்நிலையில் அவன் சந்நியாசியென்று சொல்லப்படுவன். (சம்-பூரணம், நியாசம் - விடுதல்).

மேற்கூறிய நிருணயத்தில் நின்றொழுகுபவர் பிரமசரிய ஆசிரமத்தில் சிவசாலோக பதவியை அடைவிக்கும் சரியையிற் சரிவரப்பழகி, அதன்பின் கிரகத்த ஆசிரமத்தில் சிவசாமீப பதவியை யடைவிக்கும் கிரியையைக் கிரமமாய்ச் செய்து, அதன்பின் வானப்பிரத்த ஆசிரமத்தில் சிவசாரூப

பதவியை யடைவிக்கும் அட்டாங்கயோகம் பயின்று, அதன் பின் சந்நியாச ஆசிரமத்தில் ஞானவடிவாய் நின்று சிவசாயுச்சிய பதவியை அடைவர்.

அட்டாங்கயோகம் என்னும் பதம் எட்டு உறுப்புகளாலமைந்த யோகமெனப் பொருள்படும். அவ்வுறுப்புகளாவன:—

(க.) இயமம் - கொலை, களவு, இச்சை, பொய், இவற்றினீங்கிப் புலனடக்கியிருத்தல்.

(உ.) நியமம் - தவம், தூய்மை(சுத்தம்), தத்துவநூலோர்தல், மனமுவந்திருத்தல், தெய்வம் வழிபடல். (தவம்-மனம் பொறிவழி போகாது நிற்றற்பொருட்டு விரதங்களால் உண்டிசுருக்கலும், கோடைக்காலத்தில் வெயிலில் நிற்றலும், மாரிகாலத்திலும் பனிக்காலத்திலும் நீரில் நிற்றலு முதலிய செயல்களை மேற்கொண்டு அவற்றால் தம்முயிர்க்கு வருந்துன்பங்களைப் பொறுத்தலும், அந்நிலையிற் பிறவுயிர்கள் தமக்குத் துன்பமிழைத்த காலத்தும் அவைகளுக்குத் தாம் துன்பமிழையா தொழிதலுமாம்.)

(ங.) ஆதனம்— சுவத்திகம் (அதாவது தொடைக்கும் முழங்காற்கும் நடுவே இரண்டுள்ளங்காலையுஞ் செலுத்தி இறுமாந்திருத்தல்).

கோமுகம் (அதாவது சகனைப்பக்கத்தில் இருகாற்பரட்டையும் மாற வைத்து அவ்விருகாற் பெருவிரலைக் கைப்பிடித்திருத்தல்). [சகனம் - தொடையின் உட்பக்கம்)

பதுமம் (அதாவது இருதொடைமேலும் இரண்டுள்ளங்காலையும் மாறித் தோன்றவைத்தல்.)

வீரம் (அதாவது வலத்தொடையில் இடக்காற்பரட்டைச் சேர்த்து இறுமாப்புற்றிருத்தல்)

கேசரி (அதாவது பீசத்தின்கீழ்ச் சீவனியிடத்துப் பரட்டை வைத்து இடமுழங்கையை முழந்தாளில் வைத்து அங்குலிவிரித்து நாசிநுனியைப் பார்த்திருத்தல், [அங்குலி - விரல். சீவனி - சீவநாடி]

பத்திரம் (அதாவது பீசத்தின்கீழ்ச் சீவனியிடத்து இருகாற் பரட்டையும் வைத்து அவ்விரு பதத்தையும் இருகையா லிறுகப்பிடித்து அசையா திருத்தல்.)

முத்தம் (அதாவது இடக்காற் பரட்டாற் சீவனியையழுத்தி வலக்காற்பரடு அப்பரட்டின் கீழ் அழுந்தவிருத்தல்.)

மயூரம் (அதாவது முழங்கை இரண்டும் உந்திப்புறத்திலழுந்தப் புவியிற் கையூன்றிக் கால்நீட்டித் தலை நிமிர்ந்திருத்தல்) [உந்தி - கொப்புள்]

சுகம் (அதாவது சுகமுந் திடமும் எவ்வாறிருக்கி னெய்துமோ அவ்வாறிருத்தல்.)

(௪.) பிராணாயாமம் - பிராணவாயுவை இரேசகபூரக கும்பகஞ்செய்தல். (அதாவது பிராணவாயுவை வெளியேவிட்டு உள்ளேயிழுத்துச் சமப்படுத்தி அடக்கல்.)

(௫.) பிரத்தியாகாரம் - உபாதியை நீக்கி உண்ணேக்கல். [உபாதி - தேக சம்பந்தங்களில் ஐயம் வந்தால் அவற்றுள் மனஞ் செல்லாமல் நிறுத்தல்.]

(௬.) தாரணை - கண்டம் இதயம் நெற்றி கபாலம் நாபி இவற்றிலொன்றிற் சந்ததம் சிந்தை வைத்தல்.

(௭.) தியானம் - சப்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம் ஆகிய ஐந்து புலன்களையுமடக்கி யோகஞ்செய்தல்.

(௮.) சமாதி-இந்திரிய முதலிய தத்துவச்சேட்டைகட் கேதுவாய் யாக்கையுணின்று அவற்றோடுகூடினும் அவற்றிற் பற்றின்றியிருக்கும் ஆன்மாவாகிய தன்னைத் தான்காண்டல்.

பிராணாயாமம் பழகுமுறை:—சுத்தமான காற்றுள்ள ஓரிடத்தில் நன்றாய் நிமிர்ந்து உட்கார்ந்து வலதுகையின் பெருவிரலால் மூக்கின் வலப்பக்கத்தை அழுத்தி மூக்கின் இடது துவாரத்தால் காற்றை மெதுவாய் முற்ற விழுத்து, பிறகு வலதுகையின் மற்றொரு விரலால் மூக்கின் இடதுபக்கத்தை அழுத்திக் காற்றை உள்ளே எவ்வளவுநேரம் நிறுத்த முடிகிறதோ அவ்வளவு நேரம் நிறுத்திப் பிறகு மூக்கின் வலப்பக்கத் துவாரத்தின் வழியாய் மிகவும் மெதுவாய் சுவாசத்தை வெளியேவிட்டு, மறுபடியும் கொஞ்சநேரங் கழித்து இந்தப் பிரகாரமே

காற்றை உள்ளே யிழுத்தும் வெளியேவிட்டும் பழகவேண்டும்.

"இளமையிற் கல்" என்னும் மூதாட்டி (ஔவை) திருவாணையால், யாதாமொன்றைக் கற்கவாவது அநுட்டிக்கவாவது விரும்புமொருவர் அதனை இளமையிலேயே தொடங்கினல்லது பின்னர் அது செவ்விதிற் கைகூடுதல் அரிதாகலானும், "அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது பொன்றுங்காற் பொன்றாத் துணை", "காலைச்செய் வோமென் றறத்தைக் கடைப்பிடித்துச் சாலச்செய் வாரே தலைப்படுவோர்", "நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும் பெருமையுடைத்திவ் வுலகு", என்னும் ஆன்றோர் கட்டுரையால், செய்தக்கதொன்று சிறு பிராயத்திலேயே செயற்பாலதாகலானும், அறத்தின் வழிநின்று அரன் சேவடியை அடையவிரும்பும் ஒருவன் மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐம்பொறிகளுக்கு உரியவாய ஊறு சுவை ஒளி நாற்றம் ஓசை என்னும் ஐம்புலன்களையும் கெடுத்து அவற்றின் நுகர்ச்சிக்கு ஏதுவாகிய பொருள் முழுதையும் ஒருங்கேவிட்ட சந்நியாசி ஒருவரைக் குருவாயடைந்து சிவபூசையியல்பின் முதற்படியாகிய சரியையிற் பழகும் பிரமசரிய ஆசிரமத்திலேயே கிரியாயோக ஞான மார்க்கங்களின் நிலைகளில் அறியவேண்டுமவற்றை அறிந்து தன்னால் இயன்றவளவில் அப்பியசிக்கவும் கடவன். இவ்வாறே மற்றை ஆசிரமத்தரும் தத்தமக்குரிய படியில் நிலைத்துநின்று ஏனையபடிகளையும் கைப்பற்றிஒழுகக்கடவர்.]

வாய்த்தது நந்தமக் கீதோர் பிறவி மதித்திடுமின்
பார்த்தற்குப் பாசு பதமருள் செய்தவன் பத்தருள்ளீர்
கோத்தன்ற முப்புரந் தீவளைத் தான்றில்லை யம்பலத்துக்
கூத்தனுக் காட்பட் டிருப்பதன் றோநந்தங் கூழைமையே.

[அப்பர் திருவிருத்தம்]

திருச்சிற்றம்பலம்

தவிர்வன

திருச்சிற்றம்பலம்

இக்காய(ம்) நீக்கி யினியொரு காயத்தில்
புக்குப் பிறவாமற் போம்வழி தேடுமின்
எக்காலத் திவ்வுடல் வந்தெமக் கானதென்
றக்கால முன்ன வருள்பெற லாமே. [திருமந்திரம்]

க. பிறர்க்குரிய யாதாமொன்றை விரும்புதல்.

உ. பிறரது ஆக்கங்கண்டு பொறாமை யடைதல்.

ங. வஞ்சனைவார்த்தை கூறுதல்.

ச. நாவடக்கமில்லாது பேசுதல்.

ரு. பழிப்புரை கூறுதல்.

சு. புறங்கூறுதல்.

எ. பயனில்சொல் சொல்லுதல். [ஒருவரைப்பார்த்து "உம் முடம்பு நன்றாயிருக்கிறது" "கூந்தல் அழகாயிருக்கிறது" என்பனபோன்ற சொற்கள் பயனில் சொற்களாகும்].

அ. செய்ந்நன்றி மறத்தல்.

கூ. தன்னலங்கருதியேனும் கோபத்தினாலேனும் சோர் வினாலேனும் ஒருயிர்க்குத் தீங்கிழைத்தல் - கொலை இதனுளடங்கும்.

[தமக்குத் தீங்கிழைத்தவர்க்கும் தாம் தீங்கிழைக்க நினைத் தலுங் கூடாது.]

தனக்குரித்தாய பாலைப்பருகும்படி தன் தாயிடஞ் சென்று மடியில் வாய்வைக்கின்ற கன்று இடையனாற் புடைக்கப்பட்டு எட்டிநின்று தன் தாயைநோக்கி ஏங்கி

அலறுவதையும், 'தன் தாயின்பாலை முற்றிலுந் தானேயருந்தி வளர்ந்த இந்த மகாபாவி என்னிடமுள்ள பாலில் ஒருதிவலை கூட என் குழந்தை அருந்தவொட்டாது தடுக்கின்றனே' யென்ற குறிப்பினையுணர்த்தித் தாய்ப்பசு கதறிக் கண்ணீர் விடுவதையுங் கண்ணுறாது, பால்கறக்கும் பாத்திரத்தில் தண்ணீர் இருக்கிறதா வென்று மாத்திரங் கவனித்து அக்கன்றின் உணவுக்கென்று அமைக்கப்பட்ட பாலைக்கவர்தல், மூடி வைக்கப்படாத உணவுப்பொருளில் ஒரு மிகச்சிறு பகுதியைத்தின்று நம்மில்லங்களில் நம்முடைய குழந்தைகளைப் போல உலாவிச் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் எலி எறும்பு முதலிய ஜீவஜந்துக்களைக் கொல்லுதல், ஆகிய செய்கைகளும் இவைபோன்ற மற்றச் செய்கைகளும் தன்னலங் கருதி ஒருயிர்க்குத் தீங்கிழைத்தலாகும். புலாலுண்ணலும் இதன்பாற் படுதலை யறிக.

வறியனாய் வந்திரந்த ஒருவனை வாய்க்குவந்தன பேசிக் கடிந்து அடித்துத் துரத்துதல், பணிசாரகன் அறியாமையாற்செய்த மிகச் சிறு குற்றத்துக்கு மிகப் பெரிய தண்டனை விதித்தல், ஆகிய இச்செய்கைகளும் இவை போன்ற மற்றச் செய்கைகளும் கோபத்தினால் தீங்கிழைத்தலாகும்.

துரிதமாய்ச் செல்லும் ஒருவனுடைய இரதத்தின் சக்கரங்களிலேனும் வாகனத்தின் கால்களிலேனும் பாதகுறட்டிலேனும் ஒருயிர் அகப்பட்டு இடருறுதல் அவனது சோர்வினால் இழைக்கப்பட்ட தீங்காகும் [சோர்வு - அயர்ச்சி, பொச்சாப்பு.]

ய. செல்வம், வலி, கல்வி, சௌந்தரிய முதலியவற்றான் மகிழ்ந்து மனத்தின்கண் மறவியடைதல்.

கக. கருமஞ் செய்வதிற் சோம்பலும் இடுக்கண் வந்துழி மனங்கலங்கலும்.

கஉ. வரம்புகடந்த காமம், சினம், உலோபம், மதம், நன்மையி னீங்கிய மானம், அளவிறந்தவுவகை என்னும் அறுவகை உட்பகை.

கங. அரசர், முனிவர், வயதிலும் அறிவிலும் முதிர்ந்தோர் ஆகிய பெரியோரை அவமதித்தல்.

கச. கள்ளுண்ணல், புலாலுண்ணல், புகையிலை தின்னல், சுருட்டுப்பிடித்தல், பொடி முகத்தல்.

கரு. சோவி, சதுரங்கம், சொக்கட்டான், சீட்டு முதலியன பயின்று வீண்பொழுது போக்குதல்; அவை பயிலும் இடத்துக்குச் செல்லுதல்.

கசு. சூதாடல். [குதிரைப்பந்தயம், லாட்டரி முதலியன பெரிய சூதாட்டங்களாகும்.]

கஎ. தூர்த்தர்(காமுகர்), கூத்தர், விடர், தெய்வமிலதென் போர், கொலைஞர், கள்வர், கள்ளுண்போர், கள்விற் போர், புலாலுண்போர், புலால் விற்போர், பொய்யர், சூதர், வஞ்சகர், பொறாமையுடையோர், புறங்கூறு வோர், பலருடன் பகைகொள்வோர், மிதமிஞ்சி வீண் செலவு செய்வோர், குலதர்மங்களையுங் குலாசாரங்களை யுங் கைவிட்டொழுகுவோர் ஆகிய இவர்களிணக்கம்.

[மேற்கூறிய பல்வகைப்பட்ட தீத்தொழிலாளரோடு இணங் காமையும் அவரது இயக்கங்களுக்கு யாதொரு விதத்தானும் உதவிபுரியாமையுமே ஒற்றுமையாமையாகும். இதுவே அவனிக்கண் ஆன்ற இயக்கத்தில் ஈடுபட்டு உண்மையான ஊக்கத்துடன் எஞ்சலில் ஏர்தரும் ஐக்கிய ஒழுக்கங்களை ஓதி

நிற்கும் ஒள்தாரியராம் கலைஞானி காந்தியடிகள் கிருபாநோக்கத்தாற் கீறிட்டருளிய குதிர்படு கூற்றுகுமென்பது கெழுமிய கேள்வியினர் கைக்கொண்ட கொழிப்பில் கோட்பாட்டின் கௌரவமாம்.

உதாரணமாக:—கட்குடிப்போரை அக்கொடிய பழக்கத்தினின்றும் விலக்கமுயலுதல் கட்குடியாத ஒருவனது கடமையாயிருக்க, அவன் அதனைபுணராது கட்குடிப்போருக்குப் பொருளுதவியேனும் கள்விற்பனை செய்தேனும் கள்ளிறக்குவதற்காகத் தன் பனை அல்லது தென்னை மரங்களைக் கொடுத்தேனும் கள் விற்பதற்காக நிலையங்கொடுத்தேனும் அத்தீய காரியத்தின் விருத்தி வழியில் ஒற்றுமைத்து, அதனால் அக்குடியரெய்துந் துன்பங்களுக்கும் அவர்களது குடிகேட்டிற்கும் தான் ஒரு முக்கியகாரண கர்த்தாவாகித் தன்னைச் 'செய்தக்க செய்யாமை', 'செய்தக்க அல்லவைசெய்தல்' என்னும் இருதிறக்குற்றங்களின் பாற்படுத்தித் தெய்வாபராதியாகி அக்குடியரின் பெண்டுபிள்ளைகளினது சாபத்திற்கும் தெய்வ தண்டனைக்கும் இலக்காகி நிற்கின்றான். மேற்கூறிய கட்குடிக்கேனும் அதுபோன்ற பிறிதொரு அகாரியத்துக்கேனும் யாதொரு விதத்தானும் உதவி புரியாதிருத்தலே ஒற்றுமையாமையாகும். கூத்து, சதிர், பாட்டுக்கச்சேரி முதலியவைகளுக்குச் செல்லாதிருத்தலும் ஒற்றுமையாமையேயாகும்.

எம்பெருமானது அபிஷேகத்துக்கு இளநீருதவுதலும் பூசை நைவேத்தியங்களுக்குத் தேங்காயுதவுதலும் வேனிற்காலத்திற் குளிர்ந்த காற்றினை வீசுதலுமாகிய நன்னோக்கங்களுடன் ஆலயங்களின் பிரகாரங்களிலும் தோட்டங்களிலும் வைக்கப்பட்டுப் பண்டைப் பெரியோராற் பிள்ளையெனப் போற்றி வளர்க்கப்பட்டு

அக்காரணத்தால் தென்னம்பிள்ளையென்னும் உபசாரப் பெயருடன் நிலவும் தென்னை மரங்களைத் தற்காலத்திற் கோவிலதிகாரிகள் தங்கள் அறியாமையால் கள்ளிறக்குவதற்குவிட்டு அதனால் கட்குடியென்னும் தீயகாரியத்தின் விருத்திவழியில் ஒத்துழைக்கின்றனர். அன்னாரையறிவுறுத்தல் ஆன்றோர் கடனாகும்.]

யஅ. பெரியோர் நடுவில் ஊடறுத்துச் செல்லுதல்; ஒருவர் உட்கார்ந்திருக்கு மிடத்துக்கும் விளக்குக்கும் நடுவே போதல், தம்மை யறியாதார் எதிரில் நிற்றல்.

கக. அரமனையிலும், ஆலயத்திலும், தெய்வங்கள் விழாக்கொள்ளுமிடத்திலும் பெரியோரை வணங்கல்.

உய. பெரியோர்முன்பு உமிதல், உயர்வான ஆசனத்திருத்தல், வெற்றிலை தின்னல், வகைப்படாத வார்த்தைபேசுதல், பல்லைக்காட்டிக் குரலிட்டுச்சிரித்தல், கொட்டாவியிடுதல், உறங்குதல், ஆடையைக்களைதல், செவியைத்தோண்டல், செவியைச்சொறிதல், மீசையை முறுக்குதல், பிறர் செவியில் இரகசியம் சொல்லல், பிறர்செவியிற் சொல்லைக்கேட்டல், போர்த்துக்கொண்டிருத்தல், கால்மேற்கால் (அட்டணைக்கால்) போட்டிருத்தல், கையைச் சுட்டிக்காட்டிப் பேசுதல், உரக்கப்பேசுதல், பணிவின்றி நிற்றல்.

உக. பெரியோர் தம்முடனே வழிநடந்து வரும்போது அவரை விட்டகன்று வாகனமுதலியவற்றில் ஏறுதல்; அவர் காலில் செருப்பில்லாதிருக்கத் தான் செருப்புப் போட்டுக்கொள்ளுதல்; அவர் குடைபிடியாதிருக்கத் தான் குடைபிடித்துக் கொள்ளுதல்.

உஉ. ஒருவரை நீர் உண்டது யாது என்று வினவுதல்,

உ௩. பொதுமகளிர் வீட்டுக்குச் சமீபத்தில் செல்லுதல், வசித்தல்.

உ௪. தாம் ஒருவருக்குச் செய்த நன்றியின்பயனைச் சொல்லுதல், தமக்கு ஒருவர் இட்ட உணவை இகழ்ந்துரைத்தல், தாம் செய்த அறத்தையும் விரதத்தையும் புகழ்ந்துபேசுதல்.

உ௫. வீட்டினுள்ளும் வழியிலும் சுவரின் மேலும் எச்சில் உமிதல், மூக்குநீர்சிந்தல், கண்டவிடத்தில் மூக்கு நீரைச்சிந்திக் கைவிரல்களில் எஞ்சிநின்ற சேடத்தை மற்றொரு கை, கால், சுவர், தூண், கதவு, மேசை, நாற்காலி முதலிய விடங்களில் துடைத்தல்.

[மூக்குநீரை இடதுகைப் பெருவிரலாலும் ஆட்காட்டி விரலாலும் சிந்திக் கையையும் மூக்கையும் நீரினற்சுத்திசெய்தல் வேண்டும்.]

உ௬. (க) பிறர் உடுத்திய அழுக்கு வஸ்திரத்தைக் கீழே விரித்து உட்காருதல், உடுத்துக்கொள்ளுதல், போர்த்துக் கொள்ளுதல்.

(உ) உடுத்த ஆடையின் காற்று பிறர்மேற்படும்படி நடத்தல்.

(௩) பலர்நடுவில் நின்று உடையை உதறுதல்.

(௪) புது வஸ்திரத்தைத் தலைக்கடையில் விரித்தல்.

உ௭. (க) சிறுவர் உண்ணும்போது பெரியோர் உயர்வான ஆசனத்திருத்தல்.

(உ) சிறுவர் செய்யத்தகாத குற்றஞ்செய்திருப்பினும் அவர்கள் உண்ணும்போது மனநோகும்படி ஒன்றைச் செய்தல், சொல்லல்.

உஅ. (க) பலர் நடுவிலிருந்து பிறரைப் பழித்தும் இழித்தும் பேசுதல். [ஒருவனது குற்றத்தைத் தனித்துரைத்துத் திருத்தல்வேண்டும்].

(உ) பலர்நடுவிற் படுத்து நித்திரைசெய்தல்.

உகூ. ஏழைகளைத் தகுதியில்லாமல் இகழ்ந்துபேசுதல்.

௩0. தம்மாலாகாத ஒரு காரியத்தைச் செய்வதாக ஒருவருக்கு வாக்குக்கொடுத்துப் பின்னர் அதனைச் செய்யாதொழிதல்.

௩௧. மின்னல், எரிநக்ஷத்திரம், வேசையருடைய அலங்காரம், காலைவெயில், மாலைவெயில் என்னுமிவைகளை உற்றுப்பார்த்தல்.

௩உ. ஒரு பொருளை வீசியெறிதல், கல்லெறிதல், கனைத்தல், தூரப்போகின்றவனை யழைத்தல், பிறருடைய சொல் செய்கைகளை நடித்துக்காட்டல், ஒளித்துக்கொள்ளல், கையொடுகையைத் தட்டுதல், வெளிப்படையாகக் கண்ணிடுதல், மூக்கடைத்தல். [இவை அங்கசேட்டை யெனப்படும்].

௩௩. உக்கிரமாகச் சண்டை செய்யுமிடத்திலும், கட்குடித்துக் களித்தாடுமிடத்திலும், பரத்தையர்சேரியிலும், சிநேகந் தளர்ந்த விடத்திலும், அநேகர் வருவது போவதான தண்ணீர்த் துறையிலும் நெடுநேரம் நிற்றல்.

௩௪. பாழ்மனையகத்தும், ஆலயத்துள்ளும், சுடுகாட்டுள்ளும், காட்டினுள்ளதோர் தனிமுது மரத்தினிடத்தும் தனியே போதல்.

௩௫. ஒருவர் எழுந்து போகும்போது அவரையழைத்தல், தும்முதல், எங்கே போகிறீர் என்று கேட்டல்.

௩௬. விளக்கினை வாயாலூதி யவித்தல்; அடுப்பிலுள்ள நெருப்பை யவித்தல். [விளக்கை விசிறி புஷ்பம் பச்சிலை என்னுமிவற்றில் ஏதேனுமொன்றைக் கொண்டு அவித்தல் வேண்டும்.]

௩௭. தமக்குக் கிடைத்தற்கரியவற்றை விரும்புதல், தம்மால் இழக்கப்பட்டவற்றை நினைத்து வருந்துதல். [இவை முறையே மோகமும் சோகமுமாம்.]

௩௮. ஒருவர் சூடிய அல்லது மோந்த பூவைச் சூடுதல் அல்லது மோத்தல்.

௩௯. தாழ்ந்தவரென்று நினைத்து ஏழைகளுக்கு எச்சிலைக் கொடுத்தல்.

௪0. தன் மனைவியின்றி வேறொரு ஸ்திரியுடன் தனித்திருத்தல்.

௪௧. மலம், புலால், பிணம், மது என்னுமிவற்றையும், இவற்றைத் தின்னும் கோழி, கழுகு, பருந்து, காகம், நாய், நரி, பூனை, பல்லி, கழுதை, பன்றி முதலியவற்றையும் தீண்டுதல். [அவற்றைத் தீண்டின் உடனே ஸ்நாநஞ் செய்தல் வேண்டும். சௌளஞ்செய்யினும் சுடுகாட்டிற் செல்லினும் பிணப்புகைபடினும் உடனே ஸ்நாநஞ் செய்தல் வேண்டும்.]

வைத்த பொருணமக் காமென்று சொல்லி மனத்தடைத்துச்
சித்த மொருக்கிச் சிவாய நமவென் றிருக்கினல்லால்
மொய்த்த கதிர்மதி போல்வா ரவர்பா திரிப்புலியூர்
அத்த னருள்பெற லாமோ வறிவிலாப் பேதைநெஞ்சே.

[அப்பர் திருவிருத்தம்.]

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்

நன்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி* செய்து கிடப்பதே.

நித்திய கருமானுட்டானம்

க. சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்கு முன் சிவநாமத்தை உச்சரித்துக்கொண்டு நித்திரை விட்டெழுந்து சிறு நீர் கழித்துச் சௌசம்பண்ணி வாய்கொப்பளித்து முகங்கால் கழுவி மூன்றுதரம் ஆசமனம் பண்ணி வடக்கு முகமாகவேனும் கிழக்கு முகமாகவேனும் நின்றுகொண்டு 'சிவ சிவ' என்று சொல்லி நெற்றியில் விபூதி தரித்துப் பின் தாய் தந்தையரை வணங்க வேண்டும்.

[சூரியன் உதிக்க மூன்றே முக்கால் நாழிகைக்கு எழுவது மத்திமம்; சூரியோதயத்தில் எழுவது அதமம்; சூரியன் உதித்த பின் எழுவதும் பகலில் நித்திரை செய்வதும் அதமாதமம். அது சோம்பலையும் தரித்திரத்தையுந் தரும். வைகறையில் துயிலெழுதல் ஆரம்பத்தில் யாவர்க்கும் மிகவுங் கடினமானதோர் காரியமாகவே இருக்கும். ஆனால் சில நாட்கள் நியம.

---

* பணியாவது இறைவனருளிய சட்டங்களின் அரிய சாத்திர விதியிற் கட்டுண்டொழுகுதல்.

மாகப்பழகில் பின்னர் அவ்வாறெழுதல் வெகு சுலபமாக முடிவதுடன் பல நன்மைகளையும் பயக்கும். குறித்த நேரத்தில் எழுப்பக்கூடிய ஒரு கடியாரத்தைப் படுக்கை யறையில் ஒரு பக்கம் வைத்துக்கொண்டு நித்திரை புகுதல் நலம். பெண்டிர் விவாகமாகுமுன் தாய் தந்தையரையும் விவாகமாயபின் கணவனையும் நித்திரை விட்டெழுந்தவுடன் வணங்கக் கடவர்.

ஆசமனம் - கிழக்குமுகமாகவேனும் வடக்கு முகமாகவேனுங் குந்திருந்து முழங்கால்களுக் கிடையே கைகளை வைத்துக்கொண்டு வலக்கையை விரித்துப் பெருவிரலையுஞ் சிறுவிரலையும் பிரித்து உள் ளங்கையிற் பெய்த உளுந்தமிழ்ந்து சலத்தை யுட் கொள்ளல். இதனை நதி முதலியவற்றில் முழங்காலள வினதாகிய சலத்தில் நின்று இடக்கையினாலே சலத் தைத் தொட்டுக்கொண்டு மேற்கூறிய முறையிற் செய் தல் வேண்டும்.]

௨. பிறகு, திருவிளக்கின் விலாப்பக்கத்தில் தாய் தந்தைய ருடனும் சகோதர சகோதரிகளுடனும் பெண்டிர் மக் களுடனும் வடக்குமுகமாக வேனும் கிழக்குமுகமாக வேனும் சம்மணங்கூட்டி யுட்கார்ந்து முதுகுவளையா மல் நிமிர்ந்திருந்து இருகரங்களையுங் கூப்பி இருதயத் தோடு சேர்த்துக் கண்களிரண்டும் நாசி நுனியை நோக்கிய அந்நிலையில் பின்வருமாறு ஒருமித்துக்கூறிச் செபித்தல் வேண்டும்:—

உ

"சர்வ வல்லமையும் இரக்கமும் அன்புமுள்ள எங்கள் சச்சிதானந்தப் பரம்பொருளே! உம்முடைய செந்நெறியை விட்டுவிலகி மனம்போன வழியிற்

சென்று மிகக்கொடிய பாவங்களைச்செய்த உம்முடைய மக்களாகிய நாங்களும் சென்ற இரவில் யாதொரு விக்கினமுமின்றிச் சுகமாக நித்திரைசெய்து எழுந்திருக்கும்படி கிருபை செய்தருளிய உம்முடைய திருவடியை மனமாரச் சிந்தித்து வாயாரப்பாடித் தலையாரக் கும்பிட்டு உய்யுமாறு அருள்செய்வீராக. எங்கள் கருணை வெள்ளமே! உம்முடைய அறிவிலாக் குழவிகளாகிய நாங்கள் எங்கள் பாவச்செயல்களையும் அவற்றின் பயனாக நாங்கள் அனுபவிக்கக் கிடக்கும் யமவேதனைகளையும் நினைந்து மனம்நொந்து அழுதாற்றுதலை உம்முடைய கருணைத்திருவுளத்திற் கொண்டு, எங்களுக்கிரங்கி எங்கள் பாவங்களை ஒழித்து நாங்கள் இனி யாதொருவித பாவச்செயலுக்கும் ஆளாகாவண்ணம் எங்களைத் தடுத்தாட்கொண்டருளப் பிரார்த்திக்கின்றோம் சுவாமி! கருணாநிதியே! எங்களைச் சகல தீமையிலும் ஆபத்திலும் நின்றும், குரங்கின் தன்மை வாய்ந்த மனத்தினின்றுந் தோன்றுகின்ற கெட்ட எண்ணங்களினின்றும், அகந்தையிலும் வீண்பெருமையிலும் மாயத்திலும் நின்றும், பொறாமையிலும் பகையிலும் வர்மத்திலும் சகலவித அன்புத்தாழ்ச்சியிலும் நின்றும், விபசாரத்திலும் மரணத்துக்கேதுவான மற்றெல்லாப் பாவத்திலும் நின்றும், உலகத்தினுலும் மாமிசத்தினுலும் பிசாசினுலும் வருகிற சகல வஞ்சகங்களிலும் நின்றும், இடியிலும் பெருங்காற்றிலும் நின்றும், பெருவாரி விஷவியாதிகளிலும் பஞ்சத்திலும் நின்றும், யுத்தத்திலும் கொலையிலும் சடிதியில்வரும் மரணத்திலும் நின்றும், சகலவிதக் கலகத்திலும் பொய்ப்போதகத்திலும் இருதயக் கடினத்திலும் நின்றும் இரக்ஷித்

தருளப் பிரார்த்திக்கின்றோம் சுவாமி! எங்கள் தயாபர மூர்த்தியே! எங்கள் இருதயத்திலே வஞ்சனையாற் புகுந்து எங்களை வருத்துகின்ற காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம் என்னும் உட்பகைகள் ஆறினையும் விலக்கி, பின் அவைகள் சார இடமில்லாமல் எங்களிருதயத்தை அன்பினாலும் நற்சிந்தைகளினாலும் நிரப்பியருளப் பிரார்த்திக்கின்றோம் சுவாமீ! எங்கள் ஆண்டவரே! எங்களில் வழிதப்பி மோசம்போனவர்களை நல்வழியிலே திருப்பவும், நல்வழியில் நிற்கின்றவர்களை வழிதப்பி மோசம்போகாவண்ணம் பலப்படுத்தவும், மனவூக்கமில்லாதவர்களைத் தேற்றி ஆதரிக்கவும் பிரார்த்திக்கின்றோம் சுவாமீ! எங்கள் பரமபிதாவே! மோசத்திலும் வறுமையிலும் துன்பத்திலும் அகப்பட்ட யாவருக்கும் ஆதரவையும் சகாயத்தையும் ஆறுதலையும் செய்யவேண்டுமென்றும், நிலத்திலும் நீரிலும் யாத்திரை பண்ணுகிறவர்களையும் பிரசவவேதனைப்படுகிற பெண்மக்களையும் சகல வியாதிக்காரரையும் தாய் தந்தையில்லாப் பிள்ளைகளையும் கைம்பெண்களையும் திக்கற்றவர்களையும் காத்துப் பராமரிக்க வேண்டுமென்றும், எங்களைப் பகைக்கிறவர்களையும் துன்பப் படுத்துகிறவர்களையும் அவதூறு பண்ணுகிறவர்களையும் மன்னித்து, அவர்களது இருதயத்தைத் திருப்பவேண்டுமென்றும் பிரார்த்திக்கின்றோம் ஸ்வாமீ!" கடவுளே! எல்லாப்பிராணிகளிலும் நாங்கள் அன்பாயிருக்கவும், அவைகள் எங்களில் அன்பாயிருக்ககவும் அருள் செய்வீராக. இன்று எங்களுக்கு ஒரு புதிய தினத்தைக் கொடுத்தருளினீர். இன்று உம்முடைய அடிமைகளாகிய நாங்

கள் செய்வனவானகாரியங்களெல்லாம் உம்மால்விதிக்கப் பட்டவைகளாயிருக்கவும் உம்மால் விலக்கப்பட்டவை களை நாங்கள் செய்யாதொழியவும் கிருபையருளப் பிரார்த்திக்கின்றோம்,சுவாமி, என்றுஇவ்வாறுதுதித்து அதன்பின் அடியிற்குறித்துள்ள ஏழு பாசுரங்களை யும் இசையுடன் ஓதல்வேண்டும்.

எவ்வுயிரு மெம்முயிர்போ லெண்ணி யிரங்கவு(ம்)நின்
தெய்வ வருட்கருணை செய்யாய் பராபரமே—(தாயுமானவர்)

கொல்லாமற் கொன்றதைத் தின்னாமற் குத்திரங் கோள்களவு
கல்லாமற் கைதவரோ டிணங்காமற் கனவிலும் பொய்
சொல்லாமற் சொற்களைக் கேளாமற் றோகையர் மாயையிலே
செல்லாமற் செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே.

—பட்டினத்துப்பிள்ளையார்—

மறைக ணிந்தனை சைவநந் தனைபொரு மனமும்
தறுகணைம் புலன்களுக் கேவல் செய்யுறாச் சதுரும்
பிறவி நீசெனப் பேதையர் தம்மொடு பிணக்கும்
உறுதி நல்லறஞ் செய்பவர் தங்களோ டுறவும்

யாது நல்லன்பர் கேட்கினு முதவுறு மியல்பும்
மாத வத்தினோ ரொறுப்பினும் வணங்கிடு மகிழ்வும்
ஓது நல்லுப தேசமெய் யுறுதியு மன்பர்
தீது செய்யினுஞ் சிவச்செய லெனக்கொளுந் தெளிவும்

மனமும் வாக்கு(ம்)நின் னன்பர்பா லொருப்படு செயலும்
கனவி லும்முன தன்பருக் கடிமையாங் கருத்தும்
நினைவில் வேறொரு கடவுளை வழிபடா நிலையும்
புனித நின்புகழ் நாடொறு முரைத்திடும் பொலிவும்

தீமை யாம்புறச் சமயங்க ளொழித்திடுந் திறனும்
வாய்மை யாகவே பிறர்பொருள் விழைவுறா வளனும்

வழு றம்பா தாரகச் சிடாதநன் றேன்புந்
தூய்மை நெஞ்சில்யா னெனதெனச் செருக்குறாத் துறவும்
துறக்கமீ துறையினு(ம்) நரகிற் றோய்கினும்
இறக்கினும் பிறக்கினு மின்பந் துய்க்கினும்
பிறைக்கொழுந் தணிசடைப் பெரும விவ்வரம்
மறந்திடா தெனக்குநீ வழங்க வேண்டுமால்

—(நந்தியெம்பெருமான்)

௧. பிறகு, வீட்டின் பின்பக்கத்தில் மலசலங்கழிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள இடத்திற்குச்சென்று, பூணூலிருப்பின் அதனை வலக்காதிலே சேர்த்து வஸ்திரத்தினாலே செவித்துவாரங்களை மறைத்துக்கட்டிக்கொண்டு, குந்தியிருந்து நாசிநுனியைப் பார்த்துக்கொண்டு மனதை ஒன்றிலும் செல்லாமல் நிறுத்தி மலசலங் கழித்தெழுந்து அப்பாற்சென்று முன்னமே பாத்திரத்தில் மொண்டு வைக்கப்பட்டுள்ள தண்ணீராற் சௌசஞ் செய்து சுத்தமண் கொண்டு மலவாயிலையுங் கையையுஞ் சுத்திசெய்து தண்ணீரால் அலம்பி, பிறகு இரு கால்களையுங் கைகளையுஞ் சுத்திசெய்து, அதன்பின் வேறொருபாத்திரத்தில் வைக்கப்பட்ட சுத்தசலத்தினால் வாய் கண் மூக்குச் செவிகளைச் சுத்திசெய்து மூன்றுதரம் ஆசமனம் பண்ணல் வேண்டும்.

[மலசலங் கழிக்குமிடம் வெய்யில் நன்றாய்ப் படும்படி அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். கழிக்கப்பட்ட மலத்தின்மேல் கொஞ்சம் மணலைக் கொட்டி வைத்துக் காலையிலும் மாலையிலும் அதனை அப்புறப்படுத்தி இடத்தை நன்றாய்ச் சுத்திசெய்வித்தல் வேண்டும். சிலவிடங்களில் கொல்லையில் ஒரு பெரிய குழியை வெட்டி அதில் மாசக்கணக்காக மலசலங்கழித்து அதன் மேல் சாம்பரைப் பெய்து சேர்த்து வருடத்துக் கொரு

முறை அதனை அப்புறப்படுத்துகிறார்கள். இது ஒரு மிகக்கொடிய வழக்கம். இவ்வழக்கத்தை வைத்துக் கொண்டிருப்பவர்கள் உடனே நிறுத்தவேண்டும். இவ்வாறு அமைக்கப்பட்ட இடங்களில் மலசலங் கழிக்க மாட்டாதவர்கள், வெளியே புறப்பட்டு ஊரை யகன்று, நடைபாதை, நீர்நிலை, நீர்க்கரை, சாம்பருள்ளவிடம், சுடுகாடு, பூந்தோட்டம், மரநிழல், உழுகநிலம், பயிருள்ள நிலம், புல்தரை, பசுமந்தை நிற்குமிடம், புற்று, அருவி பாயுமிடம், மலை ஆகிய இவைகளைநீக்கி, மறைவான ஒரு தனியிடத்தில் பகலில் வடக்குமுகமாகவும் இரவில்தெற்கு முகமாகவும் குந்தியிருந்து மலசலங் கழித்தல்வேண்டும்.

மலசலங் கழிக்கும்போதும் சௌசஞ் செய்யும் போதும் சுவாசம் வாய்வழியாய் உட்செல்லாவண்ணம் வாயை நன்றாய் மூடிக்கொள்ளவேண்டும். வாய் திறந்திருப்பின் அச்சமயத்தில் உட்கொள்ளப்படும் காற்றானது அவ்விடத்திலுள்ள துர்நாற்றத்துடன் வாய்வழியாய் உட்சென்று தேகத்துக்குக் கெடுதியை விளைவிக்கும். வாயை மூடிக்கொண்டு உட்கொள்ளப்படும் காற்றானது மூக்கினால் சுத்தி செய்யப்பட்டு உட்செல்லும். இதனால், மலசலங் கழிக்கும்போதும் சௌசஞ் செய்யும்போதும் ஒருவரிடமும் பேசக்கூடாதென்பதும் பெறப்படும்.

எண்ணெய் தேய்த்துக்கொண்டும், ஈரவஸ்திரம் தரித்துக்கொண்டும், காலிலே கட்டைபோட்டுக்கொண்டும், வாயில் சுருட்டு வைத்துக்கொண்டும் மலசலங் கழித்தலாகாது. சுருட்டுப்பிடித்தலாகிய கொடிய வழக்கத்தைக் கைக்கொண்டவர்கள் அதனை முன்னதாகப் பிடித்து வாயைக்கழுவி அப்புறம் மலசலங்கழித்தல் வேண்டும்.

சௌசஞ்செய்தற்குத் தனியாய்ப் பாத்திரம் இருத்தல் வேண்டும். அந்தப் பாத்திரத்தை மற்றைப்பாத்திரங்களுடன் சேராது ஒரு தனியிடத்தில் வைத்து உபயோகித்தல் வேண்டும்.]

௪. பிறகு, பாத்திரத்தில் தண்ணீரை மொண்டுவைத்துக் கொண்டு ஓரிடத்தில் கிழக்குமுகமாகவேனும் வடக்கு முகமாகவேனும் குந்தியிருந்துகொண்டு, ஆல், வேல், மா முதலிய துவருள்ள மரங்களில் ஏதாவ தொன்றின் குச்சி அல்லது இலை அல்லது தூளினால் பற்களின் உட்புறத்தையும் வெளிப்புறத்தையும் நன்றாய்த் துலக்கி, ஈர்க்குகொண்டு நாக்கை வழித்து, வாயை நன்றாய்க் கொப்பளித்து, முகங்கால்களைக்கழுவி ஆசமனம்பண்ணி நெற்றியில் விபூதி தரித்தல்வேண்டும்.

[நதியிலாவது வாய்க்காலிலாவது குளத்திலாவது சௌசஞ்செய்தல், வாய்கொப்பளித்தல், எச்சிலுமிதல், மூக்குநீர்சிந்தல் முதலிய அசங்கிய காரியங்களை யாதொரு காரணத்தினாலும் செய்தலாகாது. அந்நீர் நிலைகளில் மயிர், கரி, சாம்பர், முள், விஷம், எலும்பு, மாமிசம் என்னுமிவைகளைப் போடுதலு மாகாது. அறியாமல் அவ்விதம் செய்பவர்களைத்தடுத்து அறிவுறுத்துவது அறிஞர்க்குரியதோர் ஆன்ற கடனாகும்.

நின்றுகொண்டும் நடந்துகொண்டும் பல்துலக்கலாகாது. கொம்புகொண்டு துலக்குவது உத்தமம். தூள் கொண்டு துலக்க நேரிடும்போது நகம், பல்லிற்படாமல் துலக்கவேண்டும். காய்ந்த குச்சி, பாளை, மணல், மண், செங்கல், சாம்பல், கரி என்பவற்றைக் கொண்டு ஒருகா

லும் துலக்கலாகாது. புருஷ் என்னும் மேற்குநாட்டுத் துடைப்புக்குச்சியைக்கொண்டு பல்துலக்கும் வழக்கம் முற்கூறிய பிரதேசப் போலிநாகரிகத்தின் ஒரு சார்பாகும். மேற்கூறிய பற்கொம்பும் ஒரு புருஷேயாகும். ஆனால் அது பார்வைக்கு நாகரிகமாகக்காணப்படாமையின், பலர் அதனையிகழ்ந்து பார்வைமாத்திரத்தில் நாகரிகமாகக் காணப்படும் மேற்கு நாட்டு புருஷ் ஒன்றை வருடக் கணக்காக உபயோகித்து, அதனால் அநாசாரத்தையும் பலவித நோய்களையும் தாமே தமக்கு உண்டாக்கிக்கொள்ளுகிறார்கள். இக்கொடிய வழக்கமுள்ளவர்கள் அதனை உடனே விடக்கடவர்.]

௫. பிறகு, மாணவர் திருவிளக்கின் விலாப்பக்கத்தில் சுவரிற் சாயாமலும் முதுகு வளையாமலும் நிமிர்ந்து சம்மணங்கூட்டி உட்கார்ந்து தங்கள் பள்ளிக்கூடப் பாடங்களைப் படித்து மனனஞ்செய்தல்வேண்டும். ஏனையோர் சிவஞானபோத முதலிய சாத்திரப் பாக்களையேனும், தேவார முதலிய தோத்திரப் பாக்களையேனும், திருக்குறள் முதலிய நீதிநூல்களையேனும் நியமமாகப் படித்தல் வேண்டும்.

[படிப்பதற்கு எண்ணெய், தேங்காய்நெய், கடலைநெய், ஆமணக்குமுத்துநெய், இலுப்பைக்கொட்டைநெய், புன்னைக்காய்நெய் முதலியவற்றால் எரிக்கப்படும் திருவிளக்குகளையே உபயோகித்தல் வேண்டும்.

வர்த்திவிளக்குகள் அதிகச் செலவுள்ளவைகளாயிருத்தலாலும் வேண்டிய அளவுக்கு வெளிச்சந் தாராமையாலும் அவற்றை உபயோகித்தல் அனுசிதம். அன்றியும் அவ்வர்த்திகள் பெரும்பாலும் திமிங்கிலத்தின் கொழுப்

பிறைற் செய்யப்படுவதால் அவற்றை உபயோகித்தல் அனு சாரமுமாம். அரக்கினைற் செய்யப்பட்ட வர்த்திகளில் அனு சாரம் இல்லாதிருப்பினும், அவையும் திமிங்கிலக்கொழுப் பினைற் செய்யப்பட்ட வர்த்திகளைப்போலவே அதிக விலை யும் குறைந்த வெளிச்சமும் உள்ளவைகளா யிருத்தலின் அவற்றையும்படிப்பத ற்குபயோகித்தல் அனுசிதமேயாம்.

மண்ணெய் (கெரோஸினையில்) விளக்குகள் அளவுக்கு மிஞ்சிய வெளிச்சத்தைத் தந்து அதனைல் கண்களைக் கெடுப்பதாலும், அவை எரிவதனைல் உண்டாகும் கரிமல வாயு சுவாசத்தில் உட்கொள்ளப்பட்டு நாளடைவில் சுவாச காச முதலிய சிலநோய்களுக்கு உதவிசெய்கிறபடியாலும், அவ்விளக்குகளை ஒருகாலும் உபயோகித்தல் கூடாது. அவ்விளக்குகளை உபயோகித்தவரிற் பலர் அடைந்த உயிர்ச் சேதம் பொருட்சேதமாகிய பெருங்கேடுகளை நம்மனைர் பன்முறை கண்ணைரக்கண்டும் காதாரக்கேட்டும் கவனி யாது அயர்கின்றனர். இது மிகவும் விசனத்தைத் தருவதா கிய ஒரு காரியமாகும். தற்காலத்தில் உலகமெங்கும் பரவிக் கொண்டு வரும் காந்த விளக்குகளும் படிப்பதற்கு உப யோகப்படுத்தத் தக்கவையல்லவென்பதும் இவண் குறித் துணரத்தக்க தொன்ரும்]

௬. பிறகு, விடிய ஒரு நாழிகைக்குமுன் தோய்த்து லர்ந்த வஸ்திரங்களும் * உருத்திராக்க மாலைகளும் வைக்

---

* உருத்திராக்கம்-உருத்திரனது கண். தேவர்கள் திரிபுரத்த சுரர்களாலே தங்களுக்கு நிகழ்ந்த துன்பத்தை விண்ணப்பஞ் செய்தபொழுது, திருக்கயிலாசபதியுடைய மூன்று திருக்கண்களி னின்றும் பொழிந்த நீரிற்ருேன்றிய மணியாம். இது சிவபெரு மான் ஆன்மாக்கண்மீது வைத்திருக்கும் அன்பையும் இரக்கத்தை யும் காட்டும் ஓர் அறிகுறியாகும்.

கப்பட்ட மடிப்பையையும் வடிகட்டிய தூய வெண்ணிற விபூதி † வைக்கப்பட்ட பை, சம்புடம் அல்லது வில்வக் குடுக்கையையும் செம்பையும் பூக்குடலையையும் எடுத்துக் கொண்டு, மாணிக்கவாசக சுவாமிகள் திருவாய்மலர்ந் தருளிய திருவாசகத்தில் 'திருவெம்பாவை', 'திருப்பள்ளி யெழுச்சி' என்னும் அருமைத் திருப்பதிகங்களை ஓதிக் கொண்டு துரிதமாய் நடந்து சுத்த நீருள்ள ஒரு நதியை யேனும் தடாகத்தையேனும் அடைந்து, மடிப்பையையும், பூக்குடலையையும் கரையில் சுத்தஞ்செய்யப்பட்ட ஓரிடத் தில் வைத்து, பின் நீரில் கோவணத்தைக் கசக்கியும் வஸ்திரத்தைத் தோய்த்தும் தரித்து, கொப்புளளவு ஆழத் தில் இறங்கிநின்று, மூன்றுதரம் ஆசமனம்பண்ணி, தண்ணீரைச் சிரசில் புரோட்சித்து(தெளித்து)க்கொண்டு, காதுகளையும் கண்களையும் மூக்குத் துவாரங்களை யும் முறையே பெருவிரல்களினாலும் சுட்டுவிரல்களி னாலும் நடுவிரல்களினாலும் பொத்திக்கொண்டு, வாயை மூடிச் சிவபெருமானைச் சிந்தித்து ஐந்து அல்லது ஆறு முறை மூழ்கியெழுந்து உடம்பின் ஒவ்வொரு பாகத் தையும் நன்றாய்ச் சொரிந்துதேய்த்து அழுக்கைப்போக்கி, மறுபடியும் முன் போலவே ஐந்து அல்லது ஆறுமுறை மூழ்கி யெழுந்து ஆசமனம் பண்ணிக் கரையேறவேண்டும்.

---

† விபூதி-பசுவின் மலத்தைச் சுடுதலால் உண்டாகிய சாம்பர். இது சீவான்மாக்களாகிய பசுக்களை அநாதியாய்ப் பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கும் ஆணவாதி மும்மலங்களாகிய பாசத்தைப் பரமான் மாவாகிய பதியானவர் தமது நெற்றிக் கண்ணினின்றும் தோன்றும் ஞானாக்கினியின் தீட்சணியத்தினாலே ஒழித்து அவ்வான்மாக்களது பசுத்தன்மையை நீக்கித் தன்னையடையச் செய்வதற்கு ஓர் அறி குறியாகும்.

பின்னர் மடிப்பையின்மேல் தண்ணீரைப் புரோட்சித்து அதில் வைக்கப்பட்டுள்ள முரட்டுத் துண்டினால் தலையைத்துவட்டி, பவித்திர (சுண்டுவிரலுக்கடுத்த) விரலினால் நெற்றியில் சிறிது திருநீறணிந்து அதன்பின் உடம்பைத் துவட்டிக் குடுமியை நுனியில் முடித்துக் காய்ந்த கோவணத்தைப் பாய்ச்சிக் காய்ந்த வஸ்திரத்தை அரையில் தரித்து அவ்வஸ்திரத்தின் அடிமூலைகள் இரண்டையும் ஒன்றாய்ச்சேர்த்து அரையின் வலப்பக்கத்திற் செருகி, அதன்மேல் காய்ந்த துண்டொன்றை நீளத்திற் கொய்து கட்டிக்கொண்டு, ஈரவஸ்திரத்தையும் கோவணத்தையும் அலசிப் பிழிந்து மடிப்பையில் வைத்தல் வேண்டும்.

[நதியேனும் தடாகமேனும் இல்லாதவிடங்களில் வசிப்போர், ஊரையகன்று நல்லகாற்றுள்ள மைதானத்தில் வாயை நன்றாய்மூடி மூக்கின் வழியாய் உசுவாசநிசுவாசம் பண்ணிக்கொண்டு ஒருமயில் தூரத்துக்குக் குறையாமல் துரிதமாய் நடந்து திரும்பிவந்து, வீட்டினருகிலுள்ள சுத்த நீருள்ள கிணற்றிலேனும் மடுவிலேனும் தண்ணீர் மொண்டு ஸ்நாநம் செய்தல்வேண்டும். அவ்விதம் ஸ்நாநம் செய்யும்போதும், வஸ்திரத்தைத் தோய்க்கும்போதும் உபயோகிக்கப்பட்ட தண்ணீர் கிணற்றிலாவது மடுவிலாவது விழவொட்டாமல் எட்டிநின்று ஸ்நாநஞ் செய்தலும் துணிதோய்த்தலும் அவசிய மென்பது இங்கு குறிக்கத் தக்கது.

நதியில் எதிர்முகமாவும் குளத்தில் வடக்குமுகமாகவேனும் கிழக்குமுகமாகவேனும் ஸ்நாநஞ் செய்தல் வேண்டும். கோவணமட்டுந் தரித்துக்கொண்டாவது

ஒற்றைவஸ்திரந் தரித்துக் கொண்டாவது ஸ்நாநஞ் செய்தலாகாது. நிர்வாணமாய் நின்றுகொண்டு ஸ்நாநஞ் செய்தல் பேதையரது செய்கையாகும். புசித்தபின்னும் இரவிலும் தக்க காரணமின்றி ஸ்நாநஞ் செய்தலாகாது. சவுக்காரம் உபயோகித்தல் தவறு. சீயக்காய்த் தூளாகிலும் பச்சைப்பயற்றின் பொடியாகிலும் உபயோகித்துக் கொள்ளலாம்.

தண்ணீரில் ஸ்நாநஞ் செய்ய முடியாதகாலத்தில் வெந்நீரில் ஸ்நாநஞ் செய்யவேண்டும். வெந்நீரிலும் ஸ்நாநஞ் செய்யக் கூடாத காலத்தில் உடம்பை வெந்நீரினாற்கழுவி, சிரசில் தண்ணீரைப் புரோட்சித்துக் காய்ந்த வஸ்திரத்தினால் உடம்பைத் துவட்டிக்கொள்ளலாம். அதுவும் செய்யக்கூடாத காலத்தில் வஸ்திரத்தை வெந்நீரில் நனைத்துப் பிழிந்து உடம்பைத் துவட்டிக் கொள்ளலாம். கண்டஸ்நாநஞ் செய்தல் ஒரு காலத்திலும் கூடாது.

அப்பியங்கஸ்நாநம்:—இதனை ஆடவர் புதன்கிழமையிலும் சனிக்கிழமையிலும், பெண்டிர் செவ்வாய்க்கிழமையிலும் வெள்ளிக்கிழமையிலும் வெந்நீரிற் செய்தல் வேண்டும். ஸ்நாநஞ் செய்பவருடைய தேகநிலைமைக்கேற்ப காரெள்ளினின்றும் வடிக்கப்பட்ட தைலத்தை* இஞ்சி, மிளகாய் வற்றல், சீரகம், வெள்ளைப்பூண்டு, மிளகு, முதலியவற்றில் ஏதேனுமொன்றைச் சேர்த்துக் காய்ச்சித் தேய்த்துக் கொள்ளுதல் நலம். தலையில் தேய்த்த தைலத்தை வழித்து உடம்பில் தேய்த்தலாகாது. ஒருவர் தேய்த்து மிஞ்சிய

---

* தைலம்-எண்ணெய் (எள் நெய்) திலம்-எள். திலத்தின் சாரம் தைலம். சிவத்தின் சாரம் சைவம் என்றாற்போல்.

தைலத்தை வேறொருவர் தேய்த்துக்கொள்ளுதலும் ஆகாது.

அப்பியங்க ஸ்நாநத்துக்கு ஆகாத நாட்கள்.

திதி--பிரதமை, சஷ்டி, அட்டமி, ஏகாதசி, துவாதசி, சதுர்த்தசி, அமாவாசை, பௌர்ணிமை.

நாள்—உத்திரம், திருவோணம், திருவாதிரை, கேட்டை, கார்த்திகை, பிறந்தநாள், மாசப்பிறப்பு.

மேலே குறிக்கப்பட்ட கிழமைகளிலன்றி மற்றைக் கிழமைகளில் தைலமிட்டுக்கொள்ள நேரிட்டால், ஞாயிற்றுக்கிழமையில் பூவும், செவ்வாய்க் கிழமையில் மண்ணும், வியாழக்கிழமையில் அறுகம்புல்லும், வெள்ளிக்கிழமையில் நீர்த்துளியும் தைலத்திற் சேர்த்துத் தேய்த்துக் கொள்ளவும். நித்தியாப்பியங்கன நியதியுடையோர் பரிமள வஸ்துக்களைச் சேர்த்துத் தைலமிட்டுக்கொள்ளலாம். நோயாளரும் வயோதிகரும் குழவிகளும் எந்நாளிலும் தைலஸ்நாநம் பண்ணலாம்.

ஸ்நாநம், பானம், துணிதோய்த்தல், பாத்திரந் துலக்கல் முதலிய காரியங்களுக்கு உபயோகப்படுத்தப்படும் தண்ணீர் யாதொருவித அசுத்த சம்பந்தமும் இல்லாததாய் இருக்கவேண்டியது அவசியம். இதனைப் பெரும்பான்மையோர் உணராதவர்களாய்த் தங்கள் ஊருக்கு அருகிலுள்ள ஆறு, குளம், வாய்க்கால் முதலியவைகளின் கரைகளில் மலசலங்கழித்து அந்நீர்த் துறைகளிலேயே சௌசஞ் செய்தும், தங்கள் அழுக்கு வஸ்திரங்களையும் தங்கள் குழந்தைகளின் மல மூத்திரம் படிந்த துணிகளையும் கசக்கியும், கரி படிந்த பாத்திரங்களையும் எச்சிற் கலங்களையும்

தம்பலப் படிக்கங்களையும் கழுவியும், கக்கனுமிழ்ந்தும், தாங்கள் குளித்தும், தங்களுடைய ஆடு, மாடு, குதிரை, நாய் முதலியவைகளைக் குளிப்பித்தும், இன்னும் தங்களூர்ச் சாக்கடைநீரையும் தங்கள் வயற்கழிவுநீரையும் செலுத்தியும் அசுத்தம் பண்ணப்பட்ட தண்ணீரையே சாப்பாட்டுக்கும் உபயோகிக்கின்றனர். இவ்வாறு பலவிதத்தில் அசுத்தம் பண்ணப்படுகிற தண்ணீரானது மாரிகாலத்திற் பெய்யுமழையினால் ஊரிலும் ஊரின் புறத்திலுமிருந்து தன்னிடம் கொண்டு வரப்படும் மலம், மயிர், மாமிசம், கிருமி, செத்தை, சருகு முதலிய எண்ணிறந்த அசுத்தவஸ்துக்களின் சம்பந்தத்தால் மிகவும் அசுத்தமாகிறது. ஆகவே அக்காலத்தில் அந்நிலைமையிலுள்ள தண்ணீரை அருந்துவோர் வாந்திபேதி, விஷபேதியென்னும் கொடிய பிணிகளாற் பீடிக்கப்பட்டு உயிர்துறக்கின்றனர். தப்பிப் பிழைத்தோர் அந்நோய்களின் காரணம் தங்களால் உபயோகப்படுத்தப்படும் தண்ணீரின் அசுத்த நிலையென்று உணராதவர்களாய், மாரியம்மன் குற்றம் சாத்தான் குற்றம் என்னும் இவ்வித அசம்பாவித நிமித்தங்களை உண்டாக்கிக்கொண்டு அந்தப்பேய்த் தெய்வங்களுக்கு ஆடடித்துக் கொடையிட்டுக் கொடுக்கின்றனர். அன்னாரை அறிவுறுத்துவது அறிவாளர் கடனாகும்.

நேற்று அரையிற் கட்டிக்களைந்த வஸ்திரம் புதிதாயிருப்பினும் அதனைத் தோய்த்துலர்த்தாது இன்று ஸ்நானஞ் செய்தபின் கட்டிக் கொள்வது ஒரு மிகக்கொடிய அனாசாரச் செய்கை யென்பதை அறிஞர் உணர்வர். பட்டாடைகளை ஜெபம் பூசை முதலியன செய்யும் காலத்தில் மட்டும் உடுத்துக்களைந்து உடனே வெயிலில் உலர்த்தி மடித்து ஒரு தனியிடத்தில் வைத்தல் வேண்டும். வெயி

-யில்லாத காலத்தில் அவற்றையும் தண்ணீரில் அலசி யுலர்த்தியே தரித்தல் வேண்டும். வெயிற் காலத்திலும் அவற்றை வாரத்துக்கு ஒரு முறையாவது தண்ணீரில் அலசி யுலர்த்தல் வேண்டும்]

எ. பிறகு, முழங்காலளவு நீரில் நின்றுகொண்டு இரண்டு கைகளையும் கழுவி, விபூதிக்கோயில் அல்லது சம்புடத்தில் வைக்கப்பட்ட விபூதியை வலது கையின் பெருவிரல் நடுவிரல் * அணிவிரல்களால் எடுத்து இடது உள்ளங்கையில் வைத்து அதினின்றும் வலதுகைப் பெருவிரலினாலும் மோதிரவிரலினாலும் கொஞ்சமெடுத்து, அதின் ஒரு சிறு பகுதியை இராக்ஷதர் பொருட்டு நிருதி (தென்மேற்கு) மூலையிலே தெறித்துப் பிறிதொரு சிறு பகுதியைச் சிரசிலும் மற்றொரு சிறு பகுதியை வாயிலும் போட்டுக்கொண்டு, எஞ்சியதைக் கீழே சிந்தாவண்ணம் அண்ணாந்து 'சிவ சிவ', என்று சொல்லி நெற்றியிற் பூசி, பின்னர் இடது கையிலுள்ள விபூதியில் இன்னும் கொஞ்சம் எடுத்து மார்பிலும் இருகரங்களிலும் பூசிக்கொள்ள வேண்டும். (இவ்விதம் விபூதித்துகளை உடம்பிற் பூசுதல் உத்தூளனம் எனப்படும்.) அதன்பின் வலதுகை விரல்களினால் கொஞ்சம் தண்ணீரெடுத்து இடதுகையில் எஞ்சிய விபூதியில் அளவுபடப்பெய்து குழைத்து, சிரம், நெற்றி, மார்பு, கொப்புள், முழந்தாள்கள், புயங்கள், முழங்கைகள், மணிக்கட்டுகள், விலாப்புறங்கள், முதுகு, கழுத்து என்னும் இடங்களில் வளையாமலும் இடையறாமலும் ஒன்றையொன்று தீண்டாமலும் மிகவகலாமலும் நடுவிரல்கள் மூன்றினாலும் நெற்றியில் இரண்டு கடைப்

* அணிவிரல்-மோதிரமணியும் விரல்.

புருவங்களின் எல்லை யளவிலும், மார்பிலும் புயங்களிலும் அவ்வாறங்குல நீளமும், மற்ற விடங்களில் ஒவ்வோரங்குல நீளமுமாக இடல்வேண்டும். (இவ்விதம் மூன்று வரியாய் இடப்படும் விபூதிக்குறி திரிபுண்டரம் எனப்படும்)

மேற்கூறிய முறையில் விபூதி தரித்துப் பரிசுத்த உள்ளத்தினராகிப் * பஞ்சாக்கர மந்திரத்தைப் பரிவுடன் செபிப்பவர் பாவத்தினீங்கிப் பரகதி யடைவரென்பது பரமனடியார் பல்லாருரைத்த பழமொழியாகும். இவ்வுண்மையை அடியிற் கூறிய செய்யுட்களிற் காண்க:—

துன்ன வாடையொன் றுடுத்துத் தூயவெண் ணீற்றின ராகி
உன்னி நைபவர்க் கல்லா லொன்றுங்கை கூடுவ தன்றால்
பொன்னு மாமணி யுந்திப் பொருபுன லிவாமல்கு கரைமேல்
அன்ன மாருநெல் வாயி லரத்துறை யடிகடம் மருளே.

—திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார்—

சந்திரற் சடையில் வைத்த சங்கரன் சாம வேதி
அந்தரத் தமரர் பெம்மா னானல்வெள் ளேர்தி யான்றன்
மந்திர(ம்) நமச்சி வாய வாகநீ றணியப் பெற்றால் [றே
வெந்தறும் வினையு(ம்) நோயும் வெவ்வழல் விறகிட் டன்

திருநாவுக்கரசு நாயனார்—

கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூச மகிழ்விரே யாமாகில்
தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே— திருமூல நாயனார்—

சிவதீட்சை பெற்றவர்கள் அருணோதயம், மத்தியானம், சூரியாஸ்தமனம், ஆகிய சந்தியா காலங்களில்

* பஞ்சாக்கரம்-"ந ம சி வ ய" என்னும் ஐந்தெழுத்து.

திரிபுண்டரமாகவும் மற்றைக் காலங்களில் உத்தூளன மாகவும் திருநீற்றினை அணியக்கடவர். ஏனையோர் மத்தி யானத்துக்கு முன் திரிபுண்டரமாகவும் பின் உத்தூ ளனமாகவும் அணியக்கடவர். திரிபுண்டரமாக விபூதி தரிக்கும் காலங்களிலெல்லாம் முதலில் மேற்கூறிய முறை யில் உத்தூளனமாகத் தரித்த பின்னரே திரிபுண்டரமா கத் தரித்தல் வேண்டும்.

'தீட்சை' என்னும்பதம், 'உபதேசம்' அல்லது 'விரத நியமம்' எனப் பொருள்படும். இது தெய்வ வுணர்ச்சி யுடைய ஒவ்வொருவரும் அவரவர் சமயக்கொள்கைக்கும் ஆசாரத்துக்கும் தக்க முறையிற்செய்வதோர் அனுட்டான மாகும். இதனைக் கிறிஸ்துவம் முகமதியம் முதலிய சமயங் களில் ஒவ்வொருவரும் அநிபாலியத்திலேயே பெற்று அனுட்டித்து வருகிறார்கள். சைவர்களிலோ ஒரு மிகச்சிறு பகுதியினர்மட்டுமே இதனை அனுட்டித்து வருகிறார்கள். சைவசமயத்திற் பிறந்து சிவதீட்சை பெறாமல் வாழ்பவர் சைவரென்று அழைக்கப்படுதற்குச் சிறிதும் யோக்கியரா கார் என்பது வேதாகமத் துணிவாகும். சைவசமயத்திற் பிறக்கும் பாக்கியத்தைப் பூர்வசன்ம புண்ணியத்தின் பயனாகப் பெற்ற ஒவ்வொருவரும், ஒன்றாய்ப் பலவாய் உயிர்க்குயிராய் ஆடும் கருணைப் பரஞ்சோதி அருளைப் பெறு தற்கு அன்புநிலை தேடும் பருவமாகிய இப்பிறவியிலேயே சிவபெருமானைச் சிவாகமவிதிப்படி வழிபட்டுச் சிவபோக மென்னும் பேரின்பப் பெருவாழ்வினை அடைதற்கு முதற்

விபூதி தரிக்கு முறையை இன்னும் விரிவாய்த் தெரிந்து கொள்ள விரும்புவோர் ஆறுமுக நாவலரவர்களது சமய தீக்ஷிதர் அனுட்டான விதியிற் கண்டுகொள்க.

சாதனமான சிவதீட்சையை நல்லாசிரியால் உபதேசிக்கப் பெற்று அனுதினமும் அனுட்டித்து வரவேண்டும். இவ் விதம் செய்பவரே சைவரென்று அழைக்கப்படுதற்குத் தகுந்த யோக்கியதை யுடையவராவர். பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் நான்கு வருணத்த வருள்ளும், இவருள் உயர்குலத் தந்தைக்கும் இழிகுலத் தாய்க்கும் பிறந்த அநுலோமர், இழிகுலத் தந்தைக்கும் உயர்குலத்தாய்க்கும் பிறந்த பிரதிலோமர் என்னும் இருவகைப் பாகுபாட்டினையுடைய பஞ்சமரென்னும் ஐந்தாம் வருணத்தவருள்ளும் மதுமாமிசம் விலக்கிச் சிவ தீட்சை பெற்ற ஒவ்வொருவரும் சைவராவர். உயர்குலத்திற் பிறந்தும் மதுமாமிச நுகர்ச்சியுடையவரும் சிவதீட்சை பெறாதவரும் அசைவரேயாவர். மதுமாமிசத்தை விலக் காது சிவதீட்சை பெற்றவரும் மதுமாமிசத்தை விலக்கியும் சிவதீட்சை பெறாதவரும் அசைவரேயாவர்.

சிவதீட்சை—சமயதீட்சை, விசேடதீட்சை, நிருவாணதீட்சை, ஆசாரியாபிடேகம் என நான்கு படிகளை யுடைத்து. இவற்றுள், சமயதீட்சை பிரமசரிய ஆசிரமத்திலும், விசேடதீட்சை கிரகத்த ஆசிரமத்திலும், நிருவாணதீட்சை வானப்பிரத்த ஆசிரமத்திலும் ஆசாரியாபிடேகம் சந்நியாச ஆசிரமத்திலும் நலமிக்க நல்லாசிரியரால் உபதேசிக்கப்பெற்று அனுட்டித்தற்பாலது. விரதங் காத்து வேதமோதிச் சரியைபயின்று பின்னர் கிரகத்தாசிரமம்புகும் பிரமசாரி பௌதிகப்பிரமசாரி எனவும், முதலாவது ஆசிரமத்திலேயே இரண்டாவது மூன்றாவது ஆசிரமங்களுக்குரிய விசேட நிருவாண தீட்சைகளைப் பெற்று

---

* அனுட்டானம்—ஆசரிப்பு, வழிபாடு

அனுட்டித்துக் கிரியையும் யோகமும் பயின்று நேரே சந்நியாசமடையும் பிரமசாரி நைட்டிகப்பிரமசாரி எனவும் படுவர்]

அ. பிறகு, ஆசிரியர் உபதேசித்த முறையில் சந்தியா வந்தனம், செபம், சூரிய நமஸ்கார முதலியன செய்தல் வேண்டும்.

[சந்தியாவந்தன மென்பது, பின்னிரவுடன் முற்பகலும் (காலை), முற்பகலுடன் பிற்பகலும் (மத்தியானம்), பிற்பகலுடன் முன்னிரவும் (மாலை), முன்னிரவுடன் பின்னிரவும் (நடுரா) சந்திக்கும் காலங்களிற் செய்யும் தெய்வ வழிபாடாகும். இதனைச் சமயதீட்சை பெற்றோர் அருணோதயத்திலும், விசேடதீட்சை பெற்றோர் அருணோதயம் சூரியாத்தமனம் என்னும் இரண்டு காலங்களிலும், நிருவாணதீட்சை பெற்றோர் அருணோதயம், மத்தியானம், சூரியாத்தமனம் என்னும் மூன்றுகாலங்களிலும், ஆசாரியாபிடேகம் பெற்றோர் அருணோதயம், மத்தியானம், சூரியாத்தமனம், நடுரா என்னும் நான்கு காலங்களிலும் செய்யக்கடவர். (அருணோதயம்—சூரியோதயத்தை முன்னறிவிக்கும் வெளிச்சந்தோன்றும் காலம். நடுரா-இரவில் இரண்டாம் சாமத்தின் இறுதி. அதாவது இராத்திரிப் பன்னிரண்டுமணி என்றபடி).

சந்தியாவந்தனம், சிவாலயதரிசனம், சிவமந்திர செபம் ('நமசிவய' என்னும் பஞ்சாக்கரத்தை 'ஓம்' என்னும் பிரணவமந்திரத்துடன் சேர்த்து உச்சரித்தல்), சிவபூசை,

† அருணன், சூரியனது தேர்பாகன்.

சிவபுராண *படனம், சிவபுராண † சிரவணம், வேதாத்தியயனம், தமிழ்வேதபாராயணம், சிராத்தம் முதலியன செய்யுங் காலங்களில், குடுமியிலும், காதுகளிலும், பூணுலிலும் ஒவ்வொரு உருத்திராக்கமணியும், சிரசில் இருபத்திரண்டு மணிகள் கோத்த வடமும், கழுத்தில் முப்பத்திரண்டு மணிகள் கோத்த வடமும், மார்பில் நூற்றெட்டுச் சிறியமணிகள் கோத்த மாலையும், புயங்களில் தனித்தனிப் பதினறு மணிகளும், மணிக்கட்டுகளில் தனித்தனிப் பன்னிரண்டு மணிகளும் தரித்துக்கொள்ளல் வேண்டும். உருத்திராக்கங்களை, வில்வப்பழத் தோட்டை உரைத்து வட்டவடிவாகச் செய்யப்பட்ட வில்லைகளை இடையிடையேயிட்டு முகத்தோடு முகமும் அடியோடு அடியும் கூடும்படி கோத்தல் உத்தமம். வெள்ளி, பொன், பவள முதலியவற்றை இடையிட்டுக் கோத்தல் மத்திமம்.]

கூ. பிறகு, நதியினின்றும் புறப்பட்டு, வழியில் ஒருவரிடமும் வீண்வார்த்தை பேசாமலும் ஒருவரையும் தீண்டாமலும் பஞ்சாக்கரத்தை மனதில் செபித்துக்கொண்டு வழியின் வலது பக்கமாகத் துரிதமாய் நடந்து, வழியிலுள்ள ஒரு நந்தவனத்துட் சென்று புட்பச்செடிகளை வளர்ப்போனுக்கு இயன்ற பொருளை உதவி, பழுப்பு, அழுகல், பூச்சிவெட்டு முதலிய குற்றங்களில்லாத பத்திர புட்பங்களைப் பறித்துக் கழுவிக் குடலையில் வைத்துக்கொண்டு வீட்டை யடைந்து, கால்கழுவி உள்ளே புகுந்து, ஈர வஸ்திரங்களை விரித்து ஒருவருந் தீண்டக் கூடாத உயர்வான ஒரு கொடியில் போட வேண்டும்.

ம. பிறகு, * பூசையறைக்குட் சென்று, விதிக்கப்பட்ட

*படனம்-படித்தல். சிரவணம்-கேட்டல்.

† சிவபூசை செய்யவிரும்புவோர் அதனைச் செய்யுமுறையைத் தமது நல்லாசிரியர் வாயிலாய்த் தெரிந்து கொள்க.

முறையிற் சிவபூசை செய்து, "ஓம் நமசிவாய சுபம் சுபம் குரு குரு சிவாயநம ஓம்" என்று ௱அ முறை மனவாயினாற் செபித்துக் கால அவகாசத்துக்கேற்ப விதித்த முறையில் திருமுறைப்பாராயணம் செய்து, நெற்றியில் விபூதிதரித்துச் சந்தனப்பொட்டும் இட்டுக்கொள்ளவேண்டும். (சாந்துப்பொட்டு சைவர்களுக்கு அனுசிதம்).

[சிவபூசை செய்யும்போது சிவாஷ்டோத்திர சத்நாமங்களைப் பிழையின்றித் திருத்தமாய் உச்சரித்து அருச்சனை செய்தல்வேண்டும். அந்நாமங்களைத் திருத்தமாய் உச்சரிப்பது வடமொழி பயிலாதவர்களுக்கு அரிதாகையால் அன்னார் திருநாவுக்கரசு நாயனார் சிவபெருமானை நூற்றெட்டுமுறை போற்றிப் பாடியருளிய "கற்றவர்களுண்ணும் கனியே போற்றி" என்னும் தொடக்கத்தையுடைய திருவாரூர்ப் போற்றித் திருத்தாண்டகத் திருப்பதிகத்தை ஓதி அருச்சனை செய்யக் கடவர். சிவபூசைக்கு இடம்பண்ணும் காலத்திலும், அபிஷேக நைவேத்திய தூப தீப ஆராதனைகள் செய்யுங் காலத்திலும் எப்பெருமானுடைய திருவடித் தாமரைகளில் மனதை நிறுத்தி, வாயினால் திருமுறைகளை ஓது முறையில் ஓதி, மன வாக்குக் காயங்களை ஒருவழிப்படுத்துக. இவ்விதஞ் செய்யாது, மனம் பிறிதொன்றை நாட, வாய் எவரிடத்தேனும் யாதாமொன்றைப்பேச, காதுகள் அருகில் நடக்கும் வியவகாரத்தைக் கேட்க, கண்கள் மற்றொன்றைப் பார்க்க, கைகளாற் செய்யப்படும் பூசையானது ஆசையுடன் மாச்சிமிழ்க்கும் மாகுலவர் * செய்யும் ஆகுல் வோசை † யே யாகும் என்றறிக.

---

* வலை விரித்து மிருகங்களைக் கட்டிப்பிடிக்கும் வேடர்.
† ஆடம்பரவேலி.

டுக. பிறகு, நீராகாரம் அல்லது நொய்க்கஞ்சி சாப்பிட்டு, வாயையும் கைகளையும் கழுவிக்கொள்ளல் வேண்டும்.

[காப்பிக்கொட்டை, தேயிலை, கோக்கோ என்னுமிவைகள் இயற்கையிலேயே நச்சு(விஷ)த்தன்மை உடையனவாயிருத்தலால் அவற்றாற் செய்யப்பட்ட கஷாயங்கள் நமது தேச சீதோஷ்ணத்திற்கு ஒத்துக்கொள்ளாது சரீரத்துக்குத் தீங்கிழைப்பனவென்று வைத்தியநிபுணர்கள் அறைவதாலும், அவற்றின் கொடுமையை அநேகர் அனுபவத்திற்கண்டு அவற்றை நீக்கியிருப்பதாலும், அவை குறைந்த வருமானமுள்ளவர்களிற் பலரை வறியராக்கி விட்டபடியாலும், அவற்றைச் சாப்பிடும் வழக்கமுடையோர் அக்கொடிய வழக்கத்தை உடனே நிறுத்தக்கடவர். வேண்டுமானால் சுக்கையும் நன்னாரிவேரையும் பொடித்துத் தண்ணீரிற் கலந்து காய்ச்சி அதில் சர்க்கரையும் பாலுங்கலந்து சாப்பிடலாம். அல்லது ஆவாரம்பூவை இலேசாகக் கருக்கிக் கஷாயஞ்செய்து உபயோகிக்கலாம். அல்லது கோதுமையைக் கருகவறுத்துப் பொடியாக்கி உபயோகிக்கலாம்.

கஉ. பிறகு, மாணவர் நல்ல வெளிச்சமுள்ள சுத்தஞ் செய்யப்பட்ட ஓரிடத்தில் சுவரிற் சாயாது சம்மணங்கூட்டி நிமிர்ந்துட்கார்ந்து புத்தகத்தைக் கையிலேந்திக்கொண்டு படித்தல்வேண்டும். ஏனையோர் தங்கள் வேலையில் நிற்றல்வேண்டும்.

[வேண்டுமானால் ஒரு சிறுகைமேசையை எதிரில் வைத்துப் புத்தகத்தை அதன்மேல்வைத்து வாசிக்கலாம். புத்தகத்தை மடியில்வைத்து வாசித்தலாகாது]

கங. பிறகு, ஒன்பது அல்லது ஒன்பதரை மணிக்கு முகம் கை கால்களைக் கழுவி, நெற்றியில் விபூதிதரித்து,

கழுவப்பட்ட இலையை மெழுகிக்காய்ந்த இடத்திலேபோட்டு அதன்முன் கிழக்குமுகமாகச் சம்மணங்கூட்டி உட்கார்ந்து, இலையில் உப்பு, பதார்த்தம், சோறு, பருப்பு, நெய் முதலியன வரிசைக்கிரமமாகப் படைக்கப்பட்டபின் சோற்றில் ஒரு பாகத்தைப் பருப்பும் நெய்யும் கலந்து பிசைந்து * நிவேதனம் பண்ணிக் † கடவுளைத்தொழுது காக்கைக்கிட்டு ஒருவரிடமும் பேசாமலும் சிரிக்காமலும் வேறொன்றையும் பார்க்காமலும் உணவைச் சிந்தாமலும் செவ்விதாகஉண்ணவேண்டும். போசனமானவுடன் இலையை எடுத்துக்கொண்டு வீட்டின் பின்பக்கஞ்சென்று தக்கவிடத்தில் எறிந்துவிட்டு, கையையும் வாயையும் கால்களையும் நன்றாய்க்கழுவி ஆசமனம் பண்ணி, பின் சாப்பிட்ட இடத்தைப் பசுவின்சாணங் கலந்தநீரால் சுத்தஞ்செய்தல் வேண்டும்.

[கிழக்குமுகமாக உட்காரமுடியாத விடத்து மற்றத் திசைகளை நோக்கி உட்காரலாம். கால்கழுவிய ஈரம்புலருமுன்னே உண்ணத்தொடங்கவேண்டும்.

---

* தேவர்களுக்குச் சமர்ப்பித்தல். •உள்ளங்கையிலே கொஞ்சம் தண்ணீர்விட்டு அந்தத் தண்ணீரில் பெரும்பாகத்தை இலையைச் சுற்றிப் பெய்து எஞ்சியபாகத்தை ஆசமனம் பண்ணுதலே நிவேதனமாகும். †'சோறு', 'அன்னம்' எனுந்தொடக்கத் தேவாரத் திருப்பாசுரங்களையேனும் வேறு பாசுரங்களையேனும் ஓதித் துதிக்கலாகும்.

திருச்சிற்றம்பலம்

சோறு கூறை யின்றியே துவண்டு தூர மாய்நமக்
கேறு சுற்ற மெள்கவே யிடுக்க ணுய்ப்ப தன்முனம்
ஆறு மோர்ச டையினு ளாதி யானை செற்றவன்
நாறு தேன்ம லர்ப்பொழில் நலங்கொள் காழி சேர்மினே. [சம்பந்தர்

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னன் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோவிப் பிறவியே—அப்பர்

திருச்சிற்றம்பலம்

வாழையிலையிற் சாப்பிடுவது உத்தமம்; மா, பலா, புன்னை, தாமரை, இலுப்பை, ஆல், சுரை, முதலியவற்றின் இலைகளிற் சாப்பிடுவது மத்திமம்; கலங்களிற் சாப்பிடுவது அதமம். பொன் வெள்ளிகளாற் செய்யப்பட்ட கலன்களுக்கு எச்சிலில்லை யென்பது அறியாமையிலும் அறியாமையாகும். சிவதீட்சைபெற்றுள்ளோர் கலத்திற் சாப்பிடுதல் மாமிசஞ் சாப்பிடுதலை ஒக்கும்.

சாப்பிட்டு முடிந்தபின்னரேயன்றி இடையில் நீரருந்தலாகாது. இடையில் நீரருந்த நேரிடில், பாத்திரத்தை இடது கையிலெடுத்து அதனடியை வலதுகையின் மணிக்கட்டுப் புறத்தினால் ஏந்திக்கொண்டு அருந்தவேண்டும். சாப்பிடுமிடையில் யாதாயினும் உமியவேண்டின் இலையின் முற்பக்கத்தைத் தூக்கி அதன்கீழே உமியவேண்டும். இலையின்முன் அதிகநேரம் இருக்கக்கூடாது. ஒரு நாழிகை நேரத்துக்குள் சாப்பிடவேண்டும்.

விருந்தினர் முதலியோர், நோயாளர், கருப்பிணிகள், பெற்றோர், குழந்தைகள், பசுக்கள், பட்சிகள் ஆகிய இவர்கள் பசித்திருக்கத் தான் முன்னதாக உண்ணலாகாது. படுத்துக்கொண்டும், நின்றுகொண்டும், நடந்துகொண்டும், வெளியிடத்திலிருந்துகொண்டும், சட்டையிட்டுக்கொண்டும், கட்டிலின்மேலிருந்துகொண்டும் உண்ணலாகாது. யாதொன்றையும் ஆசையுடன் அளவுக்குமிஞ்சிப் புசித்தலுமாகாது. பெரியோருடனிருந்து உண்ணும்போது அவர் உண்ணத்தொடங்குமுன் உண்ணுதலும், அவரை நெருக்கியிருத்தலும், அவர் எழுதற்குமுன் எழுதலும் ஆகா.

உண்ணும்போது இனிப்புப் பதார்த்தங்களை முதலிலும், கைப்புப் பதார்த்தங்களைக் கடையிலும் மற்றவைகளை

இடையிலுமாக உண்ணவேண்டும். புளியையும் மிளகாயை யும் கூடியவரை நீக்கிப் புசித்தல் நலம். வேண்டின் எலு மிச்சம்பழத்தையும் மிளகையும் கொஞ்சமாய் உபயோ கித்துக்கொள்ளலாம்.

சாப்பிட்டபின் இல்வாழ்வோர் தாம்பூலம் தரித்துக் கொள்ளலாம். ஏனையோர் கிராம்பு, ஏலம், சுக்கு, வால் மிளகு ஆகியவற்றுள் ஏதேனுமொன்றை வாயில் போட் டுக்கொள்ளலாம். ஆனால் ஒருவரும் புகையிலை போட்டுக் கொள்ளக்கூடாது.]

கச. பிறகு, மாணவர் பள்ளிக்கூடத்துக்கும் ஏனையோர் தங்கள் தொழிற்சாலைக்கும் வீதியின் வலதுபாரிசமாகத் துரிதமாய்ச் செல்லக்கடவர்.

[வழியில் நிகழும் வேடிக்கையையாவது சண்டையை யாவது பார்த்து நிற்கக்கூடாது. செல்லுமிடம் அதிகத் தூரத்திலிருந்தால் வண்டியிலேறிச் செல்லலாம். ஆனால் ரிக்ஷா வென்னும் ஆளிழுக்கும் வண்டியில் ஏறிச்செல்வது அடாதகாரியமாகும். இதனை, தன்னுயிரைப்போல் மன்னு யிரைப்பார்க்கும் சித்தத்தினையுடையவர் உணர்வர். தற் காலத்தில் தரணியெக்கும் தடுப்பவரின்றித் தாராள மாய்த்திரிந்து மூலைமுடுக்குகளிலெல்லாம் முட்டின்றி நுழைந்து காலபாசம் பிடித்தெழுந்து பாலகர் விருத்தர் பழையரெனது எவரையும் எட்டுணை யிரக்கமுமின்றி ஈர்த் துச்செல்லும் எமதூதுவரைப்போல எதிர்ப்பட்டவரையே யன்றி இவர்ந்தாரையும் எமலோகத்துக் கேற்றும் மோட் டார் வண்டிகளில் ஏறிச்செல்லுதல் தமதின்னுயிரிடத்து அன்பில்லாதவராது செய்கையாகுமென்பதை ஆடவரும் பெண்டிரும் அறிந்தொழுகவேண்டுவது அவசியமென்பதை அனைவருக்கும் அறைந்து பறைசாற்ற அடியேனுக்கு

ஆசை மிகவுளது. மாட்டுவண்டி குதிரைவண்டிகளில் ஏறிச்செல்வோர் அவ்வண்டிகளில் ஏறுமுன் அவற்றிற் பூட்டப்பட்டுள்ள பிராணிகள் நோயற்றவைகளாயிருத்தலை யும், ஏறியபின் வண்டியைச் செலுத்துபவனால் அவை அநி யாயமாய்ப் புடைக்கப்படாதிருத்தலையும் கவனிக்கக் கட மைப் பட்டவராவர். காலில் செருப்புப் போட்டுக் கொள் ளலாம். பூட்ஸ் என்னும் பாதரக்ஷைகளைக் குளிர்ந்த தேசங் களிலன்றி மற்றையவிடங்களில் உபயோகிப்பது அநுசிதம். இதனைப் பலர் அறியாதவராய் அயர்வுற்று இடம்பமென் னும் மகரவாய்ப்பட்டு மயங்குகின்றனர். வழியில் ஆலயங்க ளிருப்பின் அங்கு செருப்பைக்கழற்றி நின்றுவணங்கிச் செல்லவேண்டும். இரவில் மிதியடிபோட்டுநடத்தல் அவ வசியம். அன்றியும் சோர்வினாற் பிறிதொரு சிற்றுயிர்ப் பிராணிக்குத் தீங்கிழைத்தலாகிய குற்றத்தின் பாற்படுத்து மாதலால் அது ஒரு கொடிய பாவச்செய்கையு மாகும். பாதகுறட்டுக் கட்டையை மேற்கூறிய காரணத்தினால் ஒருகாலும் உபயோகித்தலாகாது.

பெண்பிள்ளைகள் தங்கள் தாய்மொழியிற் கல்விகற்றல் அவசியம். அன்னார்க்கு அது ஒன்றே அமையும். அவர் களைத் தண்ணீரென்று தமிழிற் சொன்னால் தண்டிக்கும் தறுகண்ணாளருடைய பள்ளிக்கூடங்களுக்கும், சமயபேத போதனை செய்தும் சமயநிந்தனைப் பாட்டுக்களைக் கற் பித்துப் பாடச்செய்தும் அவர்களுடைய நன்மனத்தைக் கெடுக்கும் வன்கண்ணருடைய பள்ளிக்கூடங்களுக்கும் அனுப்புவது ஒரு மிகப்பெருந் தவறான காரியமாகும். இதனைத் தங்கள் தேசத்தினிடத்தும் தாய்மொழியினிடத் தும் சமயத்தினிடத்தும் மக்களிடத்தும் உண்மையான அன் பும் விசுவாசமுமுள்ள தாய்தந்தையர் ஒவ்வொருவரும்

ஊகித்தறிவதுடன், இந்த உண்மையினை அறியாதவரை அறிவுறுத்தவுங் கடவர்.]

கரு. பள்ளிக்கூடத்தை அடைந்ததும் கால்களைக்கழுவிக் கொண்டு உள்ளே சென்று விதிக்கபட்டவிடத்தில் உட்கார்ந்து, பக்கத்திலுள்ள மாணவரிடம் வீண்பேச்சுப் பேசாமலும் வீண்பேச்சுக்குச் செவிகொடாமலும் புத்தகத்தைவிரித்துப் பாடத்தை மனனம்பண்ணிக்கொண்டிருத்தல்வேண்டும். உபாத்தியாயர் வந்தவுடன் மாணவரெல்லோரும் ஒருமித்தெழுந்து நமஸ்கரித்துத் தோத்திரஞ் செய்து, அவர் விடையளித்தபின் உட்கார்ந்து, கண்களையும் செவிகளையும் ஒன்றுபட்ட மனதுடன் அவரிடத்திலே செலுத்தி அவர் போதிப்பதை உட்கொண்டு அவர் கேட்கும் வினுக்களுக்கு எழுந்துநின்று வணக்கத்துடன் விடையளிக்கவேண்டும்.

[பள்ளிக்கூடங்களில் மாணவருக்குச் சமயக்கல்வி கற்பித்தல் அவசியமாகும். பெண்பிள்ளைகளுக்குத் தனியாய்ப் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி, அங்கு அவர்களுக்குச் சமயக் கல்வி கற்பித்தலும் அவசியமாகும்.]

கசு. இடைவிடுமுறையில் துரிதமாய்நடந்து வீட்டையடைந்து கால்களைக்கழுவி உள்ளேசென்று சட்டையைக் கழற்றிச் சலங்கழித்துச் சௌசம்பண்ணி முகத்தைக்கழுவி நெற்றியில் விபூதியணிந்து, சிற்றுண்டியருந்தி, வாய் கை கால்களைக்கழுவி ஆசமனம்பண்ணி, நெற்றியில் மறுபடியும் விபூதியணிந்து முன்போலவே பள்ளிக்கூடத்துக்குச் செல்லவேண்டும். மாலையில் பள்ளிக்கூடம் விடும்போது உபாத்தியாயரை நமஸ்கரித்துத் தோத்திரஞ்செய்து விடைபெற்றுக்கொண்டு வீட்டையடைந்து சட்டையைக் கழற்றிவிட்டுக் கூடப்படிக்கும் மாணவருடன் வீட்டைச் சார்ந்த தோட்டத்திலாவது அல்லது விளையாட்டுக்கென்று

அமைக்கப்பட்டுள்ள ஒரு பொதுவிடத்திலாவது ஒன்றே கால் அல்லது ஒன்றரை நாழிகைநேரம் விளையாட வேண்டும். விளையாடுவதற்கு இயலாதவர்கள் சுத்தமான காற்றுவீசும் மைதானத்திலேனும் கடற்கரையிலேனும் துரிதமாய் நடக்கவேண்டும்.

[மலத்தைப்போலவே சலமும் அசுத்தமாதலால் மலங் கழித்தபின் சௌசஞ்செய்வது எப்படி இன்றியமையாததோ அப்படியே சலங்கழித்தபின்னும் சௌசஞ்செய்தல் இன்றியமையாததாகும். ஆனால் இதனைப் பெரும்பான்மையோர் அவமதித்தொழுகுகின்றனர். அவ்வாறொழுகுவோர் தங்களைத் திருத்திக் கொள்வதுடன் தங்கள் பெண்டுபிள்ளைகளையும் அறிவுறுத்தித் திருத்தக்கடவர். மூத்திரம் பெய்தவுடனே எழுந்துவிடாது கொஞ்சநேரமிருந்து மூத்திரக்குழாயிலுள்ள மூத்திரம் முற்றிலும் வெளியானபின்னரே எழுதல்வேண்டும். அவ்விதம் செய்யாதெழுந்தால் மூத்திரக்குழாயிலுள்ள மூத்திரம் வஸ்திரத்திலேனும் உடம்பிலேனும் இறங்கி அசுத்தப்படுத்துமென்பதை அனுபவத்தில் ஒவ்வொருவரும் அறிந்திருக்கக்கூடும்.]

௧௭. பிறகு, மேலே கூறிய முறைப்படி மலசலங் கழித்துச் சௌசஞ்செய்து ஸ்நாநம்பண்ணித் தோய்த்துலர்ந்த வஸ்திரங்கட்டித் திருநீறணிந்து சந்தியாவந்தனம் பண்ணவேண்டும்.

[சாயங்காலம் ஸ்நாநம்பண்ண இயலாதவர்கள் முகங் கால் கழுவி உடம்பைச் சுத்திசெய்து சிரசில் தண்ணீரைப் புரோட்சித்துத் தோய்த்துலர்ந்த வஸ்திரங் கட்டிக்கொண்டு சந்தியாவந்தனம் செய்யலாம்.]

௧௮. பிறகு, சிவாலயஞ்சென்று விதித்த முறையிற் சிவதரிசனம்பண்ணித் திரும்பவேண்டும்.

[சிவாலய தரிசன விவரம் பின்னர்க்காண்க.]

௧௯. பிறகு, மேலே கூறியமுறையிற் போசனஞ்செய்து முடித்தல் வேண்டும்.

[இரவில் மிகப்புசித்தலாகாது. புளியையும் தயிரையும் மோரையும் நீக்கிப் பசுவின்பாலே உபயோகித்தல் நலம். இயலாதவர்கள் சாதம்வடித்த அன்னப்பாலே உபயோகிக்கலாம். எருமைப்பால மந்தகுணமுடையதாதலால் அதனை உபயோகித்தல் அநுசிதம்.]

௨௰. பிறகு, சிறுபொழுது சுத்தமான காற்றுவீசுமிடத்தில் குறுநடை கொள்ளவேண்டும்.

௨௧. பிறகு, திருவிளக்கின் வலப்பக்கத்தில் மேலேகூறிய முறையில் உட்கார்ந்து படித்தல்வேண்டும்

௨௨. பிறகு, எழுந்து சலங்கழித்துச் சௌசஞ்செய்து, கை வாய் முகம் கால் கழுவி, வடக்குமுகமாக நின்று நெற்றியில் விபூதி தரித்துக்கொண்டு பின்வருமாறு செபிக்க வேண்டும்:—

"சர்வவல்லமையும் இரக்கமும் அன்புமுள்ள எங்கள் சச்சிதானந்தப் பரசிவமே! உம்முடைய அறிவிலாக் குழவிகளாகிய நாங்கள் மனதினாலும் வாக்கினாலும் காயத்தினாலும் அறிந்தும் அறியாமலும் செய்த பாவங்களனைத்தையும் மன்னித்து நாங்கள் இனி யாதொருவித பாவச்செயலுக்கும் ஆளாகாவண்ணம் எங்களைத் தடுத்தாட்கொண்டருளப் பிரார்த்திக்கின்றோம் சுவாமி! எங்கள் கருணை வெள்ளமே! இப்பொய்யுலக வாழ்க்கையை மெய்யென்றெண்ணி மயங்குகின்ற நாங்கள் எங்களுக்கு உம்முடைய * பாதாம்புயங்களின்றிப் புகலிடம் பிறிதொன்றின்மையை உமதருளாலே யுணர்ந்து உம்மையே போற்று

* பாதாம்புயம் - பாததாமரை.

கின்ஹோம். இவ்விதம் போற்றும் எங்களைக் கைவிடாதீர். கைவிடில் நாங்கள் வீணாகக் கெட்டலைந்து தட்டழிந்து வஞ்சகமன்வாதனைக்கும் வன்பிறவிவேதனைக்குமே ஆளாகி வாளாமாழ்குவோம். உம்மையே தாரகம் என்றடைந்த எங்களைக் கைவிடில் அவ்விதம் கைவிடுதல் உமது மகிமைக்கும் தயாளகுணத்துக்கும் ஒரு மிகப்பெரிய குறையன்ஹோ? அன்றியும் உமக்கும் எங்களுக்கும் ஆண்டான் அடிமை என்னும் பந்தக்கட்டு அநாதியாய் ஏற்பட்டுளதாதலால் எங்களைக் காத்திரட்சிப்பது உமது கடனுமன்ஹோ? ஆதலால் நாங்கள் மிகக்கொடிய பாவிகளாயிருப்பினும் எங்களையும் கைவிடாதீர், கைவிடாதீர் என்று பின்னும் பலமுறை பிதற்றுகின்ஹோம் சுவாமி! எங்கள் கருணைப்பிரவாகமே! நீர் எங்கள் இருதயத்திலே *அந்தரியாமியாய்நின்று இடைவிடாது நடித்துக் கொண்டிருத்தலின் நாங்கள் இப்பொழுது உம்முடைய பாதுகாப்பில் எங்களை ஒப்புவித்து நிர்ப்பயமாய் நித்திரைசெய்யப் போகின்ஹோம். இன்றிரவில் நாங்கள் நித்திரைசெய்யும்போது துட்டசெந்துக்களின் தீயசெயல்களுக்கு ஆளாகாமலும், கெட்டசொப்பனங்களினுல் வாதிக்கப்படாமலும், மற்றெவ்வித விக்கினங்களினுலும் நலியாமலும் எங்களைக் காத்து, நாங்கள் அதிகாலையில் நித்திரை விட்டெழும்படி எங்களுக்குக் கிருபையருளுமாறு உம்முடைய மேலான கருணையை வேண்டிக்கொள்கின்ஹோம் சுவாமி! தயாநிதியே! எங்களிற் சிலர் ஒருவேளை இன்றிரவில் இறந்துபோகும்படி உமது திருவுளசங்கற்பமாயிருப்பின், அன்ஞேர் விஷயமாய் நாங்கள் செய்துகொள்ளும் விண்ணப்பம் ஒன்றுண்டு. அஃதியாதெனில், அவ்விதம் இறக்கவிருக்கும்

* அந்தரியாமி - சீவசாட்சி.

எங்களுடைய கடைசிசெபம் இதுவேயாகக்கொண்டு, எங்கள் இருவினைக் கூட்டங்களையும் அறவேயொழித்து, எங்களை உம்முடைய அடியார் திருக்கூட்டத்திற் சேர்த்து, நாங்கள் உம்முடைய பாதாரவிந்தத்தை அடைந்து நித்தியானந்தப் பெருவாழ்வினை எய்துமாறு கிருபையருளப் பிரார்த்திக்கின்றோம் சுவாமி !

அரும்பொனே மணியே யென் அன்பே யென்அன்பான
வறிவேயெ னறிவிலூறும்
ஆனந்த வெள்ளமே யென்றென்று பாடினே
னாடினே னாடிநாடி.
விரும்பியே கூவினே னுலறினே னலறினேன்
மெய்சிலிர்த் திருகைகூப்பி
விண்மாரி யெனவெனிரு கண்மாரி பெய்யவே
வேசற்ற யர்ந்தேனியான்
இரும்புநேர் நெஞ்சகக் கள்வனா னாலுமுனை
யிடைவிட்டு நின்றதுண்டோ
என்றுநீ யன்றுநா னுன்னடிமை யல்லவோ
யாதேனு மறியாவெறுந்
துரும்பனே னென்னினுங் கைவிடுத னீதியோ
தொண்டரொடு கூட்டுகண்டாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே
—தாயுமானவர்]

௨௩. மேற்கூறிய முறையில் துதித்துமுடிந்தவுடனே மறுபடியும் நெற்றியில் திருநீறு பூசிக்கொண்டு விரிப்பில் வடக்குமுகமாக நிமிர்ந்துட்கார்ந்து வாயையும் கண்களையுமூடிக் கால்களை மடக்கிக் கைகளை நிமிர்த்து மணிக்கட்டுகளின் புறங்களை முழந்தாண் முட்டுகளிற் பொருந்த வைத்து, பெருவிரல்களிரண்டையும் மேனோக்கிநிமிர்த்து, ஆட்காட்டிவிரல்களை ஏனைய விரல்களினின்றும் விலக்கி வளைத்து அவற்றின் நுனியை மேற்கூறிய பெருவிரல்களின் அடியிற்சேர்த்து, பிறகு பிராணவாயுவை

† பாதாரவிந்தம்-பாததாமரை.

வெளியே விட்டுப் பின்னர் அதனை முற்றவிழுத்து உட்கொண்டு, அதனை அந்நிலையிற் சற்றுநேரம் நிறுத்தி, மனதை ஒன்றிலும் செல்லவொட்டாது தடுத்து நடராசராது * குஞ்சிதபாதத்தை மனக்கண்ணினால் தரிசித்து, 'ஓம்' என்னும் பிரணவ மந்திரத்தை மனவாயால் உச்சரித்தல்வேண்டும்.

[இவ்விதம் இருக்கும் நிலையானது 'சின்முத்திரை' எனப்படும். சின் (சித்) என்னும் பதம் 'ஞானம்' எனவும் 'முத்திரை' என்னும் பதம் 'அடையாளம்' எனவும் பொருள்படும். ஆகவே 'சின்முத்திரை' என்பது ஞான நிலையின் அடையாளமாகும். இதனை 'ஞானமுத்திரை' என்றும் 'தேவதியான முத்திரை' என்றும் கூறினும் அமையும். இதன் தாற்பரியம்- "சீவாத்மாவானவன் தன்னிடத்துள்ள இரசசு தமசு என்னும் இரண்டு குணங்களையும் ஒழித்துச் சுத்தசத்துவ குணத்துடன் நின்று, மனம் புத்தி அகங்காரம் என்னும் மூன்று கரணங்களுஞ் செயலற்றொழிந்த நிலையில் அன்புறு சித்தத்தினமர்ந்து, மெய் வாய் மூக்குச் செவி என்னும் நான்கு பொறிகளும் முறையே பரிசத்தையும் உருசியையும் நாற்றத்தையும் சப்தத்தையும் அறியும் அறிவினை இழந்துநின்ற நிலையில் நடராசரது குஞ்சிதபாதத்தை மனக்கண்ணினாற் கண்டு, அக்காட்சிவிசேடத்தால் அநாதியாயும் பலபிறவிகளில் தன்னால் ஈட்டப்பட்டும் தன்னைப் பந்தித்துநிற்கும் இருவினைப்பயன்களை அனுபவித்து ஒழிப்பதற்காகத் தான்பெற்றுள்ள தூல சூக்கும காரண சரீரங்கள் மூன்றையும், அவற்றின் சார்பாய காமம் வெகுளி மயக்கம் என்னும் முக்குற்றங்களையும், ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களையும் அவ்வினைகளுடன் ஒழித்து, சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி என்னும்

---

* குஞ்சிதபாதம்-வளைந்த (தூக்கிய) திருவடி.

சீவாவத்தை மூன்றில் சாக்கிராவத்தைக்கும் சொப்பனாவத்தைக்கும் இடையில் சித்தத்தைநிறுத்தி அவ்வவசரத்தில்(சமயத்தில்) பரமாத்மாவில் ஐக்கியமாக முயற்சிக்கக்கடவன்'' என்பதாம். இவ்வாறு முயலுங்கால் சீவான்மா நிற்குநிலை 'துரியம்' எனவும் அத்துரியாவத்தையில் விளங்கும் பரமான்மாவின்கண் சித்தம் லயப்பட்டு நிற்குநிலை 'துரியாதீதம்' எனவும்படும். இவ்வாறு சீவான்மாவுக்கு இயற்கையில் அமைந்துள்ள சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி என்னும் மூன்றனுடன் முத்தியை விரும்பும் சீவான்மா முயற்சிவயத்தாற் பெறும் துரியம் துரியாதீதம் என்னும் அவத்தைகள் இரண்டுஞ்சேர்ந்து அவத்தைப் பகுதிகள் ஐவகைத்தாதலை யறிக.

இவ்வவத்தைகளின் தானுதிவிவரங்கள் பின்வருமாறு காண்க:—

(க) சாக்கிரம்—சீவான்மா- மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஞானேந்திரியங்கள் ஐந்தும், அவற்றின் விடயங்களாகிய பரிசம், உருசி உருவம் வாசனை சத்தம் என்னும் ஐந்தும், வாக்கு பாதம் பாணி(கை) பாயுரு(மலவாயில்) உபத்தம்(குறி) என்னும் கன்மேந்திரியங்கள் ஐந்தும், அவற்றின் விடயங்களாகிய வசனம் கமனம்(போதல்) தானம் விசர்க்கம்(மலங்கழித்தல்) ஆனந்தம் என்னும் ஐந்தும், * பிராணன்,

---

* பிராணன்-உயிர். அபானன்-உச்சத்தலத்தினிற்கும் வாயு. சமானன்-கந்தரக்குழியின் சந்திடை நிற்கும் வாயு. (கந்தரம்-கழுத்து) உதானன்-நாபியினிற்கும் வாயு. (நாபி-கொப்புள்) வியானன்-சரீரமுழுதும் வியாபித்திருக்கும் வாயு. நாகன்-நீட்டலும் முடக்கலும் கிளத்தலுஞ் செய்விக்கும் வாயு. கூர்மன்-உரோமம் புளகிப்பித்து இமைப்பிக்கும் வாயு கிருதரன்-முகத்திடைநின்று தும்மலும் சினமும் வெம்மையும் விளைவிக்கும் வாயு. தேவதத்தன்-ஓட்

அபானன் சாமானன் உதானன் வியானன் நாகன் கூர்மன் கிருதரன் தேவதத்தன் தனஞ்சயன் என்னும் வாயுக்கள் பத்தும் மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் அந்தக்காரணங்கள் நான்கும் ஆகிய முப்பத்துநான்கு தத்துவங்களுடன் நெற்றியில் இருகண்களுக்கும் நடுவினின்று உலகபோகங்களை அனுபவிக்கும் நிலை சாக்கிரமாகும். இவ்வவத்தை இயற்கையில் முக்குண வயப்பட்டதெனினும் மிகையாய்க் கொள்வது சத்துவமேயாதலின் இதன் குணம் சத்துவமென்பர் அறிஞர்.

(உ) சொப்பனம்-சீவான்மா மேற்கூறிய முப்பத்துநான்கு தத்துவங்களில் ஞான கருமேந்திரியங்கள் பத்தும் செயலற்று ஓய்ந்தநிலையில் எஞ்சிய இருபத்துநான்கு தத்துவங்களுடன் கண்டத்தினின்று சாக்கிரவாசனை விடயபோகங்களை மனதினால் அனுபவிக்கும் நிலை சொப்பனமாகும். இதன் குணம் இராசதம்.

(ந) சுழுத்தி—சீவான்மா பிராணன் சித்தம் என்னும் இரண்டு தத்துவங்களுடன் இருதயத்தினின்று சாக்கிர சொப்பனவத்தைகளில் தான் நிகழ்த்தியனவும் அனுபவித்தனவுமான விடயங்களைத் தன்னுள் அடக்கிக்கொண்டு அவற்றின் வாசனையுடனே விடய போகங்களை மாயாவிருத்தியென்னும் சூக்குமகரணங்களால் அனுபவிக்கும் நிலை சுழுத்தியாகும். இதன் குணம் தாமதம்.

(ச) துரியம்—சீவான்மா மேற்கூறிய சாக்கிரத்தில் நிக

டமும் இளைப்பும் வியர்வையும் வருவிக்கும் வாயு. தனஞ்சயன் உயிர் போகினும் போகாது உடலை வீக்கித் தலைகிழித்தகலும் வாயு.

மும் இந்திரியவியாபாரமும் சொப்பனத்தில் நிகழும் மனோவியாபாரமும் சுழுத்தியில் நிகழும் மாயாவியாபாரமுமின்றிப் பிராணவாயுவுடன் உந்தியினின்று பரமாத்ம சிந்தனை செய்யும் நிலை துரியமாகும். இந்நிலை சவிகற்பசமாதி என்றழைக்கப்படும்.

(ரு] துரியாதீதம்-சீவான்மா மேற்கூறிய பிராணனையும் தன்னுளடக்கிப் பரமாத்மாவைத் தன்னுட்கண்டு தானாகவுந் தனக்கன்னியமாகவுங் காணப்பட்ட தத்துவ விகற்பங்களுக்கு அந்நியமாகவிருக்கும் நிலை துரியாதீதமாகும். இந்நிலை நிருவிகற்பசமாதி என்றழைக்கப்படும்.

சாக்கிரமா நுதலினிலிந் திரியம் பத்துஞ்
சத்தாதி வசனாதி வாயு பத்தும்
நீக்கமிலந் தக்கரணம் புருட னோடு
நின்றதுமுப் பானைந்து நிலவுங் கண்டத்
தாக்கியசொப் பனமதனில் வாயு பத்து
மடுத்தனசத் தாதிவச னாதி யாக
நோக்குகர ணம்புருட னுடனே கூட
நுவல்வரிரு பத்தைந்தா நுண்ணி யோரே.

சுழுத்தியித யந்தனிற்பி ராணன் சித்தஞ்
சொல்லரிய புருடனுடன் மூன்ற தாகும்
வழுத்தியநா பியிற்றுரியம் பிராண னோடு
மன்னுபுரு டனுங்கூட வயங்கா நிற்கும்
அழுத்திடுமூ லந்தன்னிற் றுரியா தீத
மதனிடையே புருடனொன் றி யமரு ஞானம்
பழுத்திடும்பக் குவாறிவ ரவத்தை யைந்திற்
பாங்குபெறக் கருவிநிற்கும் பரிசு தானே.

—தாயுமானசுவாமிகள்.

மேற்கூறிய விவரங்களினால், இந்திரிய மன மாயை

களின் வயப்பட்டு மயங்கி நின்றொழுகும் சாதாரண மனிதர் பெறுவது சாக்கிர சொப்பன சுழுத்தியாவத்தைகளென்றும், அவ்விந்திரிய மன மாயைகளின் சேட்டைகளைக் கடந்து நின்ற சான்றோர் பெறுவது துரியாவத்தையென்றும், சிவஞான சித்திபெற்றோர் பெறுவது துரியாதீதாவத்தை யென்றும், சாதாரண மக்களைப் போலவே இந்திரிய மனமாயைகளின் வயப்பட்டுநிற்கும் தேவர்கள் நித்திரையற்றவர்களாதலின் அவர்கள் பெறுவது சாக்கிராவத்தை ஒன்றேயென்றும், இந்திரியமும் மனமுமற்ற தாவரங்கள் பெறுவது சுழுத்தியாவத்தை ஒன்றேயென்றும், இந்திரியங்களுடைமையானும் மனச்சலனமின்மையானும் நித்திரையுடைமையானும் பறவைகளும் விலங்குகளும் பெறுவது சாக்கிர சுழுத்தியாவத்தைகளென்றும் அறியலாகும்.

தூல சூக்கும காரண சரீரங்களின் விவரம் பின்வருமாறு:—

(க) தூலசரீரம்—வாதம் • பித்தம் சிலேட்டுமம் என்னும் மூவகைப்பிணிகளின் வயப்பட்டு நலிவடைந்து இறுதியெய்தும் மாமிசவுடம்பு தூலசரீரமாகும்.

(உ) சூக்குமசரீரம்(இலிங்கசரீரம்)—மாமிசவுடம்பில் அருவாய்நின்று சாக்கிர சொப்பனங்களில் இப்பிறவியிற் செய்யப்பட்டுள்ள இருவினைத்தொகுதிகளில் இப்பிறவியிலேயே அனுபவிக்கும்படி அமைக்கப்பட்டுள்ளனவும், சென்ற பிறவிகளில் ஈட்டிய வினைகளில் அவ்வப்பிறவிகளில் அனுபவித்து ஒழிக்கப்பட்டவை போக எஞ்சிநின்ற வினைத்தொகுதிகளில் இப்பிறவியில் அனுபவிக்கும்படி அமைக்கப்பட்டுள்ள வினைப்பகுதிகளும் ஆகிய இவ்விருவகைக் கருமங்களின் பயன்களாகிய சுகதுக்கங்களையும் இன்பதுன்பங்

களையும் அனுபவிப்பது சூக்குமசரீரமாகும். இக் கருமப் பகுதிகளை முறையே ஆகாமியமெனவும் பிராரத்தமெனவும் கூறுவர் அறிஞர்.

(௩) காரணசரீரம்—சென்றபிறவிகளில் ஈட்டப்பட்ட வினைத் தொகுதிகளில் அவ்வப்பிறவிகளில் அனுபவித்துத் தொலைக்கப்பட்ட பகுதிகளும் இப்பிறவியில் அனுபவிக்கும்படி விதிக்கப்பட்ட பகுதியும்போக எஞ்சி நின்றதொகுதியே காரணசரீரமாகும். இது பின் சரீரமெடுப்பதற்குக் காரணமாயிருத்தலின் காரண சரீரமெனப் பெயர்பெற்றது. இதனைச் சஞ்சித மெனக் கூறுவர் அறிஞர்.

மேற்கூறிய நியமத்தில் பிராணவாயுவை நிறுத்துதலே 'வாயுத்தாரணம்' என்றும் 'பிராணாயாமம்' என்றும் புக லப்படும். இப்பிராணாயாமமே காடுங்கரையுங் கால்விட்டோ டும் மனக்குரங்கின் காலையொடித்துக் கீழேதள்ளி அதன் பின்னோடும் சீவாத்மாவை உயிர்க்குயிராய் ஆடுங்கருணைப் பரஞ்சோதியின் அருளைப் பெறுதற்கு அன்புநிலை தேடும் நெறியிற் செலுத்துவதாகும். பிராணவாயுவை நிறுத்து வது ஆரம்பத்தில மிகவும் கடினமாகவே இருக்கும். ஆனால் சிரமத்தைப் பாராட்டாமல் சிலகாலம் பழகில் பின்பு இலகுவாகும். ஆரம்பத்தில் ஒரு நிமிடநேரம் (இரண்டரை விநாடி) வாயுவை நிறுத்தி அந்நேரத்தில் ஏறக்குறைய நூற்றறுபது முறை பிரணவ மந்திரத்தை உச்சரித்தல் கூடும். பின்னர் அப்பியாசம் முதிரமுதிர நேரத்தினளவையும் மந்திரோச்சாரணத்தினளவையும் ஒவ்வொருவரும் தத்தம் சௌகரியங்களுக்கேற்ப விரித் துக் கொள்ளலாம்.]

உச. பிறகு, தலையணையில் இடதுகாது பொருந்தும்படி தலையைவைத்து ஒருச்சாய்த்துப்படுத்துக் கைகால்களைச் செவ்வையாய்நீட்டி வாயையும் கண்களையும் நன்றாய் மூடிக்கொண்டு, மனக்கண்ணால் நடராசரது தூக்கியதிரு வடியைத் தரிசித்துக்கொண்டு பிராணவாயுவை 'ஓ' என்னும் சப்தத்துடன் வெளியே விட்டும் 'ஹம்' என்னும் சப்தத்துடன் உள்ளேயிழுக்தும் இவ்விதமாய் 'ஓஹம்' என்னும் சப்தத்தை மனவாக்கினால் உச்சரித்துக்கொண்டு அந்த நிலையில் நித்திரைபுகுதல்வேண்டும்.

['ஓ' என்னும் பதம் அரணையும் இரக்கத்தையுங்காட்டும் ஓர் உபசருக்கமாகும்; 'கம்' என்னும் பதம் 'அறிவு' எனவும் 'முத்தி' எனவும் பொருள்படும்; 'ஓகம்' என்னும் பதம் 'அடைக்கலம்' எனப்பொருள்படும், ஆகவே, 'ஓகம்' என்னும் பதத்தை மும்முறை உச்சரிக்கில் அவ்வாறு உச்சரித்தல், " என் சித்தமிசை (குடிகொண்ட) அறிவான தெய்வமே ! (ஏழையடிமையாகிய நான் உமக்கு) அடைக்கலம் ! (என்மேல்) இரக்கம் (வைத்து என் பாவங்களை மன்னித்து எனக்கு) முத்தி (அருள்வீராக) " என்று பிரார்த்தித்ததாகும்.

நடராசரது குஞ்சிதபாதம், "மார்க்கண்டேயரென்னும் அந்தணாளர் உம்மிடத்து அடைக்கலம் புகுத, அவரைக்காப்பது காரணமாக, அவரைக் கோபித்துவந்து பாசம்வீசிப் பற்றியிழுத்த காலன்றன் ஆருயிரதனை வவ்விய உமது இடது பாதத்தின் வன்மையைக்கண்டு, அடியேன், எந்தையீர் ! என்னை நமன்றமர்நலியில், இவன் என்னடியானென விலக்கும் சிந்தையால் வந்து உமது திருவடியை அடைந்தேன்" என்று வழுத்தி இறைஞ்சும் தன்னடியாரைக் கருணையுடன் நோக்கி, "நம்மைச் சரணடைந்த மார்க்

கண்டேயனது உயிரைக் கவர்வான் வந்த இயமனதுயிரைக் கவர்வான் தூக்கிய நமது இடதுபாதம், அவ்வியமன் நம்மடியாரைக் கண்டவிடத்து அஞ்சியகலுமாறும், நம்மடியார் அவ்வியமனைக் கண்டவிடத்து அஞ்சாது நிற்குமாறும் தூக்கிய அந்நிலையிலேயே இதோ நின்றது அஞ்சற்க", என்று அபயமளிக்கும் திருக்குறிப்பை உணர்த்திநிற்குமென்பதையறிக.

"ஒன்றி யிருந்து நினைமின்க ளுந்தமக் கூனமில்லைக்
கன்றிய காலனைக் காலாற் கடிந்தா னடியவற்காச்
சென்று தொழுமின்கள் தில்லையுட் சிற்றம் பலத்துநட்டம்
என்றுவந் தாயெனு மெம்பெரு மான்றன் றிருக்குறிப்பே"

என்னும் அப்பர் திருவாக்கின் கருத்து இவண் உணரற்பாற்று.

நமது வாணாட்கள் பகல் இரவெனப் பாகுபாடு செய்யப்பட்டிருப்பதின் முக்கியமான நோக்கம் நாம் கொஞ்சநேரம் நன்றாய் வேலைசெய்து அதனாற் களைப்படையும் நம்முடைய சரீரத்துக்கும் மனதுக்கும் வேண்டிய இளைப்பாறுதலைக் கொடுத்து மறுபடியும் நமக்கு ஏற்பட்டுள்ள வேலைகளைச் செவ்வனே நிகழ்த்தி அதனால் உலக காரியங்கள் ஒழுங்காய் நடைபெறுதலேயாம். பகல் முழுதும் சூரியனது உக்கிரமான வெயிலில் நெற்றிவியர்வை நிலத்தில்விழப் பாடுபட்ட ஒருவன் சூரியாத்தமனமானவுடன் கிடைத்த கூழினை மகிழ்ச்சியுடன் உண்டு சுகமாக நித்திரைசெய்து அதிகாலையில் எழுந்து தனது வேலையில் நிற்றலையும், பகலில் வேலை செய்யும் பாக்கியத்தைப் பெறாத பணக்காரனொருவன் பகற்காலமெல்லாம் சோம்பலுடன் திண்ணையிலிருந்து தூங்காதுதூங்கி இரவில் *அகத்தடியார்

* அகத்தடியாள்-மனைவி.

ளால் அன்புடன் அளிக்கப்பட்ட அமிர்தத்தையொத்த *அடிசிலை †அரவமீந்த நஞ்செனநோக்கி அகன்று‡ அமளியிற் புரண்டு அவஸ்தைப்பட்டு அருணோதயத்தில் அறிதுயில் கொண்டு $ஆதவன்தோன்றி ஆறுநாழிகைக்கு அகத்தி லுள்ளோர் அடியாதடிக்க அறிவிலாக்குழவிபோல் அமளியி னீங்கி அப்புறஞ்சென்று கொட்டாவிபிட்டுக் குந்தியிருந்து §கூற்றுவனூர் புகுதலையும் நாம் காண்கிறோம். இதனால் நாம் அறிந்துகொள்ளக் கிடப்பது யாதெனில் நோயற்ற நல் வாழ்க்கையை விரும்பும் ஆடவர், பெண்டிர், மக்கள், வயோ திகராகிய ஒவ்வொருவரும் பகலிலெல்லாம் நன்றாயுழைத்து இரவில் வேண்டிய அளவுக்கு நன்றாய்த் தூங்கவேண்டும் என்பதேயாம். நாம் சுகமாய்ச் சீவித்திருப்பதற்கு முக் கியமான ஆதாரம நம்மால் உட்கொள்ளப்படும் பிராண வாயுவேயாகும். இப்பிராணவாயுவானது அடிக்கடி நமது நாசித்துவாரங்களின் வழியாய் நமது தேகத்தினுள்ளே சென்று அங்குள்ள இரத்தத்தைச் சுத்தப்படுத்தி அங் குள்ள அசுத்தத்தை எடுத்துக்கொண்டு கெட்ட நாற்றத் தையுடைய கரிமலவாயுவாக வெளியே வருகிறது. ஆதலால் நம்மால் உட்கொள்ளப்படுகிற காற்று மிகவும் சுத்தமான தாயிருப்பதுடன், நம்மாலாவது நம்மருகில் படுத்திருக் கிறவர்களாலாவது வெளியே விடப்படுகிற கரிமலவாயு நம்மால் உட்கொள்ளப்படும் பிராணவாயுவுடன் கலந்து அதனுடன் உட்செல்லாவண்ணம் தடுத்துக்கொள்ள வேண் டியது அத்தியாவசிய மென்றறிகிறோம். ஆதலால் நாம் நித்திரை செய்யுமிடம் நல்லகாற்றுப் போக்குவரவுள்ள

---

* அடிசில்-சோறு. † அரவம்-பாம்பு

$ ஆதவன்-சூரியன். ‡ அமளி-மெத்தை

§ கூற்றுவனூர்-எமலோகம்.

தாயும் விசாலமானதாயும் தெருமட்டத்துக்குக் குறைந்தது மூன்றடிக்குமேலானதாயும் ஈரமில்லாததாயும் இருத்தல்வேண்டும். ஒரு அறையில் ஒருவர்க்கதிகமாய்ப் படுக்க நேரிடும்போது ஒருவரால் வெளியே விடப்படுகிற கரிமலவாயு மற்றொருவர் உட்கொள்ள நேரிடாவண்ணம் ஒருவரையொருவர் அகன்று படுத்தல் வேண்டும். வெளியிலிருந்து உள்ளே வீசும் காற்று உடம்பில் நேரே படாதபடி சன்னல்களுக் கெதிரிற் படுக்காது விலகிப்படுத்தல் வேண்டும். ஈரமுள்ள விடத்திற் படுக்க நேரிட்டால் கட்டிலில் படுக்கவேண்டும். எப்போதும் உடம்பைப் போர்த்துக்கொண்டு நித்திரைசெய்தல் நலம். தலைவைப்பதற்குக் கிழக்கும் தெற்கும் உத்தமம்; மேற்கு மத்திமம்; வடக்கு அதமம், பகலிலும் அந்திப்பொழுதிலும் சயனித்தலும், சாப்பிட்டவுடனே சயனித்தலும், தக்ககாரணமின்றி இரவில் நெடுநேரம் விழித்திருத்தலும் அனுசிதம்.

நித்திரை, பாலகருக்குப் பத்துமணி நேரமும், வாலிபருக்கு எட்டுமணி நேரமும், புருடருக்கு ஆறுமணி நேரமும் வயோதிகருக்கு நாலுமணிநேரமும் அவசியம். பெண்பாலார்க்கும் அவ்வளவே அமையும். மிகுதலும் குறைதலும் ஆகா]

சைவச் சமயத் தனிநா யகனந்தி
உய்ய வகுத்த குருநெறி யொன்றுண்டு
தெய்வச் சிவநெறி சன்மார்க்கஞ் சேர்ந்துய்ய
வையத் துளார்க்கு வகுத்துவைத் தானே.

—திருமந்திரம்.

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

முந்திச் சென்று முப்போதும் வணங்குமின்
அந்தி வாயொளி யான்றனண் ணாமலை
சிந்தி யாவெழு வார்வினை தீர்த்திடும்
கந்த மாமலர் சூடுங் கருத்தனே.

சிவாலய தரிசனம்.

க. சிவாலயதரிசனம் பிரதிதினமும் காலையிலும் மாலையிலும் அர்த்தசாமத்திலும் செய்வது உத்தமம். இயலாதவர்கள் காலையிலும் மாலையிலும் செய்யக்கடவர். அதுவும் இயலாதவர்கள் காலையிலேனும் மாலையிலேனும் செய்யக்கடவர். பிரதிதினமும் ஆலயதரிசனம் செய்யமுடியாதவர்கள், சோமவாரம், சுக்கிரவாரம், பிரதோஷம், பௌர்ணிமை, அமாவாசை, திருவாதிரை, கார்த்திகை, சிவராத்திரி, விநாயகசதுர்த்தி, கந்தசஷ்டி, சரஸ்வதிபூசை முதலிய விசேட நாட்களிலாயினும் ஆலயஞ்சென்று தரிசனம் பண்ணக்கடவர்.

[பிரதோஷகாலம்-திரயோதசித்திதியில் சூரியன் அத்தமிக்குமுன் மூன்றேமுக்கால் நாழிகை தொடங்கி அத்தமித்து மூன்றேமுக்கால் நாழிகை பரியந்தம் உள்ளநேரம். அக்காலத்தில் முதலாவது நந்திதேவரைத் தரிசித்து, அங்கு நின்றும் இடமாகச் சென்று சண்டேசுரரை வணங்கித் திரும்பி வந்து மறுபடியும் நந்திதேவரைத் தரிசித்து, அங்குநின்றும் வலமாகச்சென்று வடக்குப்பிராகாரத்தில் கோமுகையைக் கிட்டி அதனைக் கடவாது மீண்டுவந்து நந்திதேவரைத் தரிசித்து, மறுபடியும் அங்கு நின்றும் இட

மாகச் சென்று சண்டேசுரரைத் தரிசித்து, அங்கு நின்றும் திரும்பி நந்திதேவரைத் தரிசியாது வலமாக முன்போலவே வடக்குப்பிரகாரத்திற் சென்று, அங்கு நின்றும் திரும்பி வந்து நந்திதேவரைத் தரிசியாது இடமாகச் சென்று சண்டேசுரரைத் தரிசித்து, திரும்பிவந்து நந்திதேவரைத் தரிசித்து, அவருடைய இரண்டு கொம்புகளின் நடுவே சிவபெருமானைத் தரிசித்து வணங்கல் வேண்டும்.

ஏகாதசியன்று உணவின்றி விழித்திருந்து இரவும் பகலும் இடைவிடாது இறைவனைச் சிந்தித்துத் தியானஞ் செய்தல், தேவர்களும் அசுரர்களும் திருப்பாற் கடலில் மந்தரகிரியை மத்தாக்நிறுத்தி வாசுகியென்னும் பாம்பைக் கயிறுகப்பிணைத்துக் கடைந்தபோது அப்பாம்பினுற் கக்கப் பட்ட விஷமானது உலகமுழுதும் பரவ அப்போது தேவர்கள் முதலியோர் இருந்த நிலைமையையும், துவாதசியன்று காலையில் *பாரணை செய்தல் தேவர்கள் அமிர்தம் புசித்ததையும், திரயோதசியன்று சிவபெருமானைத தரிசித்தல் அமிர்தமுண்டு எமபயத்தை யொழித்துப் பெருமிதமடைந்த தேவர்கள் எம்பெருமானை மீண்டும் வணங்கி நன்றிகூறித் துதித்ததையும் குறிக்கும் என்றறிக.]

உ. ஆலயஞ்செல்வோர் ஸ்நாநம் பண்ணித் தோய்த்துலர்ந்த வஸ்திரந்தரித்துத் திருநீறணிந்து சந்தியாவந்தன முடித்துக்கொண்டு, கழுவப்பட்ட தேங்காய் பழம் முதலியன வைக்கப்பட்ட ஒரு சுத்தமான பாத்திரத்தைக் கையிலேந்தி, பஞ்சாக்கர மந்திரத்தைச் செபித்துக்கொண்டு துரிதமாய் நடந்து ஆலயத்தையடைந்து திருக்கோபுரத்தைத் தரிசித்து, அங்குள்ள திருக்குளத்திற் கைகால்களைக்கழுவி

---

* பாரணை - உபவாசமிருந்துண்ணல்.

ஆசமனம்பண்ணித் தீர்த்தத்தைச் சிரசிற் புரோட்சித்துக் கொண்டு உள்ளே செல்லவேண்டும்.

[கட்டிக்கொள்வதற்குப் பருத்திநூலினால் செய்யப் பட்ட வஸ்திரமே பாங்குடையதாகும். பட்டு வஸ்திரம் மிகவும் விலையுள்ளதாயிருத்தலினால் குறைந்த வருமான முடையவர்கள் அதினிடத்து ஆசைவையாது அஞ்சி யகன்று ஒழுகுவர். அதிகவிலை கொடுத்து வாங்கக்கூடிய நிலைமையிலுள்ளோரிலும் சீவகாருணியமுடையோர் கட் டிக்கொள்ளக் கந்தைகூடக் கிடையாது கஷ்டப்படும் ஏழை களது நிலைமையையும், காய்ச்சப்பட்ட வெந்நீரிலே போடப் பட்டு வதைத்து உயிரிழக்கும் பட்டுப்பூச்சிகளின் பரிதாப நிலைமையையும் உள்ளவாறுணர்ந்து அஞ்சியகன்று ஒழுகு வர். பட்டுவஸ்திரம் ஒருவருக்கும் இன்றியமையாததன்று கலின் அதை விலக்குதல் எவர்க்கும் அடுக்கும். ஆதலின் அதனை அவ்வாறு விலக்குதல் ஆடவருக்குமட்டுமேயன் றிப் பெண்டிருக்கும் அறனும் ஆன்ற கடனுமாம். பட்டு வஸ்திரம் தரித்துக்கொள்ளப் பிரியப்படுவோர் மேற்கூறிய வாறு பட்டுப்பூச்சிகளை வதைசெய்யாது உண்டாக்கப்பட்ட பட்டாடைகளைத் தேர்ந்தெடுத்து உபயோகிக்கலாம். *"துன்னவாடை யொன்றுடுத்து" என்னும் தேவாரத் திருப்பாசுரத்தின் கருத்து இவண் ஊகித்துணரற்பாற்று.

ஆலயத்தில் சிவசந்நிதானத்திலே தேங்காயுடைதல் சீவான்மா தன்னைப் பந்தித்துக்கொண்டிருக்கும் ஆணவாதி மும்மலங்களையும் விலக்கித் தனக்கு இயற்கையில் அமைக்கப்பட்டுள்ள பரிசுத்தமனதுடன் தன்னைப் பரமாத் மாவுக்கு அர்ப்பணம் பண்ணுவதைக்குறிக்கும். தேங்கா

* சகூ-ம் பக்கம் பார்க்க.

யுடன் வைக்கப்படும் பழம் சீவான்மா இவ்வுலகில் தன தெனக் கொண்டிருக்கும் மண்ணாதி மூவாசையைக்குறிக்கும். சாம்பிராணியை எரித்துப் புகைப்படுத்தல் காமாதி முக்குற்றங்களை எரித்தலைக் குறிக்கும். கற்பூரங் கொளுத்துதல் சாத்துவிக குணமுற்ற சீவான்மா அக்கினி சொரூபமாய பரமான்மாவாற் பற்றப்பட்டு அவ்விதம் பற்றப்பட்டவுடனே பசுத்துவம் நீங்கிச் சிவத்துவ விளக்கமுற்று நின்று, பின்பு தன்வடிவமுழுதும் ஒழியப்பெற்றுப் பரமான்மாவிற் கலந்து பரகதியடைவதைக் குறிக்கும்.

திருக்குளத்திலுள்ள தீர்த்தம் புண்ணியதீர்த்தமாதலாலும், அத்தீர்த்தம் அபிஷேகம், நைவேத்தியம், உணவு முதலிய சத்காரியங்களுக்கு உபயோகமாகும் பொருட்டே அமைக்கப்பட்டிருப்பதாலும், அதில் ஸ்நாநம் பண்ணுதல், வஸ்திரந்தோய்த்தல், எச்சிலுமிதல், வாய்கொப்பளித்தல், மூக்குநீர்சிந்தல் முதலிய அசங்கிய காரியங்களைச்செய்து அசுத்தப்படுத்துவது ஒரு மிகக்கொடிய பாவச்செயலாகும். கால்கழுவுதல்கூடத் திருக்குளத்தினுள்ளே செய்யாது தண்ணீர்மொண்டு கரையிற்செய்தல் நலம். இதனை ஆலயத்தில் பணிசெய்யும் தருமகர்த்தர், அருச்சகர், மணியகாரர், ஏவலாளர், பரிசாரகர் முதலியோர் மட்டுமேயன்றி ஆலயத்துக்குத் தரிசனத்தின்பொருட்டுச் செல்வோருங்கூடக் கவனித்துத் தாங்கள் அப்பாவகாரியங்களுக்குத் தங்களை ஆளாக்காமற் காத்துக்கொள்வதுடன், அறியாமையால் அக்காரியங்களைச் செய்யப்புகுவோரையும் தடுக்கக்கடவர். திருக்குளத்திலுள்ள புண்ணிய தீர்த்தத்தைச் சுத்தமாகவைத்துக் கொள்வதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்வது தருமகர்த்தரது பிரதம கடமையாகும். ஆலயத்துக்குத் தரிசனத்துக்காகச் செல்வோரும் ஏனைய திருப்

பணியாளரும் கால்கழுவி உட்செல்லுவதை வற்புறுத்து வதும் தருமகர்த்தாது ஒரு முக்கியமான கடனாகும். திருக்குளமில்லாத ஆலயங்களில் கால்கழுவி உட்செல்வ தற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவைத்தலும் தரும கர்த்தாது மற்றொரு முக்கிய கடனாகும்.

ஆலயத்துக்குத் தேங்காய் பழம் முதலியன கொண்டு போக இயலாதவர்கள் புட்பங்கொண்டுபோய்ச் சுவாமி திருவுருவிற் சாத்துவித்தேனும், அல்லது கற்பூரங் கொண்டு தீபாராதனைசெய்வித்தேனும் அல்லது எண்ணெய் கொண்டு திருவிளக்கிட்டேனுந் தரிசனஞ்செய்யலாம். அதுவுமுடியாதவர்கள் ஆலயத்திலுள்ள செத்தை குப்பை களைப் பொறுக்கி அப்புறப்படுத்திக் திருவலகிடுதல் திரு மெழுக்கிடுதல் ஆகிய திருப்பணிகளையியற்றித் தரிசனஞ் செய்யலாம். இவ்வாறு தரிசிப்பவர் பெறும்பேற்றினை

விளக்கினார் பெற்ற வின்ப மெழுக்கினாற் பதிற்றி யாகும்
துளக்கினன் மலர்தொ டுத்தாற் றூயவிண் ணேறலாகும்
விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்
அளப்பில கீதஞ் சொன்னார்க் கடிகடா மருளு மாறே-

என்னும் அப்பர் திருவாக்கிற் காண்க.]

௬. பிறகு, கொடிமரத்தையணுகி அதன் தென்பக்கத்தி னின்று கைகளைச் சிரசின்மேற்குவித்து, கொடிமரத்தை உச்சியிலிருந்து அடிவரையும் நோக்கிக் கும்பிட்டு, அடி யற்றமரம்போற் சாய்ந்து, வலக்கையைக் கொடிமரத்தை நோக்கி நீட்டிப் பின் இடக்கையை நீட்டி வலக்கையுடன் சேர்த்துக் குவித்து நெற்றி தரையில் நன்றாய்ப் பொருந்தக் கும்பிட்டு, பிறகு இருகரங்களையும் அம்முறையிலேயே திரித்து இருபுயங்களும் தரையில் நன்றாய்ப்பொருந்தும்படி நீட்டி, வலக்காதை முன்னும், இடக்காதைப் பின்னுமாகத்

தரையிலே பொருந்தச்செய்து நமஸ்கரித்தெழுந்து கும்பிடவேண்டும். இவ்விதம் நமஸ்கரித்தல் "சாஷ்டாங்க நமஸ்காரம்" எனப்படும்.

[கொடிமரம் ஆலயத்துட் புகுந்தவுடன் எதிரில் நேராக நிற்கும். இதனால் அறிந்துகொள்ளக் கிடப்பது யாதெனில்:--முத்தியடைய விரும்பும் ஒருவன் தனது சரீரத்தைத் தம்பத்தைப்போல அசையாமலும் வளையாமலும் நேராகநிறுத்திப் பிராணவாயுவை* இரேசக பூரககும்பகஞ் செய்து மனதை நிறுத்தி ஐம்பொறிகளையடக்கிச் சிவத்தியானஞ்செய்து சிவசொரூபத்தைத்தன்னுள்ளே தரிசித்துப் பேரானந்தப் பெருவாழ்வினை அடைதலாகு மென்பதாம்.

நமஸ்காரம் மூவகைத்து. அவையாவன:—

(க) அட்டாங்க வணக்கம்- நெற்றி, இருகாதுகள், மார்பு, இருபுயங்கள், இருகால்கள் ஆகிய எட்டு உறுப்புகள் நிலத்தில் தோயும்படி வணங்குதல் (இஃது ஆடவர்க்கு உரியது).

(உ) பஞ்சாங்க தெண்டன்-தலை, இருகைகள், இருகால்கள் ஆகிய ஐந்து உறுப்புகள் நிலத்தில் தோயும்படி வணங்குதல் (இஃது பெண்டிர்க்கு உரியது).

(ந) திரயாங்க வந்தனம்-இருகைகளையும் தலைமேற்குவித்து வணங்குதல், (இஃது ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் பொது)

நமஸ்காரம் மூன்று அல்லது ஐந்து, ஏழு, ஒன்பது, பன்னிரண்டுமுறை செய்தல்வேண்டும். வடக்குநோக்கித் தலைசாய்த்து வணங்குதல் உத்தமம்; கிழக்கு மத்திமம்; ஏனைய திக்குகளில் தலைசாய்த்தல் கூடாது]

ச. பிறகு, ஆனைமுகக்கடவுளாகிய விக்கினவிநாயகரது

*களம் பக்கம் பார்க்க.

சந்நிதியையடைந்து சந்நிதியின் விலாப்பக்கத்தில் வடக்கு முகமாக நின்று முட்டியாகப் பிடித்த இரண்டு கைகளையும் கபித்தமாகத் தலையில் மும்முறை குட்டி, இரண்டு கைகளையும் எதிரெதிராக மாற்றி இரண்டு காதுகளையும் பிடித்துக்கொண்டு கணைக்காலும் தொடையும் ஒன்றையொன்று தொடும்படி மும்முறை தாழ்ந்தெழுந்து வணங்கவேண்டும்.

[விநாயகர் ஆனை முகத்துடன் அமர்ந்த வரலாறும் அவரது சந்நிதியில் நின்று தலையிற்குட்டித் தாழ்ந்தெழுவதின் காரணமும் அடியிற் குறித்துள்ள கதையினாலறிக.

ஆதியில் அமரர்கோன் அவுணரை அமரில்வெல்ல அரக்கர்கோன் தனது குலகுருவாகிய சுக்கிராசாரியரிடஞ் சென்று தனக்கு நேரிட்ட குறையைக்கூறி முறையிட்டான். அதனைக் கேட்ட வெள்ளிபகவன் தானவர்கோனை நோக்கி, "வசிட்டர் மரபினுதித்த மாகதமுனிவரிடம் ஓர் அசுரக் கன்னிகையை யனுப்பி அவரை மயக்கிப் புணரும்படி செய். அப்போது அவளுக்கு ஒரு புதல்வன் பிறப்பான், அவனால் உங்கள் துன்பம் நீங்கும்" என்றார். உடனே அசுரர்கோன் விபுதையென்பவளை மாகதமுனிவரிடம் அனுப்ப அவள் சென்று அவரது தவத்தை அழிக்க முடியாதவளாய் அவரெதிரில் தவஞ் செய்துகொண்டிருந்தாள்.

இவ்வண்ணம் நெடுநாட்கழிய, பின் அவள் புரிந்த நற்றவப்பயனால் ஒரு நாள் ஒரு ஆண்யானை ஒரு பெண் யானையுடன் கூடியிருப்பதை அம்முனிவர் பார்த்துக் காமாந்தகரானார். அதனையறிந்த அக்கன்னி முனிவரை வணங்கி "அடிமையை ஆட்கொண்டருளவேண்டும்" என்று பிரார்த்தித்து நின்றாள். பின் அவரது ஆணையால் அக்கன்னி பெண்யானை யுருத்தாங்கி நிற்க அவர் ஆண் யானையாகி அவளைப் புணர்ந்தார். உடனே கயமுகாசுரன் என்னும்

அசுரன் தோன்றினன். பின் அக்கயமுகாசுரன் அநேக ஆயிரவருடகாலம் அக்கினிமேனின்று அரனைநோக்கி அருந்தவமியற்றி அச்சிவபெருமானது அருளால் இந்திரனும்பிரமனும் விட்டுணுவும் தன்னைப் போரிலெதிர்ப்பின் முதுகிட்டோடுதலும்,எவ்விதப் படைக்கலங்களினாலும் தேவர்களாலும், அசுரர்களாலும், மானுடராலும், மற்றையோர்களாலும், விலங்குகளாலும் இறவாதிருத்தலும், தனக்கொப்பானவனாக ஒருவன்வந்து தன்னுடன் போர்செய்யினும் அவனது ஆயுதங்களாலும் தான் அழிவடையாதிருத்தலும் ஆகிய இவ்வரங்களைப் பெற்று, தேவர்களைவருத்தி ஏவல்கொண்டு அவர்கள் பிரதி தினமும் தன்முன்வந்து தங்களுடைய தலைகளில் மூன்றுதரம் கைகளாற்குட்டிக் கைகளாற் காதுகளைப் பிடித்துக் கொண்டு கால்களால் பூமியில் தாழ்ந்தெழுந்து தனது ஊழியங்களைச் செய்யும்படி செய்தான். தேவர்கள் இவ்வாறு பலநாட்செய்து சோர்வடைந்து பரமசிவனையடைந்து முறையிடவும், பரமசிவன் பார்வதி தேவியாருடன் கயிலயங்கிரிச்சாரலில் விளங்கிக்கொண்டிருக்கும் சோலையில் எழுந்தருள, அங்கு சித்திரவடிவமாயிருந்த பிரணவமானது ஆண் யானையும் பெண்யானையுமாக வடிவங்கொண்டு சேர, அப்போது அஞ்சுகரங்களுடன் ஆனைமுகக் கடவுள் அவதரித்து அத்தனது ஆணையால் ஆனைமுகாசுரனைத் தனது கொம்பொன்றினல் அடித்தார். பிறவாவரத்தினைப் பிரானிடம் பெற்ற புகர் முகாசுரன் பூமியில் விழுந்து பெருச்சாளியாகப் பெருமானையடைந்தான். அவர் அப்பெருச்சாளியை வாகனமாகக்கொண்டார். அப்போது இந்திராதி தேவர்கள் விநாயகக்கடவுளை வணங்கித்துதித்துத் திருமுன்னிற்ப, அவர் அவர்களுக்கு அருள் புரிந்தார். பின்பு அவர்கள் அவரை நோக்கி, ''ஐயபெருமானே! எங்

களை வருத்திய கயமுகாசுரனைச் சங்கரித்த உமக்கு நாங்கள் செய்யும் கைம்மாறு ஒன்றுமில்லை. ஆயினும் நாங்கள் நேற்றுவரை அவனெதிரிற் செய்துவந்தது போல இன்றுமுதல் தேவரீருடைய சந்நிதானத்திற் செய்வோம்'' என்று சொல்லி, அன்புடன் குட்டி * மரித்துத் தோப்புக் கரணமிட்டு, பின்னும் அவரை நோக்கி, ''இன்றுமுதல் உலகத்திலுள்ளோர் யாவரும் எங்களைப் போலவே இத் தொண்டினைத் தேவரீருடைய சந்நிதானத்திற் செய்து நாங்கள் உய்ந்தவாறே வினைகளினீங்கி உய்யுமாறு அருள் புரியவேண்டும்'' என்று வேண்ட, விநாயகக்கடவுள், ''அவ்வாறே ஆகுக'' என்று அருள்புரிந்தார். அன்றுமுதல் அவனியிலுள்ளோரும் அவ்விநாயகரது அருளாலே அமரர் அபேக்ஷித்த அந்தப்பிரகாரமே அவரைவணங்கி அருச்சித்து அநாதியாய்த் தங்களை அடுத்து அல்லற்படுத்திக் கொண்டிருந்த அருவினைகளினின்றும் அகன்று உய்வாராயினர். அவ்வழக்கமே இன்றளவும் நிலவிவருவதாகும். இவ்வரிய நிகழ்ச்சி

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

என்னுந் தேவாரத் திருப்பாசுரத்திற் குறிக்கப்பட்டிருத்தலைக் காண்க. ஆனைமுகக்கடவுள் தம்மை அடைந்தோரை அல்லலினீக்கி ஆட்கொள்வதால் விக்கினவிநாயகரென்றும், பூதகணங்களுக்குத் தலைவராதல்பற்றிக் கணபதியென்றும் அழைக்கப்படுவர் என்றறிக.

---

* மரித்தல் ஸ்மரித்தல், நினைவுகூர்தல்

விநாயகரை வணங்கும்போது முக்கியமாய் ஓதவேண்டிய திருப்பாசுரங்களாவன:—

(க) திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

(உ) மண்ணுலகத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலா மெளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.—கந்தபுராணம்.

(ங) சத்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொரு ணல்குவ
சித்தி யானைதன் செய்யபொற்பாதமே.

(ச) உள்ளமெனுங் கூடத்தி லூக்கமெனுந் தறிநிறுவி யுறுதியாகத்
தள்ளரிய வன்பென்னுந் தொடர்பூட்டி யிடைபடுத்தித் தறுகட்பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக் களித்துண்டு கருணையென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை நினைந்துவரு வினைகளைவாம். திருவிளையாடற் புராணம்.

ரு. ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே. திருமூலர் திருமந்திரம்.

ரு. பிறகு, தேவாராதி பன்னிரு திருமுறைகளை விதித்த முறைப்படி ஓதிக்கொண்டு கால்களை மெல்லவைத்து நடந்து வெளிப்பிராகாரத்தால் கோயிலைப் * பிரதக்கணம் பண்ணி

---

* பிரதக்கணம்—வலமாகச்சுற்றுதல்.

நவக்கிரகங்களைச் சுற்றி வணங்கி, பிறகு நந்திதேவரையும் துவாரபாலகரையும் வணங்கி அநுமதி பெற்றுத் திருக்கோயிலினுள்ளே சென்று, நடராசரைத் தரிசித்து அறுபத்து மூன்று நாயன்மாரையும் வணங்கிக்கொண்டு உட்பிராகாரத்தாற்சென்று, சோமாஸ்கந்தரையும், சந்திரசேகரரையும், தக்ஷிணாமூர்த்தியையும், சுப்பிரமணியரையும், வீரபத்திரரையும், வைரவரையும், சந்தானகுரவரையும் வணங்கி, பிறகு சிவபெருமானையும் உமாதேவியாரையும் வணங்கி, தூபதீப நைவேத்திய முதலிய உபசாரங்களும் அருச்சனையும் செய்து, கடைசியில் சண்டேசுரரை யடைந்து மும்முறை கைகொட்டி வணங்கி விடைபெற்றுக்கொண்டு, சந்நிதியிற் புறங்காட்டாது நடந்து வெளியே வந்து துவாரபாலகரையும் இடபதேவரையும் மறுபடியும் வணங்கி இடபதேவரது பின்பக்கத்தினின்று அவரது இருகொம்புகளுக்கும் ஊடாகச் சிவபெருமானைத் தரிசிக்கவேண்டும். பின்னர், முன்போலக் கொடிமரத்தின் தென்பக்கத்தில் சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து, ஓர் ஒதுக்கிடத்தில் வடக்கு முகமாகச் சம்மணங்கூட்டி உட்கார்ந்து செபஞ் செய்தெழுந்து வெளியே வந்து சந்நிதிக்கெதிரில் நின்று தன்னை மூன்று தரம் வலஞ்செய்து வீட்டுக்குச் செல்லவேண்டும்.

[விநாயகரை ஒருதரமும், சூரியனை இரண்டுதரமும் சிவபெருமானை மூன்றுதரமும் சத்தியையும் விட்டுணுவையும் நான்குதரமும் ஆறுமுகக் கடவுளை ஆறுதரமும் நவக்கிரகங்களை ஒன்பதுதரமும் பிரதக்கணப்பண்ண வேண்டும். வலம் வருதற்குப் பிரமாணம்,

ஆக்கையாற் பயனென் னரன்கோயில் வலம்வந்து
பூக்கையா லட்டிப் போற்றி யென்னாதவிவ்
வாக்கையாற் பயனென். —அப்பர் தேவாரம்.

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி யறிவழிந்திட்
டைமேலுந்தி
அலமந்த போதாக வஞ்சேலென் றருள் செய்வா
னமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர
மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி முகில்பார்க்குந்
திருவையாறே. —சம்பந்தர் தேவாரம்.

நமஸ்காரமும் அம்முறையிலேயே செய்தல் வேண்டும். சிலர் ஆலயங்களில் அப்பிரதட்சணம் பண்ணுகிறார்கள். அவ்விதம் செய்வதற்கு விதியில்லை.

சிவாலயத்தில் உமாதேவியாருக்குத் தனியாகக் கோயிலிருக்கின் அங்கும் மேலே கூறப்பட்டுள்ள முறையிலேயே சென்று தரிசிக்கவேண்டும்.

சிவ சந்நிதியில் தன்னைவலஞ்செய்தலின் கருத்து:—

மானிட ராக்கை வடிவு சிவலிங்கம்
மானிட ராக்கை வடிவு சிதம்பரம்
மானிட ராக்கை வடிவு சதாசிவம்
மானிட ராக்கை வடிவு திருக்கூத்தே

என்பதுவான்பற்றிநிறை மறைப்பொருள்சொல்லிய திருமூலதேவர் கட்டளையாகும். ஆதலின், தன்னைவலஞ்செய்தல் தன் இருதய கமலத்தில் *அந்தரியாமியாய் நின்று ஓவாது ஆடி அதனால்தன்னையாட்டுவிக்கும் பரமாத்துமாவைச் †சிவலிங்கமூர்த்தமாகவும், சிதம்பர ‡ சிதாகாசத் திருவுருவமாகவும், $சதாசிவ மூர்த்தமாகவும், ஆனந்தத்தாண்டவமூர்த்

* அந்தரியாமி-சீவசாட்சி. † சிவலிங்கமூர்த்தம-சிவபூசைத்திருவுருவம். ‡ சித்-ஞானம். $ சதாசிவம்-முடியாநன்மை.

தமாகவும் மனதில் ஆவாகனம்பண்ணி அம்மூர்த்தங்களை வலஞ்செய்ததாகும்.

ஆலயத்தினுள்ளே புகும்போது வாசற்படியைச் சிரம் பொருந்தவணங்கி அதனை இருகரங்களாலுந்தொட்டு இரு கண்களிலும் ஒற்றிக்கொண்டு, வலதுகாலை முதலில்தூக்கிப் படியை மிதியாது மெதுவாய் உள்ளேவைத்து, பிறகு இடதுகாலையும் அவ்விதமேதூக்கி உள்ளேவைத்துச் செல்ல வேண்டும். இவ்விதமே ஆலயத்தினின்றும் வெளியே வரும்போதும் சுவாமி சந்நிதியை நோக்கிநின்ற நிலையிலே யே இடதுகாலை முதலிலும் வலதுகாலைப் பிறகுமாக வெளி யேவைத்து முன்போலவே படியைச் சிரம்பொருந்த வணங்கி இருகரங்களாலுந் தொட்டு இருகண்களிலும் ஒற் றிக்கொள்ளவேண்டும்.

ஆலயத்தில் சிவபெருமானுக்குச் செய்யப்படும் உபசா ரங்கள்—தவிசளித்தல்(ஆசனமிடல்), கைகழுநீர்தரல், கால்கழுநீர்தரல், முக்குடி(ஆசமன)நீர்தரல், நீராட்டல், ஆடைசாத்தல், முப்புரிநூல்தரல, தேய்வை(பரிமளச் சாந்து)பூசல், மலர்சாத்தல், மஞ்சளரிசிதூவல், நறும் புகைகாட்டல், விளக்கிடல், கருப்பூரமேற்றல், அமுதமேந் தல், அடைகாய்தரல், மந்திரமலராலருச்சித்தல் எனப் பதி னாறு வகைப்படும். இவைதாமே சோடசோபசாரமென வழங்குவன.

* ஆனைந்து, தேன், பஞ்சாமிர்தம், சந்தனம், இளநீர் முதலியவற்றால் சிவபெருமானுக்கு அபிஷேகஞ் செய்தல் மேற்கூறிய சோடசோபசாரங்களில் ஒன்றாகிய நீராட்டலில் அடங்கும். அபிஷேகஞ்செய்பவர் அபிஷே

* ஆனைந்து - பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்னும் பஞ்சகௌவியம்.

கம் பண்ணுங்கால் எம்பெருமானது சிரத்திற்பெய்யப் பட்டு இழிந்தோடும் பால் முதலியன காலிற் படாவண் ணம் ஒரு பீடத்தின்மேல் நின்றுகொண்டு அபிடேகம் பண்ணவேண்டும்.* கோமுகையின்வழியாய் வெளியேவரும் அபிடேகநீரைப் பாத்திரங்களிற் பிடித்து அடியார்கள் அரு ந்தும்படி அளிக்கவேண்டும். அவ்விதஞ் செய்யாது அப்பு னிதநீரை வழியிற்செல்லவிட்டால் நடப்போர் அதனை மிதி த்துத் தோடமடைவர். அக்குற்றம் அபிடேகஞ் செய்தோ ரையும் செய்வித்தோரையும் அடையுமாதலால் அன்னோர் அபிடேகஞ் செய்யுங்கால் பால் முதலியவற்றை மிதமிஞ் சிப் பெய்யாது அளவுபடுத்திப் பெய்யக்கடவர். சாம ரம் விசிறி முதலாயின தூபத்திலும், ஆபரணமணிதல் மலர்சாத்தலிலும், கந்தமூலம் (கிழங்கு) பழம் பணிகார முதலியன அமுதத்திலும், மணியோசை மந்திரோச்சார ணத்திலும் அடங்கும் என்றறிக.

மேற்கூறிய உபசாரங்களை ஆலயங்களில் சிவபெருமா னது திருவுருவத்துக்குச் செய்வதைவிட அப்பெருமான் திருக்கோயில் கொண்டருளும் அன்புறு சித்தத்தினை யுடைய அடியார்களுக்குச் செய்தல் அதிகப் புண்ணியத் தை அளிக்குமென்று அருமறைகள் அறைகின்றன. பிர மாணம்:—

படமாடக் கோயிற் பகவர்க்கொன் றீயில்
நடமாடக் கோயி னம்பர்க்கங் காகா
நடமாடக் கோயி னம்பர்க்கொன் றியில்
படமாடக் கோயிற் பகவர்க்க தாமே—திருமந்திரம்.

இதனால் படமாடக்கோயிற் பகவர்க்குச் செய்யும் உப

* கோமுகை - பசுமுகமாய்ச் செய்யப்பட்டு அபிடேக நீர் வரும்வழி.

சாரங்களை யொழித்து நடமாடக்கோயில் நம்பர்க்குச் செய்யவேண்டுமென்று கொள்ளக்கூடாது. பின், கொள்ளக் கிடப்பது என்னையோவெனின், *'நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே புக்குநிற்கும் பொன்னார்சடைப் புண்ணிய' ராகிய பகவர் புலித் தோலாடையைப் புரிவுடன் புனைந்து அரவத் தொகுதியை அன்புடன் அணிந்து வெண்ணீற தனையே மெய்யெலாம் பூசி மகிழ்வாராதலாலும், † 'நிரந்தர மாகத் தன்னை நினைவாரை இரந்துண்பவ'ராதலாலும், ‡ 'உள்கிப் போதொடு நீர் சுமந் தேத்தி முன்னின்று அடி கையினால் தொழவல்ல தொண்டர் அருவினையைத் துரந்து ஆட்செய்வ' ராதலாலும், அப்படமாடக்கோயிற் பகவர்க்குப் பட்டாடை புனைதல், கனகரத்தினாபரணங்க ளணிதல் முதலிய ஆடம்பரச் செய்கைகள் மிகையே யாகும். ஆதலால் அத்தனது அருட்பேற்றினுக்கு அரு கராதலை ஆவலிப்போர் அத்தகைய ஆடம்பரச் செய்கை களால் ஏற்படும் செலவுகளை இயன்றவரை குறைத்து எஞ்சிய பணத்தை நம்பரது நடமாடக் கோயில்களாகிய மெய்யடியாருக்கு அன்னமும் ஆடையும் அன்புடன் அளித்து அதனால் அவ்வாலயங்களை அழிவுறாவண்ணம் ஆதரிக்கக்கடவர் என்பதேயாம.

சிவபெருமானுக்குச் சாத்தப்படும் புட்பங்களில் விசே டமானவை எட்டு. அவை:—புன்னை, வெள்ளெருக்கு, சண்

---

* ரு-ம் திருமுறை-தனித்திருக்குறுந்தொகை உ-ம் பதிகம்-க-ம் பாசுரம்.

† ம-ம் திருமுறை-திருமந்திரம் எ-ம் தந்திரம்-பிட்சாவிதி, க-ம் பாசுரம்.

‡ க-ம் திருமுறை-திருக்காட்டுப்பள்ளிப்பதிகம் எ-ம் பாசுரம்

பகம், நந்தியாவர்த்தம், நீலோற்பலம், பாதிரி, அலரி, செந்தாமரை என்பனவாம்.

அட்ட புட்ப மவைகொளு மாறுகொண்
டட்ட மூர்த்தி யநாதிதன் பாலணைந்
தட்டு மாறுசெய் கிற்ப வதிகைவீ
ரட்ட ஞாடி சேரு மவர்களே- அப்பர்.

கொன்றை, தும்பை, ஊமத்தை என்பவை அடுத்த படியில் வருவனவாகும்.

பேற்றைத் தவஞ்சற்று மில்லாத வென்னைப்ர பஞ்சமெனுஞ்
சேற்றைக் கழியவழி விட்டவா செஞ்ச டாடவிமேல்
*ஆற்றைப் †பணியை ‡யிதழியைத் தும்பையை $யம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான் குமரன் க்ருபாகரனே.
—கந்தரலங்காரம்.

பத்தரோடு பலரும் பொலிய மலரங் கைப்புனல் தூவி
ஒத்தசொல்லி யுலகத்தவர்தாந் தொழுதேத்த வுயர்சென்னி
மத்தம்வைத்த பெருமான் பிரியாதுறைகின்ற வலி தாயம்
சித்தம்வைத்த வடியாரவர்மே லடையா மற்றிடர்நோயே-
சம்பந்தர்.

சிவஞானயோகிகள் கொல்லாமை, வாய்மை, ஐம்பொறி யடக்கல், பொறை, அருள், அறிவு, தவம் அன்பு என்பவற்றையே அட்ட புட்பங்களாகக் கொண்டு அரனை அருச்சித்து அருள் பெறுவர். சிவனுருவிற்சாத்திக் களையப்பட்ட நிருமாலியம் சிவபெருமானுக்கு அர்ப்பணம் பண்ணப்பட்ட அன்பு முதலியவற்றைக் குறிக்குமாதலால் அந்நிருமாலியத்தை வீட்டுக்கு எடுத்துக்கொண்டுபோய்ப் பெண்டு

---

*ஆறு-கங்கை. † பணி-பாம்பு. ‡ இதழி-கொன்றை.
$ அம்புலியின் கீற்று-பிறைச் சந்திரன்

பிள்ளைகளின் தலையிற்சூடுதல் தவறாகும். அதனைக் காலிற் படவொட்டாது அப்புறப்படுத்தி ஆற்றிலேனும் கடலிலே னும் விடவேண்டும்.

தீபாராதனை செய்யுங்கால் அத்தீபத்தைக் கொண்டு 'ஓம்' என்னும் பிரணவாட்சரத்தைச் சிவலிங்கத் திருவுரு வத்தின்முன் ஆகாயத்தில் எழுதி, அதனால் பிறவியென்னும் பெரியதோர் கடலிலே கீழ்ப்பட்டழுந்திக் கெடாநின்ற ஆன்மாக்களுக்குக் கைப்பற்றிக் கரைசேறுந் தெப்பமாகப் பிரணவமந்திரத்தை அவரது செவியின்கண்ணே உண்டாக் கிக்கொண்டு பஞ்சபூதங்களிலும் நிரந்தரமாய் வியாபித்து நிற்கும் சருவேசுரன் பிரணவ ரூபமாதலைக் காட்டினாற் போலச் செய்யவேண்டும்.

சருவேசுரன் பிரணவமந்திர ரூபியாயிருத்தலும் அம் மந்திரத்தைச் செவியின்கண்ணே உண்டாக்குதலும் எவ் வாறென்று விசாரிப்பாம்.—நாம் நம்முடைய வலச்செவித் துவாரத்தின் சுற்றுறையைக் கண்ணாடியிற் பார்க்குங்கால் அது பிரணவத்தின் வரைவாகிய ஓங்காரவடிவமாயிருத் தலை அறிகிறோம். பின்னர், நம்மிரு செவித்துவாரங் களையும் நம்மிரு பெருவிரல்களினாற் பொத்திக்கொண்டு கவனிப்போமானால், நம் சிரசினுள்ளே 'ஓம்' என்ற சப் தம் மிகத் தெளிவாய் இடைவிடாமல் அடுக்காய்த் தொ னித்துக்கொண்டிருப்பதைக் கேட்கலாம். இன்னும் சற்று கூர்மையாயக் கவனிப்போமானால், மேற்கூறிய 'ஓம்' என் னும் சப்தங்களுக் கிடையே மிகநுட்பமான பிறிதோர் சப்தத்தையும் கேட்கலாம். இந்த சப்தம் சர்வேஸ்வரன் நம் மிருதயகமலத்தில் நின்றுகொண்டு நடிப்பதனாலுண் டாகிற சப்த மென்றுணர்தற்பாலது. மேற்கூறிய இருதயப் பையானது ஓவென்னுமெழுத்தின் வடிவினையுடையது.

அவ்விருதயப்பை மட்டுமே யன்றி நம்முடம்பினுள்ளே அதனைப்போலவே முக்கியமான காரியங்களை நிகழ்த்திக் கொண்டிருக்கும் மூளை, இரைப்பை, மலக்குடல், மூத்திரப்பை என்பவையும் ஓகாரவுருவினை உடையன.

இன்னும் நமக்கு வெளியே வியாபித்திருக்கின்ற ஆகாயத்தின் பரமாணுக்கள் ஓய்வில்லாமல் ஒன்றோடொன்று உராய்ந்துகொண்டிருப்பதனு லுண்டாகின்ற சப்தம் ஓங்காரமாயிருப்பதை ஒரு வெற்றுப்பாத்திரத்தின் வாயை நம் செவிகளில் ஒன்றைப் பொத்திக்கொண்டு பொத்தப்படாத செவியில் வைத்துத் தெரிந்து கொள்ளலாம். இவ்வாறே காற்றின் அணுக்கள் ஒன்றோடொன்று உராய்வதனுலும் அக்கினியின் அணுக்கள் உராய்வதனுலும், தண்ணீரின் அணுக்கள் உராய்வதனுலும் உண்டாகிற சப்தங்களும் ஓங்காரமேயன்றி வேறல்ல வென்பதையும் முறையே காற்று வேகமா யடிக்கும்போதும், அக்கினி சுவாலித் தெரியும்போதும், மழை பெய்யும் போதும் நமது இரு செவித் துவாரங்களையும் நமது இரு சுட்டுவிரல்களினுலும் விட்டு விட்டுப் பொத்தித் தெரிந்து கொள்ளலாம். இவ்விதமே பூமியின் அணுக்கள் அசைந்து ஒன்றோடொன்று உராய்ந்து உண்டாக்குகிற சப்தமும் ஓங்காரமேயென்பதை நம் செவியில் ஒன்றை மூடிக்கொண்டு மற்றென்றைப் பூமியிற் பொருந்த வைத்துத் தெரிந்து கொள்ளலாம். இதனுல் எல்லாம்வல்ல சர்வேசுரன் இவ்வுலகின்கண் எங்கும் வியாபித்து, சர்வ சராசரங்களிலும் சிவனுகப்பரிணமித்து, தாம் ஆடி, அதனுல் அச்சராசரங்களை ஆட்டுவித்துக்கொண்டும், ஓங்கார மந்திரத்தை இடைவிடாமல் சப்தித்துக்கொண்டும் இருக்கிறுரென்பது விசிதமாகும்.

*'உய்யவென் னுள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற மெய்யா'

† 'ஓங்காரத் துள்ளே யுதித்தவைம் பூதங்கள்
ஓங்காரத் துள்ளே யுதித்த சராசரம்
ஓங்காரா தீதத் துயிர்மூன்று முற்றன
ஓங்காரஞ் சீவ பரசிவ ரூபமே'

என்னுந் திருவாக்குகளின் மெய்ப்பொருளை இங்கு உன்னிக்கொள்க.

அமுதமேந்தலும் அடைகாய்தருதலும் அகங்காரம் குரோத முதலியவற்றை ஆண்டவன் சந்நிதியில் அர்ப்பணம் பண்ணுதலைக் குறிக்கும். "உள்ள மெனுக் கூடத்தில் ஊக்கமெனுந் தறிநிறுவி யுறுதியாகத், தள்ளரிய அன்பென்னுந் தொடர்பூட்டி இடைபடுத்தித் தறுகட்பாசக் கள்ளவினைப் பசுபோதக் கவளமிட" என்னுந் திருவாக்கின் கருத்தினை இவண் உணர்க. ஆண்டவன் சந்நிதியிற் கொடுக்கப்படும் பிரசாதத்தை அதிகமாய்ப் புசிக்காது கொஞ்சமாயுண்டு மிஞ்சியதை அருகில் நிற்கும் அடியாருக்கும் ஏனைய குழந்தைகளுக்கும் பங்கிடவேண்டும். அப்படியே நிவேதிக்கப்பட்ட தேங்காய் பழ முதலியவற்றையும் விநியோகஞ் செய்து வீட்டுக்கு வெறுங்கையுடன் திரும்பவேண்டும். ஆலயத்தில் ஆண்டவனுக்கு அர்ப்பணம் பண்ணப்பட்ட புட்பம் அமுதம் தேங்காய் பழ முதலியவற்றை வீட்டுக்குக் கொண்டுபோதல், 'விடப்பட்ட அகங்கார முதலியவற்றை' மீட்டும் பற்றிக்கொண்டதை யொக்குமாதலை அறிந்து விடுக்க.

---

* திருவாசகம்-சிவபுராணம்.

† திருமந்திரம்-பிரணவசமாதி.

சிவபெருமானுக்கு அருச்சனை செய்விக்கும் காலத்தில் சந்நிதியின் விலாப்பக்கத்தினின்று சிரசிற் கூப்பிய கரங்களுடன் எம்பெருமானது திருவுருவத்தைப் பார்த்துக்கொண்டு சிவாஷ்டோத்திர சதநாமங்களையேனும் திருவாரூர்ப் போற்றித் திருத்தாண்டகத்தையேனும் ஓதல் வேண்டும். இத்திருத்தாண்டகத்தில் சிவபெருமானை நாற்றெட்டுமுறை போற்றிப் பாடியிருத்தலின் சிவபெருமானை அருச்சித்தற்காம் தகுதியினையுடைய திருப்பதிகங்கள் பலவற்றுள்ளும் இது சிறந்ததெனத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிவார்ச்சனைத் திருமந்திரம் என்னுந் திருப்பெயருடன் அடையாளக் குறிப்புச் சின்ன வரலாறுகளுடனும் பிற அரிய குறிப்புகளுடனும் ஒருசிறு புத்தகமாக வெளியிடப்பட்டுளது. வேண்டுவோர் அதனைவாங்கிப் பார்த்துக் கொள்க.

ஆலயத்திலே திருவலகிடலும் திருமெழுக்கிடலும் முறையே ஊனுடம்பிற் பொருந்தியுள்ள காமம், வெகுளி முதலிய குப்பைகளை அகற்றுதலையும், தத்துவ ஞானமென்னும் சாணத்தை அன்பென்னும் நீருடன் கலந்து ஆத்துமசுத்தி செய்தலையும் குறிக்கும் என்றறிக.

சிவாலயத்திலுள்ள சிவலிங்கமும் அவ்விலிங்கத்துக் கெதிரிலிருக்கும் நந்தியும் நடுவிலிருக்கும் பலிபீடமும் முறையே வேதாகமங்களிற் கூறப்படும் பதியையும் பசுவையும் பாசத்தையும் அறிவுறுத்துவதுடன், பதியுள்ள போதே பசுவும் பாசமும் உண்டென்பதையும், பசுபாசங்கள் தாமாகவே பதியைச் சென்றடையாவென்பதையும், பதியணுகுங்கால் பசு பாசங்கள் கணமேனுந் தரிக்காது பதியைச் சென்றடையுமென்பதையும் குறிப்பாலுணர்த்தி நிற்கு மென்றறிக.

பதிபசு பாச மெனப்பகர் மூன்றில்
பதியினைப் போற்பசு பாச மநாதி
பதியினைச் சென்றணு காபசு பாசம்
பதியணு கிற்பசு பாச(ம்) நில்லாவே—திருமந்திரம்.

ஆலயத்திற் செய்யத்தகாத குற்றங்களாவன:—

(௧) ஆசாரமில்லாமலுங் கால்கழுவாமலும் போதல்.
(௨) எச்சிலுமிதல்; மூக்குநீர்சிந்தல்.
(௩) பொடிமுகத்தல்.
(௪) அபானவாயுவிடுதல்.
(௫) வெற்றிலை தின்னல்; போசனம்பண்ணல்.
(௬) ஆசனத்திருத்தல்; காலைநீட்டிக்கொண்டிருத்தல்.
(௭) சயனித்தல்.
(௮) மயிர்கோதிமுடித்தல்; தலைவிரிகோலமாயிருத்தல்.
(௯) சூதாடல்; விளையாடுதல்; சிரித்தல்.
(௧0) வீண்வார்த்தைபேசல்; சண்டையிடுதல்.
(௧௧) சிரசிலே வஸ்திரந் தரித்துக்கொள்ளுதல், தோளிலே உத்தரீய மிட்டுக்கொள்ளுதல், போர்த்துக் கொள்ளுதல்.
(௧௨) விக்கிரகத்தைத் தொடுதல்.
(௧௩) நிருமாலியத்தைக் கடத்தலும் மிதித்தலும்.
(௧௪) கொடிமரம் பலிபீடம் இடபம் விக்கிரகம் என்னு மிவற்றின் நிழலை மிதித்தல்.
(௧௫) சுவாமிக்கும் பலிப்பீடத்துக்கும் இடையே போதலும் இடையில் நின்று நமஸ்கரித்தலும்.
(௧௬) அபிடேககாலத்திலும் நிவேதன காலத்திலும் வணங்கல்.

(கஎ) எதிரில் நின்று வணங்கல்; பிற்பக்கத்தில் வணங்கல்.

(கஅ) திருவிளக்கு அவியக்கண்டவிடத்துத் தூண்டா தொழிதல்.

(கக) திருவிளக்கில்லாத பொழுது வணங்கல்.

(உ0) சுவாமி உற்சவக்கொள்ளும்போது மூலவைர வணங் கல்; சுவாமிமுன் ஒருவரை யொருவர் வணங்கல்

எ. ஆலயத்துட் புகத்தகாதவர்:—

(க) சனனமரண சௌசமுடையவர்.

(உ) கட்குடியர்.

(ங) கொலைவினைஞர்.

(ச) தொழுநோயாளர்.

(ரு) ஸ்நாநஞ்செய்யாதவர்.

(சு) அந்நியமதத்தினர்.

(எ) நெற்றியில் திருநீறு அல்லது திருமண் தரியாதவர்.

(அ) புலையர்.

[ஒருவன் மிகத்தாழ்ந்த குலத்திற் பிறந்தவனாயிருப் பினும் மேற்கூறிய குற்றங்களில் நீங்கியுள்ளானெனின் அவன் ஆலயத்துட் புகத்தக்கவனாவான். பறையர் குலத் திற்பிறந்தும் ஒழுக்கத்தினாலுயர்ந்து தில்லை மூவாயிரவ ராற் போற்றப்பட்டுச் சிவகதியடைந்த திருநாளைப்போவா ரென்னும் திருத்தொண்டரே இதற்குச் சான்றாவார். மேற் கூறிய குற்றங்களில் யாதாமொன்றன் பாற்படுவோன் உயர் குலத்திற் பிறந்தவனாயினும் ஆலயத்தினுட்புகத் தகாத வனேயாவான்.]

அகலிடத்தார் மெய்யை யண்டத்து வித்தைப்
புகலிடத்தெம் மெய்யைப் போதவிட் டானைப்
பகலிடத்தும் மிரவும் பணிந்தேத்தி
இகலிடத்தே யிரு ணீங்கிநின் றேனே. —திருமந்திரம்.

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

நெஞ்சந் தளிர்விடக் கண்ணீர் ததும்ப முகமலர
அஞ்செங் காதலங் கூப்பவட் டாங்க மடிபணிந்து
தஞ்சொன் மலரா லணியவல் லோர்கட்குத் தாழ்சடையான்
வஞ்சங் கடிந்து திருத்திவைத் தான்பெரு வானகமே

-பொன்வண்ணத்தந்தாதி-

திருமுறைப் பாராயண விதி.

திருமுறைகள் பன்னிருபாற்படுவன. அவற்றின் விவரம் பின்வருமாறு:—

க-திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம்—௱௩௰௭ பதிகங்கள்				
௨-	,,	,,	-௱௨௨	,,
௩-	,,	,,	-௱௨௫	,,
௪-திருநாவுக்கரசு நாயனார்		,,	-௱௰௪	,,
௫-	,,	,,	-௱	,,
௬-	,,	,,	-௯௯	,,
௭-சுந்தரமூர்த்திநாயனார்		,,	-௱	,,
௮-மாணிக்கவாசகர்		திருவாசகம்-௫௧		,,
		திருக்கோவையார்-௪௱		பாசுரங்கள்

௯- திருமாளிகைத்தேவர் முதலிய ஒன்பதின்மர் } திருவிசைப்பா-௨௮ பதிகங்கள்

சேந்தனார் திருப்பல்லாண்டு-௧ பதிகம்

௰-திருமூலநாயனார் திருமந்திரம்-௩௲ பாசுரங்கள்

௰௧-திருவாலவாயுடையார் திருமுகபபாசுரம்-௧

காரைக்காலம்மையார் முதலிய பதினொருவர் } பிரபந்தங்கள்-௩௯ பதிகங்கள்.

௰௨-சேக்கிழார்நாயனார் திருத்தொண்டர்புராணம் } -௪௨௮௬ பாசுரங்கள்.

திருமுறைகளை ஓதுவோர் ஸ்நாநஞ்செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரந்தரித்து, பசுவின் சாணத்தினால் மெழுகப்பட்டுக் காய்ந்ததும் நல்ல வெளிச்சமுள்ளதுமான ஓரிடத்தில் வடக்குமுகமாகவேனும் கிழக்குமுகமாகவேனும் சம்மணங்கூட்டி நிமிர்ந்துட்கார்ந்து திருநீற்றையும் உருத்திராக்கங்களையும் விதித்த முறையில் தரித்து, திருமுறைப் புத்தகங்களையும் விபூதிப் பெட்டியையும் எதிரில் ஒரு சிறு பீடத்தில் வைத்து, இருகரங்களையும் கூப்பி மார்பிலேனும் சிரத்திலேனும் பொருந்தவைத்துக்கொண்டு, முதலாவது விநாயகரையும் அதன்பின் சபாநாயகரையும் அதன்பின் சிவகாமசுந்தரியையும் அதன்பின் சுப்பிரமணியரையும் அதன்பின சமயகுரவரையும் திருத்தொண்டரையும் திருத்தொண்டர் சீர்பரவுவாரையும் சிந்தித்துத் துதித்து, பிறகு அடங்கன்முறையினின்றும் அகத்திய முனிவரால் ஆய்ந்தெடுக்கப்பட்டுள்ள திருப்பதிகங்கள் இருபத்தைந்தையும் ஓதி, பின்னர் கால அவகாசத்துக்குத் தக்கப்படி ஏனைய திருப்பதிகங்களில் தேர்ந்தெடுக்கப் பட்டவைகளை வரிசைக்கிரமத்தில் ஓதி முடித்தல்வேண்டும்.

மேற்கூறிய இருபத்தைந்து பதிகங்களையும் ஓத இயலாதவர்கள்

'தோடு', 'கூற்று', 'பித்தா', என்ற தொடக்கத்துக் குருவருட் பதிகத்தையும்.

'மந்திரம்' என்ற தொடக்கத்துத் திரு நீற்றுப் பதிகத்தையும்,

'துஞ்சலும்', 'காதலாகி', 'சொற்றுணை', மற்றுப்பற்று' என்றதொடக்கத்துத் திருவைந்தெழுத்துப் பதிகங்களையும்.

'காட்டூர்' என்றதொடக்கத்துக் கோயிற் றிருப்பதிகத்தையும்,

'ஒருரு', என்றதொடகத்து அரனுருவப் பதிகத்தையும், 'அந்தணாளன்' என்றதொடகத்துத் திருவடிப் பதிகத்தையும்,

'வேற்றாகி' என்றதொடக்கத்து அருச்சனைப் பதிகத்தையும்,

'வெயுறுதோளி' 'குலம்பலம்' 'தில்லை' என்ற தொடக்கத்துத் திருத்தொண்டப் பதிகங்களையும் ஓதின் அமையும்.

ஏனையவற்றினின்றும் தேர்ந்தெடுக்கப்பட்டவைகளில்,

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளியவற்றுள், 'நாளாய', 'கற்றாங்கெரி', 'என்னபுண்ணியம்', 'வாழ்க வந்தணர்', 'மருந்தவை', 'நல்லூர்ப்பெருமணம்' என்ற தொடக்கத்துப் பதிகங்களும்,

திருநாவுக்கரசுநாயனார் அருளிய பண்முறைத் திருப்பதிகங்களில் 'சொன்மாலை', 'காண்டலே' என்ற தொடக்கத்துப் பதிகங்களும், திருநேரிசையில் 'செஞ்சடை', 'பத்தனாய்', 'அங்கத்தை', 'வளைத்து' என்றதொடக்கத்துப் பாசுரங்களும், திருவிருத்தத்தில் 'கருவாய்', 'புழுவாய்', 'கோவாய்', 'வெம்மை', 'ஓதுவித்தாய்', 'தூமென்', 'மேலும்',

என்ற தொடக்கத்துப் பாசுரங்களும், திருக்குறுந்தொகையில் முதன்முற்றுப் பதிகங்களும், திருத்தாண்டகத்தில் 'அரியானை', 'நிலைபெறு', 'திருவே', 'அப்பனீ', 'அத்தா', 'எண்ணுகேன்', 'ஒருவனையும்' என்றதொடக்கத்துப் பாசுரங்களும்

சுந்தரமூர்த்தி நாயனார் அருளியவற்றுள் 'பொன்னார்', 'இத்தனை', 'வாழ்வாவது', 'தானெனை' என்ற தொடக்கத்துப் பதிகங்களும்,

திருவாசகத்தில் சிவபுராணமும், திருச்சதகமும், அடைக்கலப்பத்தும், அருட்பத்தும், பிடித்தபத்தும், பிரார்த்தனைப் பத்தும், திருப்புலம்பலும், திருப்படையாட்சியும், அச்சோப்பதிகமும், திருச்சிற்றம்பலக் கோவையாரில் முதன் முற்றுப்பாசுரங்களும்,

திருவிசைப்பாவில் முதன் முற்றுப்பதிகங்களும், திருப்பல்லாண்டிலும் திருமந்திரத்திலும் முதன் முற்றுப் பாசுரங்களும,

பதினோராந்திருமுறையில் திருவாலவாயுடையாரருளிய திருமுகப்பாசுரமும், திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகமும், திருநாவுக்கரசு தேவர் திரு ஏகாதசமாலையும்,

பன்னிரண்டாந்திருமுறையில் 'உலகெலாம்' என்னும் நடராசர் துதியும், தில்லைவாழந்தணர் புராணத்தின் தொடக்கத்துள்ள தோத்திரப் பாசுரங்களிரண்டும், பெரிய புராண முற்றுப் பாசுரமும் அவசியமாய் ஓதற்பாலன.

மேற்கூறியுள்ள பதிகங்களை முற்றிலும் ஓத அவகாசமில்லாதார் அவற்றுள் ஒவ்வொன்றன் முதன் முற்றுப் பாசுரங்களையேனும் முதற் பாசுரத்துடன் சேர்ந்தெடுக்கப்பட்ட பிறிதோர் பாசுரத்தையேனும் ஓதின் அமையும்.

ஒவ்வொரு பதிகத்தையும் ஓதத்துவக்கும்போதும் ஓதி முடித்தவுடனும் 'திருச்சிற்றம்பலம்' என்று உச்சசுரத்தில் மறவாதுரைத்தல்வேண்டும். ஒவ்வொரு திருமுறையின் இறுதியிலும் நெற்றியில் விபூதி தரித்தல் வேண்டும். இடையில் நிறுத்தவாவது வேறொன்றைபார்டவாவது பிறிதொரு காரியத்தைச் சிந்திக்கவாவது பேசவாவது செய்யவாவது கூடாது. மிகவும் விகாரமான சப்தத்தில் உரக்கக்கத்துதலும் மிகவுந் தாழ்ந்தொலித்தலுமின்றி நிதானமான இனியகுரலில் இசையுடன் பாடுதல் வேண்டும். மூக்கினால் ஒலித்தலாகாது. ஒரு பதிகத்தை அதற்குத்தக்கதோர் பண்ணில் ஆரம்பித்துக் கடைசிவரையில் அதேபண்ணில் பாடிமுடித்தல்வேண்டும். பாடும்போது வாயை அதிகமாய்த் திறத்தலும் வாய் கோணுதலும் பற்களைக்கட்டலும் பற்களைக்காட்டலும் அழுமுகங்காட்டலும் கண்கள் ஆடுதலும் தலை நடுங்குதலும் புருவங்கள் வளைதலும் மூச்சை அதிகமாகவாங்குதலும் விடுதலும் தொண்டைவிம்முதலும் உடம்பு ஆடுதலுமின்றி எழுத்துக் குற்றமும் சொற்குற்றமும் பொருட்குற்றமும் வாராமற் காத்துக்கொள்ளவேண்டும்.

[ரகரத்தை றகரமாகவும், றகரத்தை ரகரமாகவும், னகரத்தை ணகரமாகவும், ணகரத்தை னகரமாகவும், ழகரத்தை ளகரமாகவும், ளகரத்தை ழகரமாகவும், உச்சரித்தலும், ஒற்றுகள் உள்ளவிடங்களில் அவற்றைவிலக்கியும் இல்லாதவிடங்களில் அவற்றை வருவித்தும் உரைத்தலும் இவை முதலியன எழுத்துக் குற்றங்களாம். உள்ளதோர் சொல்லை விட்டும் இல்லதோர் சொல்லை இடையிற் சேர்த்தும் உள்ளதோர் சொல்லை வேறொன்றாகத் திரித்தும், எதுகை நோக்கி ஒரு சொல்லைச் சந்தர்ப்பத்துக்குத் தக்கவாறு நீட்

டியும் திரித்தும் குறைத்தும் உரைக்கவேண்டிய விடத்து அம்முறையிலுரையாது பிறழ்ந்தும் கூறுதல் சொற்குற்றமாம். சந்தி பிரித்துப் பாடவேண்டிய விடங்களில் அவ்வாறு பிரிக்காமலும் பிரிக்குங்கால் செவ்வனே பிரிக்காமலும் அதனால் பொருள் வழுவுறவுச்சரித்தல் பொருட்குற்றமாம்.]

திருமுறைகளைத் தலைப்பாகை கட்டிக்கொண்டும் பொடிப்போட்டுக்கொண்டும் மீசையை முறுக்குதல் கடித்தல் மெல்லல் தடவுதல் முதலியன செய்து கொண்டும் வெற்றிலை போட்டுக்கொண்டும் போர்த்துக்கொண்டும் யோகவஸ்திரந் தரித்துக்கொண்டும் தூணிலேனும் சுவரிலேனும திண்டிலேனும் சாய்ந்துகொண்டும் அரையில் ஒற்றைவஸ்திரந் தரித்துக்கொண்டும் கால்களை நீட்டிக்கொண்டுட் ஒன்றின்மேலொன்றாய் அட்டணையிட்டுக்கொண்டும் உயர்ந்த தோராசனத்தில் உட்கார்ந்துகொண்டும் விரிப்பிலுட்கார்ந்து கொண்டும் பாதரக்ஷை யிட்டுக்கொண்டும் ஓதலும் கேட்டலும் ஆகாவாம். அக்காலத்தில் சிரித்தலும் ஒருவருடன் பேசலுங் கூடா. திருமுறை யோதுங்கால் தாளமும் சுதியும் உபயோகித்தல் உசிதம். ஏனைய மிருதங்கமுதலியவை அனுசிதம். நாடகமாடுவோரும் வேசியரும் திருமுறைகளையோதுதற்கு யோக்கியராகார். அவர்கள் பாடுவதைக்கேட்பது மிகக்கொடிய தோர் பாவமாகும்

கூறுமி னீரனேச் செய்மின் குற்றவேல் குனிர்மின் கண்கள்
தேறுமின் சித்தந் தெளிமின் சிவனைச் சேறுமின் செற்றம்
ஆறுமின் வேட்கை யறுமி னவல மிவை நெறியாய்
ஏறுமின் வானத் திருமின் விருந்தா யிமையவர்க்கே.

[பொன்வண்ணத்தந்தாதி].

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

வளைபயில் கீழ்கட னின்றிட மேல்கடல் வானுகத்தின்
துளைவழி நேர்கழி கோத்தெனத் தில்லைத்தொல் லோன்கயிலைக்
கிளைவயி னீக்கியிக் கெண்டையங் கண்ணியைக் கொண்டுதந்த
விளைவையல் லால்விய வேனய வேன்றெய்வ மிக்கனவே

—திருச்சிற்றம்பலக்கோவையார்—

விவாகம்.

விவாகத்தைப்பற்றி இந்நூலின் முதற் றொகுதியின் ௨௫-௨௬-ம் பகுதிகளிற் சில மாற்றங்கள் கூறப்பட்டுள. அம்மாற்றங்களின் சார்பாய் ஆடவரும் பெண்டிரும் அவசியமாய்த் தெரிந்துகொள்ளவேண்டிய விடயங்கள் வேறு சில இவண் கூறப்படும்.

விவாகமென்பது கலியாணமெனப்படும். 'கலி' என்னும் பதம் 'கேடு' எனவும் 'ஆணம்' என்னும் பதம் 'அன்பு' எனவும் பொருள்படும். ஆகவே 'கலியாணம்' என்னும் பதத்திற்கு, கேட்டினையகற்றி அன்பினைவிளைவிக்கும் அரியதோர் செயலெனப் பொருள் கோடலாகும். அஃதெவ்வாறெனின், அப்புண்ணியச் செயலானது பண்டைத்தீவினையின் பயன்றுய்யான் புத்தென்னும் புன்னரகிற் புக்கழுந்தும் புருடரை அந்நிரயத்தினின்றும் அகற்றி அப்புருடர் அன்பின் அருமையை அறிந்து அதனை அனைத்துயிரிடத்தும் அப்பியசித்து அதனால் அன்புருவாய அத்தனது அருளை அடைதற்கு அருகராகுதற்குக் காரணமாகிற சற்புத்திரரைப் பெறுதற்குச் சாதனமாதல்பற்றி யென்க. இதனால் விவாகமானது மிகவும் மேன்மையுள்ள நிலைமையாயிருத்தலை அறிகிறோம். ஆகையால் இதை அற்பமாய் எண்ணி, யோசனையில்லாமல், புத்தியில்லாத மிருகங்களைப்போல, கேவலம் தேக இச்சைகளை நிறைவேற்ற வேண்டுமென்று விவாகம் செய்யாமல், விவாகம் நியமிக்கப்பட்ட முகாந்தரங்களை எண்ணி, பயபக்தியோடும் விவேகத்தோடும் தகுந்த யோசனையோடும் தெளிந்த புத்தியோடும் ஆண்டவனுக்கு அஞ்சி விவாகம் செய்யவேண்டும். அந்த முகாந்திரங்களாவன:

(க) மேற்கூறிய சற்புத்திரரைப்பெற்று, அவருக் கேற்ற பயபக்தியில் வளர்த்தல்.

(உ) விரக்தராயிருக்க வரம் பெறுதவர்கள் வியபிசாரத் துக்கு விலகிப் பாவத்துக்குத் தப்பிக்கொள்ளுதல்.

(ங) சுகத்திலும் துக்கத்திலும் ஸ்திரீ புருஷர் ஒரு வரால் ஒருவர் பெறவேண்டிய சிநேகத்தையும் சகாயத் தையும் ஆறுதலையும் அடைதல்.

(ச) பிரமசாரி, வானப்பிரத்தன், சந்நியாசி என்னும் மூன்று ஆசிரமத்தருக்கும் அவர் செல்லும் நல்லொழுக்க நெறிக்கண் நிலைபெறற் துணையாய் நிற்றல்

(ரு) ஆதாரமானவராலே விடப்பட்டவர்க்குப் பாவ மொழிய அவர்க்கு ஆதாரமாய் நின்று வேண்டுவனசெய் தலும் வறுமைப்பட்டவர்க்கு உண்டிமுதலானவை கொடுத் தலும், இறந்தவர்க்கு நீர்க்கடன் முதலானவை செய்து நல்ல கதியை அடைவித்தலும்.

(சா) பிதிரர்க்கும்* தெய்வத்திற்கும், விருந்தினர்க்கும்† சுற்றத்தார்க்கும், தனக்கும்‡ செய்யும அறநெறியை வழுவா மற் செய்தல்.

விவாகஞ் செய்து கொள்ள விரும்பும் விவேகி மேலே கூறப்பட்டுள்ள சற்கருமங்களைத் தன்னுடன் கலந்து சோர்வின்றி நிகழ்த்தக்கூடிய * நற்குண $ நற்செய்கை களையுடைய ஒரு பெண்ணை அந்நற்குண நற செய்கை

---

* பிதிரராவார் படைப்புக்காலத்துப் பிரமனாற் படைக்கப்பட்ட தோர் கடவுட்சாதி. அன்னோர் இறந்து போனவர்களுடைய புத்திர ராதியரால் செய்யப்படுங் கருமங்களினாலே திருப்தி யடைந்து இறந்தவர்க்கும் அவரினத்தார்க்கும் நேர்ந்த துர்கதியை நீக்கவும் நற்கதியை அளிக்கவும் வல்லவர்.

† விருந்தினர்—ரு௦ம் பக்கம் பார்க்க

‡ எல்லா அறங்களையும் தான் செவ்வையாயிருந்து கொண்டு செய்யவேண்டுதலின் தன்னைக்காப்பாற்றுதல் ஏனைய அறங்களுக் கெல்லாம் சிறந்ததாகும்.

§ நற்குணங்களாவன துறந்தவரையுபசரித்தலும், விருந்தோம் பலும் வறியாரிடத்தே யருளுடைமையும் முதலானவையாம்

$ நற்செய்கைகளாவன வாழ்வகைக்கு வேண்டும் பொருள்களை நிந்து காப்பாற்றிவைத்தலும், உண்டிசமைத்தலும், உபகாரம் செய் தலும் முதலானவையாம்.

களையுடைய தாய் தந்தையரிடத்தினின்றும் தேர்ந்து கொள்ளல் வேண்டும், "தாயைப் போலப் பிள்ளை; நூலைப்போலச் சீலை" என்பது ஆன்றோர் அநுபவித்துரைத்த பழமொழியாதலால் நற்குண நற்செய்கைகளையுடைய தாய்தந்தையர் பெற்றபெண் நற்குண நற்செய்கைகள் வாய்ந்தவளாகவே இருப்பாளென்று துணியலாம். அவ்விதஞ் செய்யாது கேவலம் பொன்னுக்காவது அழகுக்காவது ஆசைப்பட்டுக் கொள்ளப்படும் நற்குண நற்செய்கைகளில்லாத பெண்ணினுடன் கூடிவாழும் வாழ்க்கை பேயுடன் கூடிவாழும் வாழ்க்கையேயாகும். இதனை அனைவரும் அநுபவத்தால அறிந்திருப்பர். விவாகஞ்செய்து கொள்ள விரும்பும் விவேகி வரதட்சணையென்னும் பேயின் கையில் அகப்படாது தன்னைக்காத்துக்கொள்ளக்கடவன். ஏனெனில் அப்பேய் அவனது ஆண்டன்மையை அகற்றி அடிமைப் படுத்தி அல்லலுக்கே ஆளாக்கி அனியாயமாய் அசித்து விடுதலினென்க. இதனையும் அனைவரும் அனுபவத்தில் அறிந்திருப்பர்.

விவாக காலத்தில் உறவினரை உபசரித்தலும் அதிதிகளை அன்னமும் ஆடையும் அளித்து ஆதரித்தலும் ஆகிய இவ்விரண்டு காரியங்களுமே விசேடமாய்ச் செய்தற்பாலன. இவற்றினும் முன்னையதைவிடப் பின்னையது மிகச் சிறந்ததாதலின் இப்புண்ணியகாரியத்தை அதிசிரத்தையுடன் செய்தல் வேண்டும். அதிதிகளை உபசரிக்கும் உபசாரத்தை அவர்களிருதயத்திற் கோயில் கொண்டருளும் ஏழைபங்காளனாகிய ஆண்டவன் அன்புடன் ஏற்று அவ்வதிதிகளின் வாயிலாக மணமக்களின் மேலே கருணை மழை பொழிந்து ஆசீர்வதிப்பனாதலின் அவ்வுபசாரத்தின் அருமையை இனைத்தென இயம்புதல் இங்கெவர்க்கும் இயலாது.

தண்டாறு சிந்தைத் தபோதனர் தாமகிழ்ந்
துண்டது மூன்று புவனமு முண்டது
கொண்டது மூன்று புவனமுங் கொண்டதென்
றெண்டிசை நந்தி யெடுத்துரைத் தானே. —திருமந்திரம்.

மாத்திரை யொன்றினின் மன்னி யமர்ந்துறை
ஆதனுக் கீந்த வரும்பொரு ளானவை

மூர்த்திகண் மூவருக்கு மூவேழ் குரவர்க்கும்
தீர்த்தம தாவது தேர்ந்துகொள் வீரே. —திருமந்திரம்

இவ்வாறு அதிதிகளை ஆதரிக்கும் ஆற்றல் அநேக சன்மங்களில் அருந்தவத்தினை ஆற்றியவர்க்கே ஆகுமென்றறிக.

தவமுந் தவமுடையார்க் காகு மவமதனை
அஃதிலார் மேற்கொள்வது —திருக்குறள்.

அன்றியும், நல்லாற்றினில் ஈட்டப்பட்ட பொருளே அத்தகைய நற்கருமங்களுக்கு உதவுமென்பது ஒருதலை. அன்றி, தவமிலார் தீயவழியில் ஈட்டிய பொருளோ வேசியர் ஆட்டிலும், தாசியர் பாட்டிலும், வாணவேட்டிலும், ஆடையணி மாட்டிலும் தகவிலார் கூட்டிலும் அவலமாய் அழிவுறும்.

விவாகஞ்செய்து கொள்ளும் மணமகன் விவாக முகூர்த்த காலத்துக்குமுன் அதிசீக்கிரமாயெழுந்து நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு ஆலயஞ்சென்று ஆண்டவனைத் தொழுதல் வேண்டும். மண முடிந்தவுடன் மீட்டும் மணமகளுடன் ஆலயஞ் சென்று தொழுது திரும்ப வேண்டும். ஆலயத்துக்கு நடந்து செல்லுதலே உத்தமம். வாகனமேறிச் செல்லுதல் மத்திமம். இவ்வழக்கம் முற்காலத்தில் ஒவ்வொரு விவாககிருகத்திலும் ஒழுங்காய் நடைபெற்று வந்தது. இச்செலவு ஓமச் சடங்கு முடிந்தவுடன் நிகழ்வதால் ஓமப் பல்லக்குப் பட்டினப் பிரவேசமென வழங்கப்பட்டு வந்தது. இந்த அரிய செய்கையானது காலக்கொடுமையால் இப்போது கைவிடப்பட்டது.

ஆனந்த வெள்ளத் தழுந்துமொ ராருயி ரீருருக்கொண்
டானந்த வெள்ளத் திடைத்திளைத் தாலொக்கு மம்பலஞ்சேர்
ஆனந்த வெள்ளத் தறைகழ லோனருள் பெற்றவரின்
ஆனந்த வெள்ளம் வற்றாது முற்றாதிவ் வணிநலமே.

—திருச்சிற்றம்பலக் கோவையார்.

திருச்சிற்றம்பலம்.